கடன் சுருக்கப் பட்டியல்

இந்தக் கடன் ஒப்பந்தத்தை (“ஒப்பந்தம்”) _____________ என்ற இடத்தில் _________ அன்று _____________, ஆம் மாதம் 20____ ஆம் வருடம் செய்து கொண்டோம்

தரப்பினர்

கடன் வாங்கியவர்(களாகிய), இவர்களது விவரங்களை இந்த ஒப்பத்தத்திற்குப் பின்னிணைப்பாகச் சேர்த்துள்ளக் கடன் சுருக்கப் பட்டியலில் இன்னும் குறிப்பாக விவரித்துச் சொல்லியுள்ளோம் அதோடு, இடப்பொருளுக்கு அவ்விதமாக அவசியமாகிற இடங்களில், இதில், அதில் பெயர் குறிப்பிட்டுள்ள கூட்டாகச் சேர்ந்து-கடன் வாங்கியவர்(கள்) அடங்குவர் அதோடு இனிமேல் கூட்டாகச் சேர்ந்து கடன் வாங்கியவர்(க)ள் ஒன்றுக்கும் மேற்பட்டவர்களாக இருந்தால், அவர்களைக் “கடன் வாங்கியவர்(கள்)” என்று குறிப்பிடுவோம் (இந்தச் சொல்லில், அதிலுள்ள இடப்பொருள் அல்லது அர்த்தத்திற்கு எதிர்ப்பானதாக இருந்தால் ஒழிய, கடன் வாங்குபவர்கள் தனிநபராக இருக்கிற இடத்தில், அவரது வாரிசுகள், அதிகாரிகள் மற்றும் நிர்வாகிகள் அடங்குவர்; கடன் வாங்குபவர்(கள்) உரிமையாளர் நிறுவனமாக இருக்கிற இடத்தில், தனிப்பட்ட உரிமையாளராக யாருடைய பெயர் இருக்கிறதோ அவரும், அவரது வாரிசுகள், அதிகாரிகள் மற்றும் நிர்வாகிகளும், சட்டப்பூர்வப் பிரதிநிதிகளும், சட்டப்பூர்வ நியமனதாரர்களும் அடங்குவர்; கடன் வாங்குபவர்கள் கூட்டு-நிறுவனமாக இருக்கிற பட்சத்தில், அந்தக் கூட்டு-நிறுவனத்தின் கூட்டாளிகள் அல்லது அந்த நேரத்தில் கூட்டாளிகளாக இருப்பவர்கள், அவர்களில் உயிர் பிழைத்திருப்பவர்கள், அவர்களது வாரிசுதாரர்கள், அதிகாரிகள் மற்றும் நிர்வாகிகள்; கடன் வாங்குபவர்கள் இந்து பிரிவுபடாத குடும்பத்தின் தலைவராக இருக்கிற இடத்தில், அந்த நேரத்தில் அந்த இந்து பிரிவுபடாத குடும்பத்தின் உறுப்பினர்களாக இருப்பவர்கள், அவர்களது உரிய வாரிசுதாரர்கள், அதிகாரிகள் மற்றும் நிர்வாகிகள் மற்றும் வாரிசு நியமனம் பெற்றவர்கள்; கடன் வாங்குபவர்கள் ஓர் நிறுவனமாக இருக்கிற இடத்தில், அடுத்து பதவிக்கு வருபவர்கள் மற்றும் நியமனம் பெற்றவர்கள்; கடன் வாங்குபவர்கள் ஸ்தாபிதம் பெற்ற அமைப்பாக இருக்கிற இடத்தில், அந்த அமைப்பின் அனைத்து உறுப்பினர்களும், அவர்களை அடுத்து உரியபடி பதவிக்கு வருபவர்களும்; கடன் வாங்குபவர்கள் ஒரு சங்கமாக இருக்கிற இடத்தில், நிர்வாகக் குழுவும், அந்த நிர்வாகக் குழுவில் அடுத்தடுத்து பதவிக்கு வருபவர்களும், தேர்ந்தெடுக்கிற, நியமிக்கிற அல்லது சேர்த்துத் தெரிவு செய்கிற புதிய உறுப்பினர்கள் எவரும், கடன் வாங்குபவர்கள் ஒரு அறக்கட்டளையாக இருக்கிற பட்சத்தில், அறங்காவலர்களும், அறக்கட்டளையில் அடுத்தடுத்து பதவிக்கு வருபவர்களும், கடன் வாங்குபவர்கள் லிமிட்டட் லையபிலிட்டி கூட்டு நிறுவனமாக இருக்கிற இடத்தில், அந்த லிமிட்டட் லையபிலிட்டி கூட்டு நிறுவனத்தின் கூட்டாளிகளும், அந்த நேரத்தில் கூட்டாளிகளாக இருப்பவர்களும், அவர்களது வாரிசுதாரர்கள், அதிகாரிகள் மற்றும் நிர்வாகிகளும், அடுத்தடுத்துப் பதவிக்கு வருபவர்களும், அந்நிறுவனத்தின் நியமனம் பெறுபவர்களும்) ஒரு தரப்பிலும்

மற்றும்

கம்பெனிகள் சட்டம் 1956-ன் கீழ் பதிவு பெற்றுள்ளதும், தனது பதிவு அலுவலகத்தை, மெக் டவர்ஸ், மூன்றாம் தளம், பழைய எண். 307, புதிய எண். 165, பூந்தமல்லி ஹை ரோடு, மதுரவாயல், சென்னை-600095, தமிழ்நாடு என்ற முகவரியில் கொண்டதும், கடன் சுருக்கப் பட்டியலில் சொல்லியுள்ள இடத்திலுள்ள கிளை அலுவலகம் ஒன்றைக் கொண்டதும் இங்கே *“FICCL”* என்று சொல்கிறதுமான (இந்தச் சொல்லில், இடப்பொருளுக்கு எதிர்ப்பானதாக இருந்தால் ஒழிய, அதன் அடுத்தடுத்து பதவிக்கு வருபவர்கள் மற்றும் நியமனம் பெறுபவர்கள் அடங்குவர்) நிறுவனமான, ஃபுல்லெர்ட்டான் இந்தியா கிரெடிட் கம்பெனி லிமிட்டட், மறுதரப்பிலும்.

இதன்மூலம்:

i) கடன் வாங்கியவர்(கள்), சொத்து வாங்குவதற்காக / கட்டுமானம் செய்வதற்காக / மேம்பாடு செய்வதற்காக அதோடு கடன் சுருக்கப் பட்டியலில் இன்னும் குறிப்பாகக் குறிப்பிட்டுள்ள நோக்கத்திற்காக, கடன் வாங்கியவர்(களு)க்குக் கடன் ஒன்றை முன்பணமாகத் தருமாறு FICCL நிறுவனத்திடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள்;

ii) கடன்தாரர்கள் வழங்கியுள்ள பிரதிநிதித்துவம் மற்றும் தகவல்களை நம்பி, FICCL நிறுவனம், இனிமேல் தோன்றும் விதிகள் மற்றும் நிபந்தனைகளில் கடன் வாங்குபவர்(களுக்கு) கடன் வழங்க ஒப்புக் கொண்டிருக்கிறது.

FICCL நிறுவனத்திற்காக

| கடன் வாங்குபவர் | கூட்டாக-கடன் வாங்குபவர் | அங்கீகாரம்பெற்ற கையொப்பதாரர் |
|---|---|---|

*இந்த ஒப்பந்தமே சாட்சியாக அமைகிறது அதோடு இதன் மூலமாக பின்வருவதன்படி ஒப்புக் கொண்டு பிரகடனம் செய்கிறோம்:*

*சட்டப்பிரிவு **1***

*வரையறைகள்*

*''ஒப்பந்தம்'' என்பதன் பொருள், இந்தக் கடன் , இத்தோடு இணைத்துள்ள கட்டணங்கள் கடன் சுருக்கப் பட்டியல் மற்றும் இணைப்புப் பட்டியல்கள் எதுவும், பணம் திருப்பிச் செலுத்தும் பட்டியல்கள், இந்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக அமைகிறபடி இப்போது அல்லது இனிமேல் இணைக்கிற பின்னிணைப்பு மற்றும் பின்னிணைப்பு எதுவும், சாட்சி ஆவணங்கள் அல்லது இந்த ஒப்பந்தத்தோடு, இப்போதோ அல்லது இதற்குப் பிறகோ, அவ்வப்போது இணைக்கிற மற்ற சேர்க்கை ஆகியவற்றையே குறிக்கிறது.*

"விண்ணப்பம்" என்பது, கடன்தாரர்கள், FICCL நிறுவனத்திடமிருந்து சொத்தைக் கையகப்படுத்துவதற்காக / கட்டுமானம் செய்வதற்காக கடன் வசதியைப் பெறும் நோக்கத்திற்காகச் சமர்ப்பிக்கிற, ஆதார ஆவணங்களோடு சேர்ந்த கடன் விண்ணப்பம் என்றே பொருளாகிறது.

*"**கட்டுமானம் அல்லது மேம்பாடு**" இது, கட்டுமானம், மாற்றியமைத்தல், புதுப்பித்தல், பராமரித்தல் அல்லது சொத்தினைப் பேணிக்காத்து, பராமரித்து, உபயோகிப்பதற்கான எந்தச் செயலுமேயாகும்.*

*"**தாமதமாகப் பணம் செலுத்துவதற்கான வட்டி**" என்பது, சம மாதத் தவணையை (EMI) அல்லது PEMII -ஐச் செலுத்த வேண்டிய தேதிக்கு அப்பாலும் பணம் செலுத்தத் தாமதிப்பதற்கு மதிப்பிடுகிற கட்டணங்கள் என்றே பொருளாகிறது.*

*''எலெக்ட்ரானிக் கிளியரிங் செர்வீசஸ்'' (டெபிட் கிளியரிங்) இனிமேல் ''**ECS**'' என்று குறிப்பிடுகிறோம் என்பதன் பொருள், இந்திய ரிசர்வ் வங்கி அறிவிக்கிற 'டெபிட் கிளியரிங் சேவைகள்' ஆகும், EMI-களைச் செலுத்துவதற்காக, ''கடன் சுருக்கப் பட்டியலில்'' இன்னும் குறிப்பாக அமைத்துக் கொடுத்துள்ளபடி, இதில் பங்கேற்பதற்கு, கடன்தாரர்கள் எழுத்துப்பூர்வமாக ஒப்புதலளித்திருக்கிறார்கள் என்பதேயாகும்.*

*"**சம மாதத் தவணைகள்" ("EMI")** என்பதன் பொருள், கடன் வாங்குபவர்(கள்) ஒவ்வொரு மாதமும் FICCL நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய வட்டி உள்ளடக்கிய தொகை அல்லது அந்தந்த நிலைக்குத் தக்கபடி, அசல் மற்றும் வட்டி உள்ளடக்கிய தொகையாகும், அதோடு இது கடன் சுருக்கப் பட்டியலில் அமைத்துள்ளபடியானது என்பதேயாகும்.*

*"**வசதி**" என்பதன் பொருள், கடன் வாங்குபவர்(களுக்கு) வழங்குகிற கடன் வசதி என்றே பொருளாகிறது, இது அதன் தன்மையில் ஏற்கெனவே இருக்கிற கடனை அதிகரிப்பதாகவோ அல்லது தனிநபர்க் கடன் அல்லது கடன் வாங்குபவர்(களின்) வியாபாரம் / தொழில் நோக்கங்களுக்காக அதிகரிப்போடு சேர்த்து ஏற்கெனவே இருக்கிற கடனின் மீது வாங்குவதாகவோ இருக்கிறது .*

*"**மாறும் வட்டி விகிதம்" ("FIR")** என்பதன் பொருள், FICCL நிறுவனம் தனது முதன்மைக் கடன் கொடுக்கும் வட்டி விகிதமென அவ்வப்போது அறிவித்து, கால அளவோடு சேர்த்து FICCL நிறுவனம் பொருத்துகிற, கடன் வாங்கியவர்(களின்) கடனில், இந்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, FICCL நிறுவனம் முடிவு செய்கிறபடியான, வட்டி விகிதம் என்பதேயாகும்.*

*"**FIR விதிப்புத் தேதி**" என்பதன் பொருள், இந்த ஒப்பந்தத்தின் விதிகளின் பேரில் கடன் வாங்கியவர்(களின்) கடனில் FICCL நிறுவனம் FIR விதிக்கிற தேதி என்பதேயாகும்.*

*"**வட்டி**" என்பதன் பொருள், அந்தந்த நிலைக்குத் தக்கபடி, நிலையான வட்டி விகிதம் அல்லது மாறும் வட்டி விகிதம் (''FIR'') என்பதேயாகும்.*

*"**கடன்**" என்பதன் பொருள், கடன் சுருக்கப் பட்டியலில் சொல்லியுள்ள, எந்தத் தொகை வரை FICCL நிறுவனம் கடன் வாங்கியவர்(களு)க்குக் கடன் கொடுத்து, முன்தொகை தரலாமோ அந்தக் கடனின் அசல் தொகை என்பதேயாகும், அதோடு இதில், இடப்பொருளுக்கு அவசியமாகிற இடத்தில், அசல் தொகை, வட்டி மற்றும் அவ்வப்போது கடன் வாங்கியவர்(கள்) செலுத்த வேண்டியுள்ள தொகை உள்ளிட்ட நிலுவையிலுள்ள கடன் தொகை அடங்குகிறது.*

*"**முன் விகிதமாக்கிய மாதாந்திரத் தவணை வட்டி" ("PEMII")** என்பதன் பொருள், கடன் சுருக்கப் பட்டியலில் சுட்டிக்காட்டியுள்ள வட்டி விகிதத்தில், கடன் மீது, கடன் வழங்கிய தேதியிலிருந்து/கடனுக்குரிய தேதியிலிருந்து, மாதந்திரத் தவணை துவங்கிய தேதி வரை, கடன்தாரர் செலுத்த வேண்டியுள்ள வட்டித் தொகை என்பதேயாகும்.*

"சொத்து' என்பதன் பொருள், கடன் சுருக்கப் பட்டியலில் விவரித்துள்ள, இந்தக் கடன் ஒப்பந்தத்தின் கீழ் நிறுவனம் நிதியுதவியளிக்கப் பெற்று, கையகப்படுத்துகிற / கட்டுமானம் செய்கிற / மேம்பாடு செய்கிற அசையாச் சொத்து என்பதேயாகும்.

*"**திருப்பிச் செலுத்துதல்**" என்பதன் பொருள், கடன் கணக்கில் வழங்கியுள்ளபடி, கடனின் அசல் தொகையைத் திருப்பிச் செலுத்துவதும், வட்டி மற்றும் கடன் கணக்கின் கீழுள்ள மற்ற நிலுவைத் தொகைகளைச் செலுத்துவதுமாகும்.*

*"**சில்லரை வணிக முதன்மைக் கடன் கொடுக்கும் விகிதம்**" அல்லது "**RPLR**" என்பதன் பொருள், FICCL நிறுவனம் தனது முதன்மைக் கடன் கொடுக்கும் விகிதம் என்பதாக அவ்வப்போது அறிவிக்கிற வட்டி விகிதமேயாகும்.*

*"**அனுமதிக் கடிதம்**" என்பதன் பொருள், கடனை அனுமதிப்பதற்காகக் கடன் வாங்கியவர்(களுக்கு) FICCL நிறுவனம் அனுப்பி வைக்கிற கடிதம் என்பதேயாகும், அது குறித்த தேதியை பட்டியலில் குறிப்பிடுகிறார்கள்.*

*"**பட்டியல்**" என்பதன் பொருள், கடன் சம்பந்தமாக இருந்து, இவ்வொப்பந்தத்தின் உள்ளான அங்கமாக அமைகிற 'கடன் சுருக்கப் பட்டியல்', கடனைத் திருப்பிச் செலுத்தும் திட்டம் அல்லது இப்போது அல்லது இதற்குப் பிறகு இந்த ஒப்பந்தத்தோடு இணைக்கிற மற்ற பட்டியல்கள் என்றே பொருளாகிறது.*

*"**ஸ்டேண்டிங் இன்ஸ்ட்ரக்‌ஷன்ஸ்" ("SI")** என்பதன் பொருள், கடன் வாங்குபவர்கள், கடன் வாங்குபவர்களின் வங்கியில் வைத்துள்ள கணக்கில், FICCL நிறுவனத்திற்குக் கடனைத் திருப்பிச் செலுத்த, இன்னும் அதிகக் குறிப்பாக, கடன் சுருக்கப் பட்டியலில் அமைத்துக் கொடுத்துள்ளபடி பணம் கொடுப்பதற்காக, EMI-களுக்குச் சமமான தொகையைக் கழித்துக் கொள்ளுமாறு சொல்லி, அவர்களது வங்கிக்கு வழங்குகிற எழுத்துப்பூர்வமான அறிவுறுத்தல்களாகும்.*
*பிரிவுத் தலைப்புகள், பார்த்துக் கொள்ள எளிதாக இருக்கும் வகையிலானவையாகும் அதோடு இந்த ஒப்பந்தத்தைக் கட்டமைத்ததன் ஒரு பகுதியாக அமையாது. இந்த ஒப்பந்தத்தில், ஒருமை என்பதில் பன்மையும் அடங்குகிறது அதே போல பன்மையில் ஒருமை அடங்குகிறது, ஒரு பாலினத்தைக் குறிக்கும் வார்த்தைகள், மற்ற பாலினங்களையும் உள்ளடக்கும். சட்டப்பூர்வமான ஷரத்து ஒன்றுக்கான இந்த ஒப்பந்தத்தில் உள்ள குறிப்புகளில், எந்தச் சட்டப்பூர்வமான திருத்தங்களும், அதில் செய்கிற புதிய சட்டத்தை உருவாக்குவதும் அடங்கும்.*

*சட்டப்பிரிவு **2***

*கடன் தொகை மற்றும் வட்டி*

*2.1 கடன் தொகை:*

*FICCL, கடன் வாங்குபவர்(களி)ன் வேண்டுகோளுக்கு இணங்க, கடன் சுருக்கப் பட்டியலில் அமைத்துள்ள தொகைக்கு அதிகமாகாததோர் கடன் தொகையை, இங்கே அமைத்துக் கொடுத்துள்ள நிபந்தனைகள், விதிகள், மற்றும் உடன்படிக்கைகளின் அடிப்படையிலும், அவற்றுக்கு உட்பட்டும், வாங்குபவர்(களு)க்கு கடன் கொடுக்க ஒப்புக் கொள்கிறது, அதோடு கடன் வாங்குபவர்(கள்) FICCL நிறுவனத்திடமிருந்து கடன் பெற ஒப்புக் கொள்கிறார்(கள்).*

*2.2* ***வட்டி:***

*(a)* *கடன் முன்தொகையாகப் பெற்ற அசலிலும்,நிலுவைத் தொகையிலும், கடன் சுருக்கப் பட்டியலிலும் (பொருந்துகிற வட்டி வரி தவிர்த்து) குறிப்பிட்டுள்ளபடியே கடன் வாங்குபவர்(கள்) வட்டி செலுத்துவார்கள். கடனுக்கான வட்டியையும், மற்ற கட்டணங்களையும், ஓர் ஆண்டில் முன்னூற்று அறுபத்து ஐந்து (365) நாட்கள் இருக்கிற அடிப்படையிலேயே கணக்கிடுவோம். கடனுக்கான வட்டியை, உள்ளபடியான நிலுவையிலுள்ள அசல் மீதத் தொகையில் மாதாந்திர எச்சத் தொகைகளுக்கு அன்றாட மீத நிலுவைத்தொகை அடிப்படையில் கணக்கிடுவோம். கடனுக்கான வட்டி, கடனைக் கொடுத்த / கடன் காசோலையைக் கொடுத்த தேதியிலிருந்து, கடன் வாங்கியவர்(களின்) அல்லது அவரது வங்கியின் கைக்கு வந்து சேர, காசோலையை வசூலிக்க, காசோலைக்கான பணம் கிடைக்க ஆகும் இடைப்பட்ட காலத்தைப் பொருட்படுத்தாமல், துல்லியமாக ஆரம்பித்துவிடும்.*

*(b)* *நிலையான வட்டி வீதம்:* *கடன் வாங்குபவர்(கள்) நிலையான வட்டி விகிதமே போதும் என தெரிவு செய்கிற நிகழ்வில், இந்தக் கடன் ஒப்பந்தத்தை நிறைவேற்றும் தேதியில் உள்ளபடி, கடனுக்குப் பொருந்துகிற வட்டி விகிதத்தை கடன் சுருக்கப் பட்டியலில் குறிப்பிட்டுள்ளோம். கடனின் ஆரம்பத்தில் வட்டி விகிதம் நிலையானதாக இருக்கிற போதிலும், பணச்சந்தை நிலைமைகளில் விதிவிலக்கான மற்றும் அசாதாரண மாற்றங்கள் ஏற்படுவதன் கீழ், FICCL நிறுவனத்தின் தனிப்பட்ட விருப்புரிமையின் பேரில் இது மேல்நோக்கிய திசையில் அல்லது கீழ் நோக்கிய திசையில் மாற்றுவதற்கு / திருத்துவதற்கு உட்பட்டதாகும்.*

*(c)* *மாறும் வட்டி விகிதம்* ***("FIR"):*** *கடன் வாங்குபவர்(கள்) FIR விகிதமே போதும் என தெரிவு செய்கிற நிகழ்வில், இந்தக் கடன் ஒப்பந்தத்திற்குப் பொருந்துகிற வட்டி விகிதத்தை FICCL நிறுவன சில்லரை வணிக முதன்மைக் கடன்கொடுக்கும் விகிதத்தோடு (RPLR) இணைத்து இடுவோம். வட்டி விகிதம் அவ்வப்போது ஏற்படுகிற வேறுபாடுகளுக்கு உட்பட்டிருக்கும் அதோடு FICCL நிறுவன RPLR-ல் மாற்றமிருந்தால், கடனின் வட்டி விகிதமும் மாறும். கடன் மீதான வட்டி விகிதத்தை, RPLR -ல் மாற்றம் எதுவுமிருந்தால், கடனை முதலில் கொடுத்தனுப்பிய தேதியிலிருந்து, ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை திருத்தி அமைப்போம். இந்த ஒப்பந்தத்தின் விதிகளின்படி, FICCL நிறுவனம் வேறுபடுத்தும் வரையும், வேறுபடுத்துகிறபடியும், இந்தக் கடன் ஒப்பந்தத்தை நிறைவேற்றும் தேதியில் கடனுக்குப் பொருந்துகிற FIR-ஐ, கடன் சுருக்கப் பட்டியலில் குறிப்பிட்டுள்ளோம். கடனைத் திருப்பிச் செலுத்தும் காலத்தின் போது, வட்டி விகித ஏற்ற இறக்க அளவு மாறாமல்/ஒரே விதமாகவே இருக்கும்.*

| | | |
|---|---|---|
| | | *FICCL நிறுவனத்திற்காக* |
| *கடன் வாங்குபவர்* | *கூட்டாக-கடன் வாங்குபவர்* | *அங்கீகாரம்பெற்ற* |
| *கையொப்பதாரர்* | | |

*(d)* *FICCL நிறுவனம் FIR-ஐ மாற்றியிருந்தால் மட்டுமே, அந்த FIR-ஐ FICCL நிறுவனம் கடன் வாங்கியவர்(களு)க்குத் தெரிவிக்கும் அதோடு FICCL நிறுவனம் அறிவிக்கிற அதுபோன்ற வட்டி விகிதமே கடன் வாங்கியவர்(களை)க் கட்டுப்படுத்துவதாக இருக்கும்.*

*(e)* *கடனில் அவ்வ்வப்போது பொருந்தக்கூடிய வட்டி வரி மற்றும் மற்ற கிஸ்திகளை, கடன் வாங்குபவர்களே செலுத்த வேண்டும். கடன் வாங்குபவர்(கள்), FICCL நிறுவனம் கோருவதன் பேரில், இந்தியாவிலோ அல்லது வெளிநாட்டிலோ இருக்கிற அரசாங்க ஆணையம் அல்லது வேறு ஏதேனும் ஒழுங்குமுறை முகமைக்கு, அதுபோன்ற அரசாங்க ஆணையம் அல்லது முகமை வட்டி அல்லது வேறு ஏதேனும் தொகையில் (மற்றும் / அல்லது PEMII உள்ளிட்ட மற்ற கட்டணங்கள்) விதிக்கிற FICCL நிறுவனத்திற்குக் செலுத்தக்கூடிய, வட்டி வரி அல்லது மற்ற வரி செலுத்திய அல்லது செலுத்தக்கூடிய தொகையை, திருப்பிக் கொடுத்துவிட வேண்டும் அல்லது செலுத்திவிட வேண்டும்.*

*(f)* *FICCL நிறுவனத்தின் மற்ற உரிமைகளுக்குத் தப்பபிப்பிராயம் எதுவுமில்லாமல், கடன் வாங்கியவர்(கள்) செலுத்தக்கூடிய மேற்சொன்னபடியிஆன வட்டி மற்றும் மற்ற தொகைகளை, உரிய தவணைத் தேதிகளில் கடன் வாங்கியவர்(களின்) கடன் கணக்கிற்கு விதிப்போம்/அதிலிருந்து கழித்து விடுவோம் அதோடு அது நிலுவையிலுள்ள கடன் தொகையின் ஒரு பகுதி என ஆகிவிடவே நிதானிப்போம்.*

*2.3* *கடன் கொடுத்தல்:*

*(a)* *இதற்குப் பிறகு வழங்கியுள்ள தாக்கீதின் அனைத்து நிபந்தனைகளையும் குறித்த கடன் வாங்கியவர்(களி)ன் செயல்திறனைப் பொருத்து, கடனை ஒரே ஒட்டுமொத்தத் தொகையாகவோ அல்லது பொருத்தமான பகுதிகளாகவோ, அல்லது FICCL நிறுவனம் அவ்வப்போது முடிவு செய்கிறபடியான அதுபோன்ற முறையிலோ, தேவை அல்லது மானத்தின் முன்னேற்றத்தைப் பொருத்து முடிவு செய்யலாம். இது சம்பந்தமானதில் FICCL நிறுவனத்தின் முடிவே இறுதியானதாகவும், முடிவானதாகவும், கடன் வாங்கியவர்(களை)க் கட்டுப்படுத்துவதாகவும் இருக்கும். இந்த ஒப்பந்தத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகள், வினியோகித்துள்ள கடனின் ஒவ்வொரு பிரிவையும் கட்டுப்படுத்தும். FICCL நிறுவனத்திற்கு அவ்வாறு அவசியமானால், கடன் வாங்கியவர்(கள்) ஒவ்வொரு முறை வினியோகம் செய்வதைப் பெற்றுக் கொண்டதையும், FICCL நிறுவனத்திற்கு அவசியமாகிற வடிவில், ஒப்புகை செய்வார்கள்.*

***(b)*** *சொத்து கட்டுமானமாகிக் கொண்டிருக்கிற பட்சத்தில், கடனை நேரடியாக கட்டிடம் கட்டுபவர் அல்லது சொத்தை மேம்பாடு செய்கிறவருக்கே நேரடியாக வினியோகித்து விடுவார்கள் அதோடு அச்சொத்து கட்டித் தயாராக இருக்கிற சொத்தாக இருக்கிறதென்றால், FICCL நிறுவனம் ஏற்றது எனக் கருதுகிறபடியான அதுபோன்ற விதிகள் மற்றும் நிபந்தனைகளின் பேரில், கடனை அங்குள்ள விற்பனையாளருக்கே நேரடியாக வினியோகித்து விடுவார்கள். அச்சொத்து சுய-கட்டுமானத்தின் கீழ் இருக்கிறதென்றால், கடனை நேரடியாகக் கடன் வாங்குபவர்(களுக்கே) வினியோகித்து விடுவோம். அதுபோன்று கடனை வினியோகிப்பதை, FICCL நிறுவனம் கடன் வாங்குபவர்களுக்கு வினியோகித்திருப்பதாகவே நிதானிக்க வேண்டும். வினியோகித்த கடனை, அந்தந்த நிலைக்குத் தக்கபடி, கடன் வாங்கியவர்(கள்) அல்லது அவர்கள் சார்பாக எந்தத் தேதியில் கடன் வினியோகத்தைப் பெற்றிருக்கலாம் என்பதைப் பொருட்படுத்தாமல், எந்தக் காசோலை அல்லது பணம் கொடுக்கும் அறிவுறுத்தலின் கீழ் கடனை வினியோகித்தார்களோ அத்தேதியில் கடன் வாங்குபவர்(களுக்கு)க் கொடுத்ததாகவே நிதானிக்க வேண்டும். கடன் தொகையை, முன் மாதாந்திரத் தவணை வட்டியின் பால் செலுத்தும் அனைத்துத் தொகைகள், முன் தவணை, ஆவணக் கட்டணங்கள், கடன் நடவடிக்கைக் கட்டணங்கள், காப்பீட்டிற்கான பிரீமியம் (பொருந்துமானால்) ஆகிய அனைத்தும் போகவுள்ள நிகரத் தொகையாகக் கடன் வாங்குபவர்களுக்கு கொடுத்துவிட வேண்டும். FICCL நிறுவனத்திற்கு அவ்வாறு அவசியமாகிற பட்சத்தில், கடன் வாங்குபவர்கள், ஒவ்வொருமுறைக் கடன் தொகையை வாங்கும் போதும், FICCL நிறுவனத்திற்கு அவசியமாகிற படிவத்தில், அதற்கு ஒப்பம் அளிக்க வேண்டும்.*

*இங்குள்ள எவ்விஷயங்கள் இருந்த போதிலும், கடன் சுருக்கப் பட்டியலில் வேறுவிதமாகக் குறிப்பிடாமல் இருக்கிற பட்சத்தில், இந்த ஒப்பந்தத் தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் கடன் வாங்குபவர்கள் கடனைப் பெற்றுக்கொள்ள வேண்டும், அவ்வாறு பெற்றுக் கொள்ளத் தவறுவதற்கு, FICCL நிறுவனம், கடன் வாங்குபவர்களுக்கு கடன் தருவதற்கான / கொடுப்பதற்கான கடப்பாடு எதன் கீழும் இருக்காது.*

*(c)* *கடன் வாங்குபவர்(கள்) FICCL நிறுவனத்திடம் மீதத்தொகை மாற்ற வசதி வேண்டுமென வேண்டுகோள் விடுக்கிற பட்சத்தில், கடன் தொகையை, கடன் வாங்கியவர்(களுக்கு) ஏற்கெனவே கடன் கொடுத்துள்ளவர்களின் பெயரில், ஏற்கெனவே இருக்கிற கடன்(களை) கொடுத்துத் தீர்ப்பதின் பால் வினியோகித்து விடுவார்கள். கடனை, சொத்து எதையும் கையகப்படுத்துவதற்கான / கட்டுமானம் செய்வதற்கான நோக்கத்திற்காக வாங்கியிருக்கிற பட்சத்தில், கடன் வாங்கியவர்(கள்) அதுபோன்ற சொத்துக் கையகப்படுத்தல் / கட்டுமானத்திற்கான தங்களது சொந்தப் பங்களிப்பைக் கட்டுமான நிறுவனம் / மேம்பாட்டாளர் / விற்பனையாளருக்கு முழுமையாகச் செலுத்தி, அதுபோன்றப் பணப்பட்டுவாடாக்களுக்கான அத்தாட்சியை FICCL நிறுவனத்திற்குச் சமர்ப்பித்து விட்டதற்குப் பிறகு மட்டுமே கடனை வினியோகிப்பார்கள்.*

***2.4*** *கடனைத் திருப்பிச் செலுத்தும் காலம்:*

*கடனைத் திருப்பிச் செலுத்தும் காலத்தை, இத்துடன் இணைத்துள்ள கடன் சுருக்கப் பட்டியலில் அமைத்துக் கொடுக்க வேண்டும்.*

**2.5** கடனை வினியோகிப்பதற்கான இறுதிகட்ட நாட்கள்:

இங்கிருக்கிற எந்த விஷயங்கள் இருந்தாலும் கூட, FICCL நிறுவனம், அறிவிப்பு மூலமாக, அப்படிக் கடனைக் கொடுக்குமாறு கொடுத்த வேண்டுகோளை இந்த ஒப்பந்தம் / கடன் சுருக்கப் பட்டியலில் அமைத்துள்ள தேதிக்குள் அல்லது FICCL நிறுவனம் எழுத்துப் பூர்வமாக ஒப்புக் கொண்டபடி அதுபோன்று நீட்டித்துக் கொடுத்த நாட்களுக்குள் கொடுக்கவில்லை என்றாலோ, கடனின் கீழ் கடன் தொகையைக் கொடுக்கப் பெறுவதற்கான கடன் வாங்குபவர்களின் உரிமையை முடித்துக் கொள்ளலாம்.

சட்டப்பிரிவு 3
பணம் திருப்பிச் செலுத்துதல் / முன்னதாகவே செலுத்துதல்

**3.1** பணம் திருப்பிச் செலுத்துதல்:

(a) கடன் காலாவதியாகையில் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தி விடுவதற்கான கடன் வாங்கியவர்களின் கடமை முழுமையானதாகும். கடன் வாங்குபவர்(கள்), இப்போது இணைக்கிற அல்லது இங்குள்ள விஷயத்தின் ஒரு பகுதியாக ஆகிற, கடன் சுருக்கப் பட்டியல் மற்றும் அல்லது கடனைத் திருப்ப்பிச்செலுத்தும் பட்டியலில் குறிப்பிட்டுள்ள கடனைத் திருப்பிச் செலுத்தும் திட்டத்திற்கு ஏற்பக் கடனை, வட்டியோடு சேர்த்துத் திருப்பிச் செலுத்துவதற்கும், ஆயினும், எந்தக் காரணம், அது எதுவாக இருந்தாலும், கடனின் எந்தப் பகுதியையும் வினியோகிப்பதில் தாமதம் அல்லது ஒத்தி வைப்பு எதுவும் நிகழ்கிற நிகழ்வில், EMI ஆரம்பிக்கும் தேதியானது, கடனின் அனைத்துப் பாகங்களையும் வினியோகித்திருக்கிற தொடர்ந்து வரும் மாதத்தின் நாட்காட்டி மாத 4 ஆம் தேதியாகவே இருக்கும் என்பதையும் ஒப்புக் கொண்டு பொறுப்பேற்றுக் கொள்கிறார்கள். EMI கணக்கிடுவது, வட்டியை மறுபடியும் கணக்கிடுவதற்கு (வட்டி விகிதத்தில் மாற்றம் இருக்கும் நிலையில்) நிறுவனத்திற்குள்ள உரிமைக்குக் எவ்விதத் தப்பபிப்பிராயமும் இல்லாமல் இருக்கும், அதோடு அது போன்று EMI-ஐ மறு-கணக்கீடு செய்கிறா நிலையிலும், அதுபோன்றா கூடுதல் வட்டியை, கடன் வாங்கியுள்ளவர்(களின்) நிலுவையிலுள்ள கடன் தொகைக்கே விதிப்போம்.

(d) EMI ஆரம்பிப்பது வரைக்கும், கடன் வாங்கியவர்கள் PEMII வட்டியை ஒவ்வொரு மாதமும் பொருந்துகிறபடி, மாதாமாதம் செலுத்திவிட வேண்டும், அதோடு அதுபோன்ற ஒவ்வொரு மாதமும் PEMII திருப்பிச் செலுத்துவது, கடன் சுருக்கப் பட்டியலில் சொல்லியுள்ள வட்டி விகிதத்திலேயே இருக்கும்.

ஆயினும், நாட்காட்டி மாதத்தின் 10ஆம் தேதிக்குப் பிறகே கடனை வினியோகிக்கிற நிலைகளிலும், அடுத்த EMI முன் சென்ற மாதத்திற்கு அடுத்து வருகிற மாதத்தில் செலுத்த வேண்டியதாக வருகிற நிலையில், PEMII-ஐ (கடன் சுருக்கப் பட்டியலில் சொல்லியுள்ளபடி) அப்போது நிலுவையாக இருக்கிற அசல் கடன் தொகையில் மூலதனமாக்கி, அதோடு சேர்த்து, அசல் கடன் தொகையின் ஒரு பகுதியாக ஆக்கி விடுவோம். உதாரணமாக, ஜனவரி 20 ஆம் தேதி ரூ. 100-க்கு கடன் ஒன்றை வழங்கியிருக்கிறார்கள் எனவும், வழக்கமான EMI மார்ச் 4 ஆம் தேதியிலிருந்து ஆரம்பிக்கிறது எனவும் வைத்துக் கொள்கிற பட்சத்தில், ஜனவரி 20 ஆம் தேதிக்கும், பிப்ரவரி 3 ஆம் தேதிக்கும் இடைப்பட்ட காலத்திற்கான வட்டித் தொகையை (ரூ. 2) அசல் கடன் தொகையோடு சேர்த்து விட்டு, மேற்கொண்டு வட்டியை ரூ. 100-க்குப் பதிலாக அவ்வசல் தொகையான ரூ. 102-ல் கணக்கிடுவோம்.

கடனைத் தவணைகளிலேயே வினியோகிக்கிறோம், கடன் வாங்குபவர்(களின்) வேண்டுகோளின் பேரிலும், அதற்கு FICCL நிறுவனம் சம்மதிப்பதன் பேரிலும், கடன் வாங்குபவர்(கள்) கடனின் திருப்பிச் செலுத்தும் முழுக் காலத்தின் அடிப்படையில் இந்த ஒப்பந்தத்தின் கீழ், வினியோகித்துள்ள தொகைகளிலும், நிலுவைத் தொகைகளிலுமான EMI-ஐ FICCL நிறுவனத்திற்குச் செலுத்துவார்கள். கடனை அடுத்தடுத்து வினியோகிக்கும் ஒவ்வொருமுறையும், கடனைத் திருப்பிச் செலுத்தும் காலத்தில், கடனின் கீழ் நிலுவையாக இருக்கிற ஒட்டுமொத்தத் தொகைகளையும் திருப்பிச் செலுத்துவதைப் பார்க்கும் வகையில் EMI-ஐ அதிகரிப்பார்கள் / மாற்றியமைப்பார்கள்.

மேற்சொன்ன கடனைத் திருப்பிச் செல்லும் காலத்தை, கடன் வாங்கியவர்(களின்) வேண்டுகோளின் பேரில், FICCL நிறுவனம் தனது சொந்த விருப்புரிமையின் பேரில், கடன் வாங்கியவர்(களுக்கும்), இது விஷயமாக FICCL நிறுவனத்திற்கும் இடையே பரஸ்பரம் ஒப்புக் கொள்ளக்கூடிய அதுபோன்ற விதிகள் மற்றும் நிபந்தனைகளில் பொருந்துவதாக நிதானிக்கிறபடி, FICCL நிறுவனம் நியமிக்கிற அதுபோன்ற மேற்கொண்ட காலத்திற்கு நீட்டிக்கலாம், அதன் விளைவாக கடன் தொகையிலோ அல்லது மேற்சொன்னபடியான EMI-களின் மொத்த எண்ணிக்கையிலோ ஒரு திருத்தம் இருக்கலாம். கடன் வாங்குபவர்(களுக்கு) அசல் கடன் தொகைக்கு மற்றும்/அல்லது தொகையில் அல்லது EMI-களின் மொத்த எண்ணிக்கையில் திருத்தம் செய்வதற்காக PEMII-ஐ மூலதனமாக்குவதற்கு எவ்வித எதிர்ப்பும் இல்லை என்பதாகக் கடன் வாங்குபவர்(கள்) ஒப்புக் கொள்கிறார்கள்.

(b) மேலுள்ள சட்டப்பிரிவு 3.1(a) மற்றும் பணத்தைத் திருப்பிச் செலுத்தும் திட்டம் இருந்த போதிலும், எந்த நேரத்திலும் அல்லது அவ்வப்போது, FICCL நிறுவனம், தனது சொந்த விருப்புரிமையின் பேரில் முடிவு செய்கிறபடியான முறையிலும், அளவிலும், பணத்தைத் திருப்பிச் செலுத்தும் திட்டத்தை மறுஆய்வு செய்து, மறு திட்டமிடுவதற்கு, FICCL நிறுவனத்திற்கு உரிமை இருக்கும் அதோடு பணத்தைத் திருப்பிச் செலுத்துவது, அப்படித் திருத்தியமைத்த EMI-க்கு ஏற்றபடியே இருக்கும்.

(c) கடன் வாங்குபவர்கள், கடன் சுருக்கப் பட்டியலில் அமைத்துக் கொடுத்துள்ளபடியான அதுபோன்ற எண்ணிக்கையிலான தவணைகளை முன்னதாகவே, ஒப்பந்தத்தை நிறைவேற்றும் நேரத்திலோ அல்லது FICCL நிறுவனம் குறிப்பிடுகிறபடி அதற்குப் பின் ஒரு நேரத்திலோ FICCL நிறுவனத்திற்குச் செலுத்தி விட வேண்டும் ("முன் தவணை"). 'முன் தவணையை', கடன் சுருக்கப் பட்டியலில் அமைத்துக் கொடுத்துள்ள விதத்தில், தவணைகளில் சரி செய்து கொள்ள வேண்டும். FICCL நிறுவனம், 'முன் தவணைகளில்' வட்டி எதையும் கொடுக்கப் பொறுப்புள்ளதாகாது.

| | | |
|---|---|---|
| கடன் வாங்குபவர் | கூட்டாக-கடன் வாங்குபவர் | FICCL நிறுவனத்திற்காக<br>அங்கீகாரம்பெற்ற கையொப்பதாரர் |

(d) கடன் வாங்கியவர்(கள்) FIR-ஐத் தெரிவு செய்கிற பட்சத்தில், கீழுள்ள துணைச் சட்டப்பிரிவின் கீழ் வழங்கியுள்ளபடி தவிர்த்து, அல்லது அதன் விதிவிலக்காக, நிர்வாக வசதிக்காக, FIR-யில் ஏற்படுகிற ஏற்றயிறக்கங்களைப் பொருட்படுத்தாமல், EMI தொகையை மாறாததாக வைத்துக் கொள்ளவே எண்ணம் கொண்டுள்ளோம், அதன் விளைவாக, EMI-களின் எண்ணிக்கை மாறுபட வாய்ப்புள்ளது. ஒவ்வொரு FIR திருத்தத்தின் பேரிலும் கடன் வாங்கியவர்(கள்) செலுத்த வேண்டியுள்ள கூடுதல் EMI-களின் எண்ணிக்கையைப் பொருத்த வரையில், FICCL நிறுவனம் எவ்வித அறிவிப்பையும் கொடுக்காது. ஆயினும், FICCL நிறுவனத்தின் நிதியாண்டின் போது பொருந்தக்கூடிய / பொருந்திய FIR குறித்தத் தகவல்களையும்ம், அதுபோன்ற காலத்தின் போது கடைசியாகச் செய்த FIR திருத்தத்திலிருந்து செலுத்தக்கூடிய EMI -களின் எண்ணிக்கையையும், வருடத்திற்கு ஒருமுறை FICCL நிறுவனம் கடன் வாங்கியவர்(களுக்குத்) தெரிவிக்கும். கடன் வாங்குபவர்(கள்) கடனையும் அதோடு சேர்ந்த வட்டியையும் முழுமையாகச் செலுத்தித் தீர்க்கும் வரை -களைச் செலுத்துவார்கள்.

(e) இந்த ஒப்பந்தத்தில் முரண்பாடாக எதுவும் இருக்கிற போதிலும் கூட, இந்த நேரத்தில் FIR-ஐப் பொருத்த மட்டில், பின்வரும் நிலையில் பொருத்தமான விதத்தில் EMI-ஐ அதிகரித்துக் கொள்வதற்கு FICC நிறுவனத்திற்கு உரிமையிருக்கும்:

(i) சொல்லியுள்ள EMI எதிர்மறையான பணம் செலுத்தலுக்குக் கொண்டு செல்லும் (அதாவது வட்டியை முழுமையாக உட்கொள்ளும் வகையில் EMI போதுமானதாக இருக்காது) மற்றும்/அல்லது

(ii) EMI-யில் இருக்கிற அசல் பகுதி, FICCL நிறுவனம் தீர்மானிக்கிற அதுபோன்ற காலத்திற்குள் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்குப் பற்றாததாக இருக்கிறது

கடன் வாங்கியவர்(கள்) அதுபோன்ற அதிகரித்த EMI தொகையையும், FICCL நிறுவனம் முடிவு செய்து, FICCL நிறுவனம் கடன் வாங்கியவர்களுக்கு அறிவுறுத்திய அதற்கான எண்ணிக்கையையும் செலுத்த வேண்டியிருக்கும்.

(f) FICCL நிறுவனம் அதன் சில்லரை வணிக முதன்மைக் கடன் கொடுக்கும் விகிதத்தை அவ்வப்போது, FICCL நிறுவனம் தனது சொந்த விருப்புரிமையின் பேரில் பொருத்தமானது என நிதானிக்கிறபடியான அதுபோன்ற முறையில் மாற்றிக் கொள்ளலாம்.

இதன் கீழ் செலுத்த வேண்டியதாக உள்ள தொகை எதையும் கடன் வாங்கியவர் செலுத்தாமல் போகிற நிகழ்வில், கடனின் மீத நிலுவைத் தொகையை திருப்புச் செலுத்துவது எனும் வகையிலோ அல்லது கடன் வாங்கியவர்கள் செலுத்த வேண்டிய வட்டி அல்லது தொகை அல்லது செலுத்தக்கூடிய தொகையைச் செலுத்துவது என்ற வகையிலோ, அல்லது இந்த ஒப்பந்த நிபந்தனை எதையும் அல்லது இந்தக் கடன் சம்பந்தமான மற்ற ஆவணம் எதன் கீழும் கடன் வாங்கியவர்(கள்) விதி மீறல் அல்லது செலுத்தாமல் போகையில், கடன் வாங்கியவர்கள், நிலுவையிலுள்ள தொகையைப் பொருத்த வரையிலும், வட்டி அல்லது கொடுக்க வேண்டியதாக உள்ள மற்ற தொகையைப் பொருத்த வரையிலும், இங்கே கடன் சுருக்கப் பட்டியலில் குறிப்பிட்டுள்ள விகிதத்தில் தாமதமாகப் பணம் செலுத்துவதற்கான வட்டியை, மாதாந்திர மீதத்தொகையில் அல்லது FICCL நிறுவனம் அவ்வப்போது எழுத்துப் பூர்வமாக அறிவிக்கக்கூடிய காலங்களில், செலுத்தாமல் விட்ட தேதியிலிருந்து, பணம் செலுத்தும் தேதி வரை, செலுத்திவிட வேண்டும். கடன் வாங்கியவர்(கள்), அதுபோன்ற தாமதமாகப் பணம்

செலுத்துவதற்கான வட்டியானது, கடன் வாங்கியவர்களின் தரப்பில் செய்த அதுபோன்ற தாமதம் / செலுத்தாமல் விட்டதன் காரணமாக, FICCL நிறுவனத்திற்கு ஏற்பட வாய்ப்புள்ள இழப்பிற்கு நியாயமான கணக்கே என்று வெளிப்படையாக ஒப்புக் கொள்கிறார்(கள்). தாமதமாகப் பணம் செலுத்துவதற்கான வட்டியைச் செலுத்துவது, உரிய நேரத்தில் பணத்தைச் செலுத்துவது மற்றும்/அல்லது அது போன்று பணத்தைச் செலுத்தாமல் விடுவது அல்லது பணத்தைத் திருப்பிச் செலுத்தாமல் போவது சம்பந்தமானது உள்ளிட்ட FICCL நிறுவனத்தின் மற்ற உரிமைகள் எதையும் பாதிக்கச் செய்வது உள்ளிட்ட மற்ற கடமைகளை, கடன் வாங்கியவர்களுக்கு இல்லாமல் போகச் செய்யாது. மேற்படியானது, கூடுதலானது என்றும், நிறுவனத்திற்கு, கடன் வாங்கியவர்(கள்) கடமை தவறிய எதனாலும் FICCL நிறுவனத்திற்குச் சேரக்கூடிய அனைத்து உரிமைகளையும் வெளிப்படையாகத் தக்க வைத்துக் கொள்கிறது என்றும் வெளிப்படையாகக் குறிப்பிடுகிறோம். இங்கே மேற்சொல்லியுள்ளவற்றுக்குக் கூடுதலாகவும், எவ்விதத் தப்பபிப்பிராயமும் இல்லாமலும், கடன் வாங்கியவர்களே, பணத்தைத் திருப்பிச் செலுத்தாமல் போன்றதன் காரணமாக எவ்வகையிலும் FICCL செலுத்தக்கூடிய அல்லது ஏற்பட்டிருக்கக்கூடிய அனைத்துச் செலவுகள், கட்டணங்கள் மற்றும் செலவினங்களுக்கும் பொறுப்பானவர்களாகவும் இருப்பார்கள்.

(h) கடன் வாங்குபவர்(கள்), கடனை வினியோகிக்கும் தேயில் அல்லது அதற்கு முன்பாக, FICCL நிறுவனத்திற்குத் திருப்பித் தராத வருடாந்திர சேவைக் கட்டணங்களை / நடவடிக்கைக் கட்டணங்களை / அர்ப்பணிப்புக் கட்டணங்களை, கடன் சுருக்கப் பட்டியலில் குறிப்பிட்டுள்ள விகிதத்தில் செலுத்திவிட வேண்டும்.

(i) கடன் வாங்குபவர்கள், கடன் சுருக்கப் பட்டியலிலும், குறிப்பிட்டுள்ளபடியான, FICCL நிறுவனச் செலவுகள் மற்றும் கட்டணங்களைத் தாங்களே பார்த்துக் கொண்டு அதனைச் செலுத்தி விடுவார்கள் அதோடு அவற்றில் ஆவணக் கட்டணம் மற்றும் நடவடிக்கைக் கட்டணங்கள் (திருப்பித் தராதது), முன் தவணை வட்டி (பொருந்துமானால்), மற்றும் காசோலை பணம் இல்லாமல் திரும்புவதற்கான கட்டணங்கள், காசோலை/ICS வசதிக் கட்டணங்கள், தாமதமாகப் பணம் செலுத்துவதற்கான வட்டி, முன்னரே பணம் செலுத்துவதற்கான கட்டணங்கள் மற்றும் அவ்வப்போது FICCL நிறுவனத்தின் உள்ளான கொள்கைகளுக்கு ஏற்ப்ப் பொருந்துகிறபடியான கட்டணம் அல்லது செலவுகள் எதுவும், இவை மட்டும் தான் என்றில்லாமல், அடங்கும். FICCL நிறுவனத்திற்கு, கடன் வாங்குபவர்களுக்கு அறிவிப்போடு மேற்படிக் கட்டணங்களை/செலவுகளை திருத்தியமைப்பதற்கான உரிமை இருக்கும். மேற்படிக் கட்டணங்களுக்குக் கூடுதலாக, கடன் வாங்குபவர்கள் FICCL நிறுவனத்திற்கு, வட்டி வரி, சேவை வரி, சுங்கம் (முத்திரை சுங்கம் உட்பட), மற்றும் வரிகளையும் (அரசாங்கம் அல்லது மற்ற ஆணையிஅம் அவ்வப்போது விதிக்கக்கூடிய எந்த விவரமும்), (a) கடனுக்கான, கடனைக் கொடுப்பதற்கான, கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான விண்ணப்பம் (b) வட்டியோடு சேர்த்துக் கடனை மீட்பது மற்றும் பணமாக்குவது; (c) அமலாக்க நடவடிக்கைகள் தொடர்பாக இருக்கிற மற்ற அனைத்டுச்செலவுகளையும், அது எதுவாக இருந்தாலும், அவற்றைத் தாங்களே பார்த்துக் கொண்டு, அதனைச் செலுத்தி, நிறுவனம் செலுத்தியிருந்தால் அதனைத் திருப்பிக் கொடுத்து விட வேண்டும்.

(j) கடன் வாங்குபவர்கள் FICCL நிறுவனத்திற்குச் செலுத்துகிற பணம் அனைத்தையும், சிக்கல் இல்லாமலும், தெளிவாகவும், எவ்வித வரிகளுக்கான அல்லது அதன் காரணமான பிடித்தம் எதுவும் இல்லாமல் செலுத்த வேண்டும். கடன் வாங்குபவர்கள் அது போன்ற பிடித்தங்களைச் செய்ய வேண்டுமானால், அப்போது, அது போன்ற நிலையில், FICCL நிறுவனத்திற்குச் செலுத்தத்தக்க தொகையை, அது போன்ற பிடித்தங்களைச் செய்த பிறகு, FICCL நிறுவனம் அது போன்ற பிடித்தத்தைச் செய்திருக்கவில்லை அல்லது பிடித்திருக்க அவசியமில்லாமல் போயிருந்தால், அது பெற்றிருக்கும் தொகைக்குச் சமமானதோர் தொகையைப் பெற்றுக் கொண்டு, தக்க வைத்துக்கொள்கிறது என்பதை உறுதி செய்வதற்கான அளவிற்கு, அதிகரிப்போம்.

(k) ஒப்பந்தச் சட்டத்தின் சட்டப்பிரிவுகள் அல்லது வேறு ஏதேனும் சட்டம் அல்லது இவ்வொப்பந்தத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகள் எதுவும் மற்றும்/அல்லது பத்திர ஆவணங்கள் எதுவும், பணம் செலுத்துவது எதுவும் இருந்த போதிலும், FICCL நிறுவனம் வேறு விதமாக எழுத்துப் பூர்வமாக ஒப்புக் கொண்டிருந்தால் ஒழிய, பின்வரும் முறையிலேயே இருக்கும் என்பதைக் கடன் வாங்குபவர்கள் ஒப்புக் கொண்டு, பிரகடனம் செய்து, உறுதி செய்கிறார்கள்:

1. முதலில் FICCL நிறுவனத்திற்குச் செலுத்த நிலுவையிலுள்ளதும், செலுத்தத்தக்கதுமான செலவுகள், கட்டணங்கள், செலவினங்கள் மற்றும் மற்ற பணங்களின் பால்;
2. இரண்டாவதாக, FICCL நிறுவனத்திற்குச் செலுத்த நிலுவையிலுள்ளதும், செலுத்தத்தக்கதுமான, செலுத்த நிலுவையிலுள்ளதும், செலுத்தத்தக்கதுமான மற்றும் / அல்லது சேர்கிறதுமான தாமதமாகப் பணம் செலுத்துவதற்கான வட்டியின் பால், அதோடு
3. இறுதியாக, FICCL நிறுவனத்திற்குச் செலுத்த நிலுவையிலுள்ளதும், செலுத்தத்தக்கதுமான அல்லது செலுத்த நிலுவையிலுள்ளதும், செலுத்தத்தக்கதுமாக ஆகிற அசல் தொகைகளின் EMI/தவணைகள் எதன் தொகையைத் திருப்பிச் செலுத்துவதன் பால்.

(l) கடன் வாங்குபவர்(கள்) எவ்விதத்திலும் இங்குள்ள தங்களது கடமைகளை மீறி நடக்கிற பட்சத்தில், அதை, இவ்வொப்பந்தத்தின் சட்டப்பிரிவு 8-ன் விதிகளில், ஒரு கடமை தவறிய நிகழ்வாகவே கொள்வோம்.

3.2 கடன் வாங்கியவர்(கள்) கடனைப் பின்வரும் முறைகள் எதன்வாயிலாகவும் அதோடு, இன்னும் குறிப்பாகக் கடன் சுருக்கப் பட்டியலில் அமைத்துக் கொடுத்துள்ள முறைகளில் திருப்பிச் செலுத்தலாம்:

(a) FICCL நிறுவனத்தின் பெயரில் கொடுத்துள்ள குறுக்குக் கோடிட்ட பின் தேதியிட்ட காசோலைகள் (“PDC”);
(b) மின்னணுத் தீர்வகச் சேவைகள் (ECS) மற்றும் PDC;
(c) நேரடி கழிப்புகள் / நடப்பிலுள்ள அறிவுறுத்தல்கள்.

**3.3** பின் தேதியிட்ட காசோலைகள்/**ECS:**

கடன் தொகையையும், அதில் இருக்கிற வட்டியையும் திருப்பிச் செலுத்துவதற்காக, கடன் வாங்குபவர்கள், ECS பின் தேதியிட்ட காலோசலைகளைக் கொடுக்க ஒப்புக் கொண்டிருக்கிற இடத்தில், அது போன்ற காசோலையை, கடன் வாங்கியவர்கள் ஏற்கெனவே பெற்றிருக்கிற போதுமான பரிசீலனைக்கே கொடுத்திருக்கிறதாக நிதானிப்போம். FIR-ல் ஏற்பட்ட மாற்றத்தின் விளைவாக, EMI-களின் எண்ணிக்கை அல்லது அதிலுள்ள தொகை அதிகரிக்கிற பட்சத்தில், கடன் வாங்கியவர்கள், FICCL நிறுவனம் கோருவதன் பேரில், அதிலிருந்து புதிய ECS உத்தரவை / கூடுதல் பின் தேதியிட்ட காசோலைகளை FICCL நிறுவனத்தின் பேரில் கொடுத்து விட வேண்டும். கடன் வாங்கியவர்கள், காசோலைகளைப் பணமாக்குவதற்குப் போதுமான மீதத்தொகையை, பணம் செலுத்துவதற்கான அவற்றின் தவணைத் தேதியில் வங்கியில் வைத்திருக்க வேண்டும். கடன் வாங்குபவர்கள், எந்த நேரத்திலும், சொல்லியுள்ள காசோலைகளை எந்த வங்கிக் கணக்கிலிருந்து அதை முடித்துக் கொள்ளவோ அல்லது சொல்லியுள்ள காசோலைகளைப் பணமாக்கக் கொடுப்பதை நிறுத்த வங்கிக்கு எவ்விதத் தகவல் தொடர்பைக் கொடுக்கவோ கூடாது. கடன் வாங்குபவர்கள் கொடுத்த ECS காசோலை பணமில்லாமல் திரும்புவது எதுவும், அவ்விதமாகப் பணமில்லாமல் திரும்பும் செயல் ஒவ்வொன்றுக்கும், அவ்வப்போது இருக்கிற FICCL நிறுவனத்தின் உள்ளான கொள்கைகளுக்குப் பொருந்துகிறபடி, காசோலைப் பணமில்லாமல் திரும்புவதற்கான கட்டணங்களைச் செலுத்தக் கடன் வாங்குபவர்களே பொறுப்பாவார்கள் என்பதை ஒப்புக் கொள்கிறார்கள். அது போன்ற கட்டணத்தை விதிப்பது, சட்டத்தின் கீழ், அது கைமாறத்தக்க ஆவணங்கள் சட்டம், 1881, இந்தியத் தண்டனைச் சட்டம், 1860 அல்லது வேறு எதுவாயிருந்தாலும் அதன் கீழோ, FICCL நிறுவனத்திற்குள்ள மற்ற அனைத்து உரிமைகளுக்கும் தப்பபிப்பிராயம் இல்லாமலிருப்பது என்பதை வெளிப்படையாகக் குறிப்பிட்டு, ஒப்புக் கொள்கிறார்கள். ECS காசோலைகளைக் காசாக்க வங்கியில் கொடுக்காமல் இருப்பது அல்லது FICCL நிறுவனத்தின் தரப்பில் செய்த அது போன்ற எதுவும், அது எந்தக் கரணத்திற்காக இருந்தாலும், அது கடன் வாங்கியவர்களின் பொறுப்பை எந்த விதத்திலும் பாதிக்காது என்பதை மேற்கொண்டும் ஒப்புக் கொண்டு புரிந்து கொள்கிறோம். இந்த விதிப் பிரிவின் விதிகளுக்குத் தொடர்ச்சியாக, கடன் வாங்கியவர்கள் FICCL நிறுவனத்திற்குக் கொடுத்துள்ள ECS அல்லது எந்தப் பின் தேதியிட்ட காசோலை(களு)ம் FICCL நிறுவனத்தின் பாதுகாப்பில் இருக்கையில் தொலைந்து போனாலோ, அழிந்து போனாலோ அல்லது எங்கேயோ வைத்து விட்டார்கள் என்றாலோ; அல்லது அதிகாரியின் அல்லது மற்றபடி கையொப்பமிட்டுள்ளவரின் அல்லது கையொப்பமிட்டுள்ள எவர் அல்லது அநேகரின் (ஒருவருக்கு மேலிருந்தால்) மரணம், திவால், மனக்குழப்பம், பதவிநீக்கம் அல்லது பணம் எடுக்கும் வங்கியின் உரிமக் கலைப்பு; அல்லது நிறுவனத்தின் விருப்புரிமையின் பேரில் ஏதோவொரு காரணம், அது எதுவாயிருந்தாலும் அதற்காக வேறொரு காசோலை அவசியமாகிற பட்சத்தில், அப்போது அந்த நிகழ்வில், FICCL நிறுவனத்திடமிருந்து அது போன்ற தகவல் கிடைத்த மூன்று வேலை நாட்களுக்குள், கடன் வாங்கியவர்(கள்) மூன்று வேலை நாட்களுக்குள், அது போன்ற ECS காசோலை(கள்) எதற்குப் பதிலாக, முந்தைய ECS காசோலைகளைப் போன்ற அதே தொகைக்குச் செலுத்தத்தக்க காலோசலைகளை / புதிதாக வேறு ECS காசோலைகளைக் கொடுத்து விட வேண்டும்.

கடன் வாங்கியவர்கள் அந்த ECS பின் தேதியிட்ட காசோலைகளை ஒரு வங்கியிலிருந்து இன்னொரு வங்கிக்கு ஸ்வாப் செய்ய / மாற்றிக் கொள்ள விரும்புகிற பட்சத்தில், FICCL நிறுவனத்தின் அவ்வப்போது இருக்கிற உள்ளான கொள்கைகளுக்கு பொருந்துகிறபடி FICCL நிறுவனத்திற்கு ஸ்வாப் கட்டணங்களைச் செலுத்துவதன் மூலம் கடன் வாங்குபவர்கள் அவ்வாறு செய்து கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| | | FICCL நிறுவனத்திற்காக |
| கடன் வாங்குபவர் | கூட்டாக-கடன் வாங்குபவர் | அங்கீகாரம்பெற்ற கையொப்பதாரர் |

3.4 முன்னரே பணம் செலுத்துதல்

கடன் வாங்கியவர்(கள்) முன்னரே பணம் செலுத்துவதற்கான அபராதம் எதையும் செலுத்தாமலேயே, கடன் தொகையையும், அதில் நிலுவையாக உள்ள வட்டியை அல்லது அதன் ஏதேனும் ஒரு பகுதியை முன்னரே செலுத்திக் கொள்வதற்கு உரிமையுள்ளவர்களாக

இருப்பார்கள். FICCL நிறுவனத்திற்கு ஒருமாத முன் அறிவிப்பை எழுத்துப் பூர்வமாக FICCL நிறுவனத்திற்குக் கொடுப்பதன் மூலமாக முன்னரே பணம் செலுத்துவதற்கான வேண்டுகோள் எதையும் விடுக்க வேண்டும். முன்னரே செலுத்திவிட்ட எந்தத் தொகையையும், மறுபடியும் கடன் வாங்கவோ அல்லது கடன் வாங்கியவர்களே இந்த ஒப்பந்தத்தின் கீழ் மறுபடியும் பெற்றுக் கொள்ளவோ முடியாது.

*3.5* பணம் செலுத்துவதில் தாமதங்கள்:

*கடன் வாங்குபவர்கள், EMI-ஐ, எவ்விதத்திலும் திருப்பிச் செலுத்தத் தவறாமலும், வைப்புத்தொகை பிடித்தம் செய்ததைக் கோராமலும் அல்லது எதிர்-கோரிக்கை செய்யாமலும், தொகைகளைச் செலுத்த வேண்டிய உரிய தவணைத் தேதிகளில், முழுவதுமாகச் செலுத்த வேண்டும். கடன் வாங்கியவர்களுக்கு, பணம் செலுத்த வேண்டிய தேதியில் EMI-ஐ செலுத்துவதற்கான கடமை சம்பந்தமாக எவ்வித அறிவிப்போ, தகவலோ அல்லது நினைவூட்டலோ கொடுக்க மாட்டோம். FICCL நிறுவனத்தின் மற்ற உரிமைகளுக்குத் தப்பபிப்பிராயம் கொள்ளாமல், செலுத்த வேண்டிய தேதிக்குள் பணம் செலுத்துவதில் தாமதம் ஏற்படும் நிலையில், FICCL நிறுவனம் அவ்வப்போது திருத்தியமைக்கக் கூடியபடி, கடன் சுருக்கப் பட்டியலில் குறிப்பிட்டுள்ள விகிதங்களில், தாமதமாகப் பணம் செலுத்தியதற்கான வட்டியைக் கடன் வாங்கியவர்(கள்) செலுத்துவார்கள்.*

*3.6* கூட்டாகவும், பலராகவும் இருப்பதற்கான பொறுப்பு:

*ஒன்றுக்கும் மேற்பட்ட கடன் வாங்குபவர்(களாக) மற்றும் கூட்டாகக் கடன் வாங்குபவர்(கள்) இருக்கிற பட்சத்தில், அப்போது, இங்கே சொல்லியுள்ள எது இருந்த போதிலும், கடனைத் திருப்பிச் செலுத்தி, இந்த ஒப்பந்தத்தின் கீழுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கான கடன் வாங்குபவர்(கள்) மற்றும் கூட்டாகக் கடன் வாங்குபவர்(களின்) பொறுப்பு, கூட்டாகவும், பலராகவும் இருக்கும்.*

*3.7* *இந்தப் பிரிவு எண் 3-ன் கீழ் அல்லது இந்த ஒப்பந்தத்தில் உள்ள வேறு எந்தப் பிரிவின் கீழ் செலுத்தக்கூடிய கட்டணங்கள் எதையும், FICCL நிறுவனம் தனது சொந்த விருப்புரிமையின் பேரில் தள்ளுபடி செய்யலாம் அதோடு FICCL நிறுவனத்தின் முடிவே இறுதியானதாகவும், கடன் வாங்கியவர்களுக்கு சட்டப்பூர்வக் கோரிக்கை எதுவும் இல்லாமலும் இருக்கும்.*

*சட்டப்பிரிவு 4*

*கடனைக் கொடுப்பதற்கு முன்மாதிரியாக இருக்கிற நிபந்தனை*

*4.1* *கடனைக் கொடுப்பதற்கான FICCL நிறுவனத்தின் கடப்பாடு பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டே இருக்கும்:*

*(a)* *கடன் வாங்குபவர்(கள்) FICCL நிறுவனத்தின் பணத்தைத் திருப்பிச் செலுத்துவதற்கு அவருக்குள்ள திறன் குறித்தத் தேவையைச் சந்திக்கிறார். FICCL நிறுவனத்திற்கு, அது போன்ற தன்மை குறித்த விசாரணைகளைச் செய்ய அல்லது செய்ய வைப்பதற்கு, கடன் வாங்குபவர்(களின்) பணத்தைத் திருப்பிச் செலுத்துவதற்கான திறனுக்குப் பொருத்தமானது என FICCL நிறுவனம் தீர்க்கிறபடியான உரிமையிருக்கிறது. FICCL நிறுவனத்திற்கு, கடன் வாங்குபவர்களிடமிருந்து அது போன்ற பணத்தைத் திருப்பிச் செலுத்தும் திறன்களைக் கேட்டுத் தெரிந்து கொள்வதற்காக, கடன் வாங்கியவர்களின் பணத்தைத் திருப்பிச் செலுத்தும் திறனை நிரூபிப்பதற்கு அவசியமாகிறபடி, தொலைபேசி அழைப்பைச் செய்வதற்கான உரிமையும் இருக்கிறது;*

*(b)* *சட்டப்பிரிவு 8-ல் வரையறுத்துள்ளபடியான தானாக நிகழ்கிற எந்த நிகழ்வுகளும், நேரம் அல்லது அறிவிப்பு காலாவதியாகியும், சொல்லியுள்ள சட்டப்பிரிவில் குறிப்பிட்டுள்ளபடி நேரம் காலாவதியானகியும் போன எந்த நிகழ்வுகளும், நிகழ்ந்திருக்கவும், தொடர்வதாகவும் இருக்கக் கூடாது;*

*(c)* கடன் வாங்குபவர்கள் கடனை வினியோகிக்க வேண்டிக் கொள்கிற நேரத்தில், சொத்தைக் கையகப்படுத்த / கட்டுமானம் செய்ய / மேம்பாடு செய்வதற்காகவே கடன் வாங்குபவர்களுக்கு அவசியமாகிறது என்று *FICCL* நிறுவனத்தைத் திருப்தி செய்ய வேண்டும் அதோடு கடன் வாங்கியவர்கள் கடன் வினியோகிக்கப் பெற்றதிலிருந்து கிடைத்த வசதிகளை எந்தெந்த உபயோகத்திற்குத் திட்டமிட்டுள்ளார்கள் என்பது குறித்த திருப்திகரமான அத்தாட்சிகளை *FICCL* நிறுவனத்திற்குக் கொடுத்துவிட வேண்டும்;

*(d)* *கடனை எந்த நோக்கத்தை மேற்கொள்ள வழங்கினோமோ அதை உண்மையில்லாததாக ஆக்கும் மற்றும்/அல்லது கடன் வாங்கியவர்கள் இந்த ஒப்பந்தத்தின் கீழுள்ள அவர்களது கடமைகளை நிறைவேற்ற முடியாததாகப் போகிற எந்த அசாதாரணச் சூழ்நிலைகளும் நேரக்கூடாது;*

*(e)* *FICCL நிறுவனத்திற்கு கடன் வாங்கியவர்(களிடம்) கேட்பதற்கான உரிமை இருக்கும் அதோடு பிணையச் சொத்தின் மதிப்பு காலப்போக்கில் குறைந்து போகிற நிலையில், FICCL நிறுவனம் முடிவு செய்கிறபடி, கூடுதல் பிணையச் சொத்தை FICCL நிறுவனத்திற்குக் கொடுப்பதற்குக் கடமையுள்ளவர்களாகவே இருப்பார்கள்;*

*(f)* *கடன் வாங்குபவர்(கள்), FICCL நிறுவனம் குறிப்பாக அனுமதித்தால் ஒழிய, சொத்தைக் கையகப்படுத்துவதற்கு/கட்டுமானம் செய்வதற்கான நிதியின் ஒரு பகுதியை வழங்குவதற்காக, தங்களது சொந்தப் பங்களிப்பை முழுமையாக (சொத்தின் விலையில், கடன் தொகை போக) உபயோகித்து விட்டார்கள்;*

*(g)* *கடன் வாங்குபவர்(கள்) பின்வரும் உருப்படிகளை, FICCL நிறுவனத்திற்கு சொல்லிலும் செயலிலும் திருப்தி ஏற்படும் வண்ணம், எடுத்துச் செல்வார்கள்:*

- *i)* *கடனைப் பெறுவதற்கும், பிணையச் சொத்தையும், கடனைப் பெறுவதற்கு அவசியமாகிற அங்கீகாரங்கள் மற்றும் அனுமதிகளுக்கு அனைவரும் ஒப்புதலளிக்கிறார்கள் என்பதற்கான தடயத்தையும் உருவாக்குவதற்கும் கடன் வாங்குபவர்களின் அங்கீகாரத்தையும் மற்றும்/அல்லது பிணையச் சொத்தை உருவாக்குவதற்கான அங்கீகாரத்தையும் பெற்றிருக்கிறோம்;*
- *ii)* *பிணையச் சொத்து ஆவணங்கள் மற்றும் / அல்லது உத்திரவாதம்;*
- *iii)* *அச்சொத்துக் கட்டித் தயாராக இருக்கிற சொத்தாக அல்லது கட்டவுள்ள சொத்தாக இருக்கிற நிலையில், அச்சொத்திற்கான, அல்லது அச்சொத்தைக் கட்டவுள்ள நிலத்திற்கான அனைத்து வில்லங்கங்களும் இல்லாத, தெளிவான, விற்பனை செய்யக்கூடிய, FICCL நிறுவனத்தின் பெயரில் ஒற்றி வைக்கக்கூடிய பத்திரப்பதிவு கடன் வாங்கியவர்களிடம் இருக்கிறது என்பதற்கான அத்தாட்சி அதோடு அச்சொத்தைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்கிற நிலையில், கட்டிடக் கட்டுபவரோடு / சொத்து மேம்பாடு செய்பவரோடு செய்து கொண்ட விற்பனை ஒதுக்கீட்டுக் கடிதத்திற்கான செல்லுபடியாகிற ஒப்பந்த அத்தாட்சி;*
- *iv)* *FICCL நிறுவனத்திற்கு ஏற்புடையதாகிறபடியான காப்பீட்டுப் பாதுகாப்பு;*
- *v)* *சொத்தை அல்லது சொத்தைக் கட்டவுள்ள நிலத்தை விற்பதற்கான இணங்கும் ஒப்பந்தத்தின் அத்தாட்சி;*
- *vi)* *கடனை வினியோகிப்பது, இந்த ஒப்பந்தத் தேதியிலிருந்து ஆறு மாதகாலத்திற்குப் பிறகு இருக்கிறது என்றால், அதுபோன்ற தகவல்கள் மற்றும் ஆவணங்களை, ஏற்கெனவே கொடுத்துள்ள ஆவணங்களின் புதிய தகவல்களைச் சேர்த்த பதிப்பு உட்பட, கொடுப்பது.*

*சட்டப்பிரிவு 5*
*பிணையச் சொத்து*

*5.1* *கடன் வாங்குபவர்(கள்), கடனைத் திருப்பிச் செலுத்துவதும், கடன், வட்டி, கட்டணங்கள், செலவினங்கள், அர்ப்பணிப்புக் கட்டணங்கள், அபராதக் கட்டணங்கள் மற்றும் செலவுகள் மற்றும் இந்த ஒப்பந்தத்தின் கீழ் FICCL நிறுவனத்திற்கு செலுத்த வேண்டியதாகவும், செலுத்தத்தக்கதாகவும் இருக்கிற மற்ற அனைத்துத் தொகைகளையும் செலுத்துவதும், சொத்தையும், FICCL நிறுவனத்திற்கு அவ்வப்போது அவசியமாகிற மற்ற சொத்துக்களையும், FICCL நிறுவனத்தின் பெயரில் ஒற்றி வைப்பதன் வாயிலாக முதல் பொறுப்பு மூலம் பிணையம் செய்து விடார்கள் எனபதை நிபந்தனையின்றி ஒப்புக் கொள்கிறார்கள்.*

*5.2* *FICCL நிறுவனத்திற்கு தனது சொந்த விருப்புரிமையின் பேரில், ஒற்றியின் வகை அல்லது வேறு ஏதேனும் பிணையம் மற்றும்/அல்லது கடனுக்குப் பிணையச் சொத்தாகக் கடன் வாங்கியவர்(கள்) உருவாக்க வேண்டியக் கூடுதல் பிணையம், மற்றும் மேற்சொன்னபடியான மற்ற அனைத்துத் தொகைகளையும் முடிவு செய்வதற்கான உரிமை இருக்கும் அதோடு கடன் வாங்குபவர்(கள்) அதுபோன்ற பிணையச் சொத்தை உருவாக்கித் தருவதற்குக் கட்டுப்படுவார்கள் அதோடு FICCL நிறுவனத்திற்கு அவசியமாகிறபடி அவற்றை அத்தாட்சி செய்கிற ஆவணங்களை முறையாக நிறைவேற்றிக் கொடுப்பார்கள்.*

*5.3* *கடன் வாங்குபவர்கள், கடனுக்காக பத்திரம்(கள்) அல்லது பிராமிசரி நோட்டுகள் எதையும் மற்றும் அதுபோன்ற மற்ற ஆவணங்களையும், அதிகாரப் பத்திரத்தையும், ஒப்பந்தங்களையும், FICCL நிறுவனத்திற்கு அவசியமாகிறபடி நிறைவேற்றித் தருவார்கள். அதுபோன்ற ஆவணங்களின் அசல் ஆவணங்களை FICCL நிறுவனத்தின் பாதுகாப்பில் பத்திரமாக வைக்க வேண்டும்.*

| | | FICCL நிறுவனத்திற்காக |
|---|---|---|
| கடன் வாங்குபவர் | கூட்டாக-கடன் வாங்குபவர் | அங்கீகாரம்பெற்ற கையொப்பதாரர் |

5.4 இங்கே வழங்கியுள்ள பிணையச் சொத்துக்களை, கடன் வாங்கியவர்(கள்) பெற்றுள்ள கடனைப் பொருத்த வரையில் தொடர்ச்சியான பிணையச் சொத்தாக இருப்பதாகவே நிதானிப்போம். கடன் சம்பந்தமாக செலுத்த வேண்டியுள்ள தொகைகள் அனைத்தையும் FICCL நிறுவனத்தின் திருப்திக்கு ஏற்ப செலுத்தித் தீர்க்கும் காலம் வரையும், எந்தப் பிணையச் சொத்து சம்பந்தமாகவும், கொடுத்தனுப்புமாறு கடன் வாங்குபவர்(களுக்கு) எழுத்துப்பூர்வமாக FICCL நிறுவனம் ஒப்புதலளிக்கும் வரையும், பிணையச் சொத்துக்களை விடுவிக்க மாட்டார்கள்.

5.5 கடனை முதன் முதலாக வினியோகித்த பிறகு ஏழு நாட்களுக்குள் அல்லது FICCL நிறுவனம் சொல்கிறபடி பிணையச் சொத்துக்களை உருவாக்க வேண்டும். கடன் வாங்கியவர்கள் மேலுள்ளதற்கு இணங்கத் தாமதம் எதையும் செய்கிற பட்சத்தில், அப்போது FICCL நிறுவனத்திற்குக் கூடுதல் வட்டியை 4% விகிதத்தில் விதிப்பதற்கான உரிமையிருக்கும் அதோடு அது நிலுவையிலுள்ள கடனின் ஒரு பகுதியாக இருக்கும் என்றே நிதானிக்கும். கூடுதல் வட்டியைச் செலுத்துவதற்கான பொறுப்பு, FICCL நிறுவனத்திற்குள்ள மற்ற உரிமைகள் மற்றும் நிவாரணங்களுக்கு எவ்விதத் தப்பபிப்பிராயமும் இல்லாமல் இருக்கும்.

5.6 இந்த ஒப்பந்தம் இருக்கும் காலத்தின் போது எந்த நேரத்திலும், கடன் வாங்கியவர்கள் கொடுத்துள்ள பிணையச் சொத்துக்கள் FICCL நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டியுள்ள மீதத்தொகைக்குப் பாதுகாப்பளிக்கப் போதுமானவையாக இல்லாமல் போயிருக்கின்றன என்பதாக FICCL நிறுவனம் அபிப்பிராயம் கொள்கையில், அப்போது அது குறித்து கடன் வாங்கியவர்களுக்கு FICCL நிறுவனம் அறிவுறுத்துவதன் பேரில், கடன் வாங்கியவர்கள், FICCL நிறுவனத்தின் திருப்திக்கு ஏற்ப, அதுபோன்ற கூடுதல் பிணையச் சொத்தை, FICCL நிறுவனத்திற்கு ஏற்புடைய வகையில், பற்றாக்குறையைப் போக்கும் வகையில், FICCL நிறுவனத்திற்கு வழங்கிச் சமர்ப்பிக்க வேண்டும். கடன் வாங்கியவர்கள், மேற்சொன்ன கடன் சம்பந்தமாக அவ்வப்போது FICCL நிறுவனத்திற்கு அவசியமாகிறபடி, அதுபோன்ற ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்குப் மேற்கொண்டும் பொறுப்பெடுத்துக் கொள்கிறார்கள்.

## சட்டப்பிரிவு 6
## கடன் வாங்குபவர்(கள்) பிரதிநிதித்துவம் மற்றும் உத்திரவாதங்கள்

6.1 கடன் வாங்குபவர்(கள்) இதன் மூலம், பிரகடனம் செய்து, பிரதிநிதித்துவம் செய்து, உத்திரவாதமளிப்பது என்னவென்றால்:

கடன் வாங்குபவர்(கள்), FICCL நிறுவனம், கடன் விண்ணப்பத்தின் அடிப்படையிலும், கடன் வாங்குபவர்(கள்) கொடுத்துள்ள பிரதிநிதித்துவத்தின் நம்பிக்கையின் அடிப்படையிலும், அதுவே உண்மையானதாகவும், சரியானதாகவும் இருக்கிறது என்று நம்புவதன் அடிப்படையிலுமே கடன் கொடுக்கச் சம்மதித்திருக்கிறது/கடன் கொடுத்திருக்கிறது;

b) கடன் வாங்கியவர்(கள்) தங்களது விண்ணப்பத்தில் கொடுத்துள்ள தகவல்களும், கடன் சம்பந்தமாக FICCL நிறுவனத்திற்கு முன்பே அல்லது அடுத்தடுத்து வழங்குகிற தகவல்கள் அல்லது கொடுத்துள்ள விளக்கம் எதுவும் உண்மையானவையும், முழுமையானவையும், தனைத்து விதங்களிலும் துல்லியமானவை என்றும், கடன் வழங்க FICCL நிறுவனத்தைத் தூண்டுவதற்காக, கடன் வாங்குவர்கள் கொடுக்க அவசியமான யதார்த்தம் அல்லது தகவல் எதையும் சொல்லாமல் விட்டிருக்கவில்லை என்றும்;

விண்ணப்பம் கொடுத்ததைத் தொடர்ந்து, கடன் வாங்கியவர்களின் நிதி நிலைமையில் எவ்வித எதிரிடையான பொருள்சார்ந்த மாற்றமும் இருந்திருக்கவில்லை, அல்லது விண்ணப்பத்தில் வேண்டிக்கொண்டுள்ள கடனை வழங்குவதைப் பாதிக்கும் FICCL நிறுவனத்தின் நலனிற்குத் தப்பபிப்பிராயம் கொள்ளச் செய்கிற அல்லது செய்யக்கூடிய எந்தவொரு நிகழ்வும் மற்றும் / அல்லது இந்த ஒப்பந்தத்தின் கீழ் அவர்களுக்குள்ள அனைத்து அல்லது எந்தக் கடப்பாடுகளையும் செய்வதற்கான கடன் வாங்கியவர்களின் திறனை எதிரிடையாகப் பாதிக்கும் எந்தவொரு நிகழ்வும் இடம் பெற்றிருக்கவில்லை;

(d) ஒற்றி, பொறுப்புகள், நிலுவையிலுள்ள சட்டப் பிரச்சினைகள் அல்லது பாத்தியதைகளோ அல்லது மற்ற வில்லங்கங்களோ அல்லது வழிக்கான உரிமையோ, விளக்குக் அல்லது மற்ற குறுக்காகச் செல்லும் வழியோ அல்லது சொத்தின் முழுவதிலும் அல்லது ஒரு பகுதியில் ஆதரவுக்கான உரிமையோ இல்லை என்றும்;

(e) கையகப்படுத்துவதற்கான அறிவிப்பு அல்லது வேண்டுகோள் எதையும், சொத்திற்கு எதிராக வழங்கியிருக்கவில்லை அல்லது பிரசுரித்திருக்கவில்லை அல்லது பெற்றிருக்கவில்லை என்றும், சொத்திற்கு அல்லது அதன் எந்தப் பகுதிக்கும் எதிராக எதிரிடையான கோரிக்கை எதையும் செய்திருக்கவில்லை அல்லது சொத்தை வேறு எந்த நோக்கத்திற்காகவும் ஒதுக்கி வைத்திருக்கவில்லை என்றும்;

(f) கடன் வாங்குபவர்(கள்) சொத்தை முற்றிலுமாக பிடித்து வைத்திருக்கிறார்கள் அதோடு சொந்தமாக வைத்திருக்கிறார்கள், அதற்கு உரிமையுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்றும், கடன் வாங்கியவர்(களு)க்கு அந்தச் சொத்தில் தெளிவானதும், விற்பனை செய்யக்கூடியதுமான பத்திரம் இருக்கிறது அதோடு அதை FICCL நிறுவனத்தின் பெயரில் ஒற்றி வைக்கத் திறனுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்றும்;

(g) இந்த ஒப்பந்தத் தேதியில், எவ்வித சட்டச் சிக்கலோ, நடவடிக்கைகளோ அல்லது தகராறோ அல்லது நிலுவையிலுள்ள நடவடிக்கையோ அல்லது அச்சுறுத்தலோ, கடன் வாங்கியவர்(களுக்கு) எதிராக இல்லை, இதை எதிரிடையாகத் தீர்மானிப்பது, குறிப்பிடத்தக்க அளவிற்குக் கடன் வாங்குபவர்களின் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான திறனைப் பாதிக்கலாம், அல்லது கடன் வாங்குபவர்(களின்) நிதி நிலைமையை பொருள் சார்ந்து எதிரிடையாகப் பாதிக்கலாம்;

(h) கடன் வாங்கியவர்களுக்கு, சொத்தின் பத்திரத்தைப் பாதிக்கிற எவ்வித ஆவணங்களோ, நீதிமன்ற உத்தரவோ அல்லது சட்ட நடபடிக்கையோ அல்லது மற்ற குற்றச்சாட்டுக்களோ அல்லது எவ்வித லேட்டண்ட் அல்லது பேட்டண்ட் குறைபாடுகளோ இருப்பது குறித்து அல்லது சொத்தில் அல்லது அதன் பத்திரத்தில் வெளிச்சொல்லாமலேயே இருந்திருக்கிற மற்றும்/அல்லது FICCL நிறுவனத்தைத் தப்பபிப்பிராயம் கொள்ளும் விதமாகப் பாதிக்கக்கூடியதும், FICCL நிறுவனத்திற்குத் தெரியச் செய்திருக்கிறதுமான எவ்வித பொருள் சார்ந்த குறைபாடு இருப்பது, சொத்து சம்பந்தமான பத்திரப் பதிவுகள் குறித்துத் தெரியாது அதோடு FICCL நிறுவனத்திற்குத் தேவைப்படக்கூடிய மற்ற ஆவணங்களைக் கொடுத்து விடுவார்கள்;

(i) கடன் வாங்குபவர்(களி) ன் சொத்து, மத்திய/மாநில அரசாங்கத் திட்டங்கள் அல்லது மேம்பாட்டு அறக்கட்டளை அல்லது வேறு எந்த பொதுத்துறை அமைப்பு அல்லது சட்ட அமைப்பு அல்லது எவ்வித மத்திய/மாநில அரசு அல்லது எந்த மாநகராட்சி, நகராட்சிக் குழு, கிராமப் பஞ்சாயத்துத் திட்டம் போன்றவற்றின் கீழுமான எவ்வித நேராக்குதல், அகலப்படுத்தல் அல்லது சாலைக் கட்டுமானம் எதிலும் சேரவில்லை அல்லது அவற்றால் பாதிப்படையவில்லை;

(j) சொத்து சம்பந்தமாக எந்த நீதிமன்றத்திலும் எவ்வித வழக்கும் நிலுவையில் இல்லை என்றும், அல்லது உள்ளாட்சி அமைப்புகள் அல்லது கிராமப் பஞ்சாயத்து அல்லது உள்ளாட்சி அதிகாரிகள் சம்பந்தமான நகராட்சி சட்ட ஷரத்துக்களை விதி அல்லது இத்தகைய சட்டங்களின் கீழ் உள்ள எந்த நடபடிக்கையையும் மீறியதற்காக அறிவிப்பு எதும் கடன் வாங்கியவர்களுக்கு கொடுத்திருக்கவில்லை;

(k) கடன் வாங்குபவர்(கள்), அரசாங்கம் அல்லது சட்டப்பூர்வ அமைப்பு, நிதி நிறுவனம், முகமை அல்லது ஆணையம் எதிலிருந்தும், கடன் பெறுவதற்கான மற்றும் பிணையச் சொத்தை உருவாக்குவதற்கான அனைத்து அனுமதிகள், அங்கீகாரங்கள், ஒப்புதல் அல்லது அனுமதிக் கடிதங்களையும் பெற்றிருக்கிறார்கள், அதோடு அவர்கள் எல்லா நேரங்களிலும், FICCL நிறுவனத்திற்குக் கொடுக்க வேண்டிய தொகைகளை முழுமையாகச் செலுத்த வேண்டியுள்ள காலம் மற்றும் கடனை முழுமையாகச் செலுத்தித் தீர்க்கும் வரைக்கும், அதுபோன்ற அனுமதிகள், அங்கீகாரங்கள், ஒப்புதல்கள் அல்லது அனுமதிக் கடிதங்களைச் செல்லுபடியானதாகவும், ஆதாரமானதாகவும் வைத்துக் கொள்வார்கள்.

(l) சொத்தின் கட்டுமானத்தைப் பாதிக்கும் எவ்வித பொருள் சார்ந்த மாற்றமும் இடம்பெற்றிருக்கவில்லை என்றும்;

(m) கடன் வாங்குபவர்(கள்), அவர்களது தொழில், நிர்வாகம், மறுஒழுங்கமைப்பு, தொழில் நஷ்டமடைவது, திவால் ஆவதற்காக அல்லது கடன் வாங்கியவர்(களின்) பெறுபவர், நிர்வாகி அல்லது நீதிமன்ற அலுவலரை நியமிப்பதற்காக, அல்லது அதன் சொத்துக்கள் அல்லது பொறுப்பில் உள்ளவை அனைத்திற்கும் அல்லது எதற்கும், எவ்வித நடவடிக்கையையும் எடுத்திருக்கவுமில்லை, எவ்வித செயல்பாட்டையும் எடுத்திருக்கவுமில்லை அல்லது சட்ட நடவடிக்கைகளைத் துவக்கியிருக்கவோ அல்லது கடன் வாங்கியவர்களுக்கு எதிராக அச்சுறுத்தியிருக்கவோ இல்லை;

(n) சொத்தின் கட்டுமானத்தைப் பாதிக்கும் எவ்வித பொருள் சார்ந்த மாற்றங்களும் இடம்பெற்றிருக்கவில்லை என்றும்;

(o) இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றிக் கொடுப்பதும், இதன் கீழுள்ள அதன் கடமைகளின் செயல்திறனும் (i) பொருந்துகிற சட்டம், கட்டளை அல்லது ஒழுங்குமுறை எதற்கும் அல்லது கடன் வாங்கியவர்கள் உடன்பட்டுள்ள நீதிமன்றத் தீர்ப்பு அல்லது உத்தரவு எதற்கும் முரண்படவில்லை, (ii) முரண்படவோ அல்லது விதிகள் எதன் விதிமீறலில் போய் முடியவோ அல்லது கடன் வாங்கியவர்கள் ஒரு தரப்பினராக இருக்கிற ஏற்கெனவே உள்ள ஒப்பந்தம் எதன் கீழுமுள்ள எந்த உடன்படிக்கை, நிபந்தனைகள் மற்றும் வரையறைகளைத் தானாகவே அமைக்கவோ இல்லை அல்லது (iii) சங்கம் / கூட்டு நிறுவன பத்திரம் / நம்பிக்கைப் பத்திரம் / சங்கத்தின் உப சட்டங்கள் அல்லது கடன் வாங்கியவர்களின் மற்ற அமைப்பு ஆவணங்களின் எந்த புரிந்துணர்வு அல்லது சட்டப் பிரிவுகளின் ஷரத்திற்கும் எதிரானதாகவோ அல்லது முரண்படவோ இல்லை;

(p) இந்த ஒப்பந்தத்தின் கீழ் அவர்களுக்குள்ள அனைத்து அல்லது எந்தக் கடப்பாடுகளையும் செய்வதற்கான கடன் வாங்கியவர்களின் திறனைப் பொருள் சார்ந்து மற்றும்/அல்லது நிதிசார்ந்து பாதிக்கக்கூடிய, மிகச் சமீபத்திய தணிக்கை செய்த நிதிநிலை அறிக்கைகளின் தேதியிலிருந்து கடன் வாங்கியவர்களின் நிதி நிலைமையில் எவ்வித பொருள்சார்ந்த எதிரிடை மாற்றமும் இருந்திருக்கவில்லை, அல்லது நிறுவனத்தின் நலனுக்குத் தப்பபிப்பிராயமாக இருக்கிற அல்லது இருக்கக்கூடிய எந்த நிகழ்வும் இருந்திருக்கவில்லை;

(q) கடன் வாங்குவதை, இதன் கீழ் மற்றும்/அல்லது இக்கடன் சம்பந்தமாக கடன் வாங்குபவர்(கள்) தங்களது கடப்பாடுகளைச் சந்திப்பதற்கான திறனை, மற்றும்/அல்லது கடன் வாங்குபவர்(களின்) நிதிநிலைமையை, மற்றும்/அல்லது இதன் கீழ் நிறுவனம் தனது உரிமைகளை நிலைநாட்டிக் கொள்வதற்கான திறனை மற்றும்/அல்லது இக்கடனின் கீழ் உள்ள நிலுவைத் தொகைகளையும், கடன் வாங்கியவர்(கள்) செலுத்த வேண்டியுள்ள தொகைகளைச் செலுத்தப் பெறுவதை, ப் பொருள் சார்ந்து தீர்மானிப்பதாக இருக்கிற எவ்வித யதார்த்தங்களோ, சூழ்நிலைகளோ அல்லது நிகழ்வுகளோ, நிகழ்ந்திருக்கவில்லை அல்லது, கடன் வாங்கியவர்(களின்) கணக்கின்படி, நடக்க வாய்ப்பில்லை;

(r) கடன் வாங்குபவர்(கள்) தான் சொத்தைக் கையகப்படுத்திக் கொள்வதற்கு / கட்டுமானம் செய்து கொள்வதற்குத் தனிப்பட்ட விதத்தில் பொறுப்பானவர்களாக இருப்பார்கள் அதோடு அச்சொத்தைக் கையளிப்பதில் / கட்டுமானம் செய்வதில் ஏற்படுகிற தாமதம் எதற்கும் FICCL நிறுவனம் பொறுப்பாகாது. கடன் வாங்கியவர்(கள்), மேலுள்ளவை சம்பந்தமாகவுள்ள எவ்விதப் பொறுப்பையும் FICCL நிறுவனத்திற்கு

இல்லாமல் செய்கிறார்கள் அதோடு கடன் வாங்கியவர்(கள்) அச்சொத்து இன்னமும் கையில் வந்து சேரவில்லை என்ற முகாந்திரத்தில் வரையறுத்துள்ள கடன் தவணைகளைச் செலுத்துவதை நிறுத்தி வைக்கக் கூடாது;

| | | FICCL நிறுவனத்திற்காக |
|---|---|---|
| கடன் வாங்குபவர் | கூட்டாக-கடன் வாங்குபவர் | அங்கீகாரம்பெற்ற கையொப்பதாரர் |



(s) கடன் வாங்கியவர்(கள்), எதன் அடிப்படையிலும் மற்றும்/அல்லது எந்தச் சூழ்நிலைகளிலும், அது எதுவாயிருந்தாலும், இதன் மூலம் ஆழ்ந்து பரிசீலனை செய்த வசதிகள் அல்லது பரிவர்த்தனை தொடர்பாக, இதன் கீழ் FICCL நிறுவனம் செய்யும் எவ்விதச் செயல்கள் அல்லது செயல்பாடுகள், அது எதுவாயிருந்தாலும், மற்றும்/அல்லது இதிலுள்ள விதிகளின்படி FICCL நிறுவனம் எடுத்திருக்கிற அல்லது எடுக்காமல் விட்டிருக்கிற வசதிகள் சம்பந்தமாக மற்றும் அல்லது இங்குள்ளதைத் தொடர்ந்து மற்றும்/அல்லது FICCL நிறுவனமாக அல்லது அதன் வரவு வைப்பவராக, அதன் நலன்கள் மற்றும் உரிமைமைகள் எதையும் பேணிக்காப்பதற்காக எவ்விதமான நேரடியான, மறைமுகமான அல்லது விளைவாக ஏற்படுகிற தண்டனைக்குரிய சேதங்களை அல்லது இழப்பீடுகளை, FICCL நிறுவனத்திடமிருந்து கோரிப்பெற அல்லது மீட்க நாட மாட்டார்கள் என்பதாகக் கடன் வாங்கியவர்கள் பிரதிநிதித்துவம் செய்து, உத்திரவாதமளிக்கிறார்கள்;

(t) இந்த ஒப்பந்த விதிகளில், கடன் வாங்குபவர்(கள்) கடன் தவணைகளைத் திருப்பிச் செலுத்துவதில் அல்லது செலுத்த வேண்டியுள்ள மற்ற தொகைகளைச் செலுத்துவதில் கடமை தவறுகிற நிலையில், FICCL நிறுவனம் பொருத்தமானது என நிதானிக்கிற எந்த முறையிலும், அது எதுவாக இருந்தாலும், சொத்தை விற்பனை செய்ய, சேர்த்துக் கொள்ள அல்லது வில்லங்கம் ஏற்படுத்துவதற்கான முழு சுதந்திரமும் FICCL நிறுவனத்திற்கு இருக்கும் என்றும், கடன் வாங்கியவர்(கள்) சொத்தை, எவ்விதத் தயக்கமோ அல்லது எதிர்ப்போ இல்லாமல், அமைதியாக, காலியாக, சமாதானமாக கையளிக்க வேண்டும் என்றும், சொத்தைக் கையகப்படுத்திக் கொள்வதற்கு FICCL நிறுவனத்திற்கு முழுச் சுதந்திரம் இருக்கும் என்றும்.

6.2 கடன் வாங்கியவர்(கள்), இந்த ஒப்பந்தத் தேதிக்குப் பிறகு எழுகிற, கொடுத்துள்ள பிரதிநிதித்துவம் மற்றும் உத்திரவாதங்கள் எதையும், கடன் வாங்குபவர்களின் நிதிசார்ந்த அல்லது வர்த்தக நிலைமை அல்லது எதிர்கால வாய்ப்புகளுக்குப் பொருள் சார்ந்து எந்த வகையிலும் உண்மையில்லாததாக, துல்லியமற்றதாக அல்லது தவறாகக் கொண்டு செல்கிற எந்தச் சூழ்நிலைகளையும் குறித்து அவர்கள் தெரிய வந்தால், FICCL நிறுவனத்திற்கு எழுத்துப்பூர்வமாக உரிய நேரத்தில் அறிவிக்கப் பொறுப்பேற்றுக் கொள்கிறார்கள்.

## சட்டப்பிரிவு 7
## உடன்படிக்கைகள்

### 7.1 உடன்படும் உடன்படிக்கைகள்:

கடன் வாங்குபவர்(கள்), இந்த ஒப்பந்தத்தின் கீழ் செலுத்த வேண்டியதாக இருக்கிற தொகைகள் நிலுவையாகவே இருக்கிற காலம் வரைக்கும், இதன் கீழ் செலுத்த வேண்டிய பணம் அனைத்தையும் முழுமையாகவும், இறுதியாகவும் செலுத்தித் தீர்க்கும் வரைக்கும், அவர்கள், FICCL நிறுவனம் எழுத்துப்பூர்வமாக இணக்கத்தைத் தள்ளுபடி செய்தால் ஒழிய, பின்வருமாறு, உடன்படிக்கை செய்து, பொறுப்பேற்றுக் கொள்கிறார்கள்:

(a) அவர்கள் FICCL நிறுவனத்திடம் சொல்லியுள்ள, சொத்தை வாங்குவது / கட்டுமானம் செய்வது /மேம்பாடு செய்வது / விரிவாக்கம் செய்வதற்காக மட்டுமே கடனை உபயோகிப்பார்கள் என்றும், வேறு எந்த நோக்கத்திற்காகவும், அது எதுவாயிருந்தாலும் அதை உபயோகிக்க மாட்டார்கள் என்றும்;

(b) கடனையும், அதிலுள்ள வட்டியையும், இந்த ஒப்பந்தத்தின் கீழ் FICCL நிறுவனம் கோருவதன் பேரில், FICCL நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய பணம் அனைத்தையும் செலுத்தி விடுவார்கள் என்றும். கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான திட்டம் ஒன்றைக் குறிப்பிடுகிற / வழங்குகிற போதிலும், கடன் வாங்குபவர்(கள்), இங்கே குறிப்பிட்டுள்ள ஒப்பந்தத்தின் கீழுள்ள ஒட்டுமொத்தக் கடனையும், மற்ற நிலுவைத் தொகைகளோடு சேர்த்துச் செலுத்தப் பெறுவதற்கான உரிமை FICCL நிறுவனத்திற்கு இருக்கும் என்பதை ஒப்புக் கொள்கிறார்கள்;

(c) இந்த ஒப்பந்தத்தின் கீழ் அவர்களுக்குள்ள கடமைகளுக்குள் நுழைந்து, அவற்றைச் செய்து முடிக்கவும், இந்த ஒப்பந்தத்திற்குத் தடயமாக, சட்டப்பூர்வத் தன்மை, செல்லுபடியாகும் தன்மை, அமலாக்கும் தன்மை அல்லது அனுமதிக்கும் தன்மையைப் பார்த்துக் கொள்ளவும் இயலச் செய்வதற்கு அவசியமாகிற அனைத்து அதிகாரமளிப்புகள், அங்கீகாரங்கள், உரிமங்கள் மற்றும் ஒப்புதல்களின் விதிகளுக்கு இணங்கவும், அவற்றை முழு அளவில் கடைபிடிக்க அவசியமாகிற அனைத்தையும் செய்யவும், அவற்றை நடைமுறைப்படுத்தவும் தேவையானவற்றைப் பெற்று, அவற்றுக்கு இணங்கி நடக்கவும் செய்வார்கள் என்றும்;

(d) கடன் வாங்கியவர்களைப் பாதிக்கிற, பொருள்சார்ந்த வழக்கு, மத்தியஸ்தம், அல்லது மற்ற நடவடிக்கைகள் குறித்தும், இனிமேல் அது போன்ற நடவடிக்கைகளை எடுக்கத் துவங்குவதன் பேரில் அல்லது கடன் வாங்கியவர்களுக்கு எதிராகப் பணம் தருமாறு கோரி எந்த நபர்களும் அச்சுறுத்துவது அல்லது கடன் வாங்கியவர்(கள்) கொடுத்துள்ள உத்திரவாதம் அல்லது பிணையம் எதையும் கடன் வாங்கியவர்(களுக்கு) எதிராக அமல்படுத்துவது குறித்தும் FICCL நிறுவனத்திற்குத் தெரிவிப்பார்கள் என்றும்;

(e) கடன் வாங்கியவர்(களை) எதிரிடையாகப் பாதிக்கக்கூடிய அல்லது இந்த ஒப்பந்தத்தின் கீழ் அவர்களது கடமைகளைச் செய்வதற்கான அவர்களது திறனைப் பாதிகிற, அவர்களுக்குத் தெரிய வருகிற எந்தவொரு நிகழ்வு குறித்தும் உரிய நேரத்தில் FICCL நிறுவனத்திற்குத் தெரிவிப்பார்கள் என்றும்;

(f) கடமை தவறும் நிகழ்வு எதுவும் நடப்பது குறித்தும் அதற்குத் தீர்வு காண்பதற்காக எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும், உரிய நேரத்தில் FICCL நிறுவனத்திற்குத் தெரிவிப்பார்கள் என்றும் அதோடு அவ்வபோது, FICCL நிறுவனத்திற்கு அவ்விதம் அவசியமானால், அது போன்ற உறுதிப்படுத்தலில் மற்றபடி சொல்லியுள்ளபடி தவிர்த்து, அதுபோன்று கடமை தவறிய நிகழ்வு எதுவும் நடைபெறவில்லை என்று எழுத்துப்பூர்வமாக FICCL நிறுவனத்திற்கு உறுதி செய்வார்கள் என்றும்;

(g) சொத்தை வாங்குவதை / கட்டுமானம் செய்வதை முறையாகப் பூர்த்தி செய்து, உரிய நகராட்சி மற்றும்/அல்லது மற்ற அதிகாரத்தினர் வழங்குகிற, குடிபுகுதல் / கட்டுமானம் நிறைவு பெறுதல் சான்றிதழின் சான்று பெற்ற அசல் நகலைப் பெற்று, FICCL நிறுவனத்திடம் சமர்ப்பிப்பார்கள். அந்தந்த நிலைக்குத் தக்கபடி, கடன் வாங்குபவர்(களுக்கும்), கட்டிடம் கட்டுபவர்கள் / மேம்பாடு செய்பவர்கள் / விற்பனையாளருக்கும் இடையே செய்து கொள்கிற விற்பனை ஒப்பந்தந்தம், செல்லுபடியானதும், ஆதாரமாகவும் இருக்கிறது;

(h) கடன் வாங்கியவர்(களின்) வேலைவாய்ப்பில் / தொழிலில் அல்லது வேலையில் ஏற்படுகிற மாற்றம் எதையும் குறித்து அது போன்ற மாற்றம் ஏற்பட்ட 7 நாட்களுக்குள் FICCL நிறுவனத்திற்கு அறிவிப்பார்கள் என்றும்;

(i) சொத்தை வைத்திருப்பது குறித்த விதிகள் மற்றும் நிபந்தனைகள் அனைத்தையும், பொருந்துமானால் உரிய கூட்டுறவு சங்கம், சங்கம், நிறுவனம் அல்லது வேறு எந்த அதிகாரத்தினரின் அனைத்து விதிகள் மற்றும் நிபந்தனைகளையும், துணைச் சட்டங்களையும் உரிய முறையிலும், காலம் தவறாமலும் கடைபிடிப்பார்கள் மற்றும் சொத்து அல்லது அதன் உபயோகம் சம்பந்தமான அல்லது அது விஷயமான அதுபோன்ற பராமரிப்பு மற்றும் மற்ற செலவுகள், செலுத்த வேண்டியுள்ள தொகைகள் மற்றும் வெளிச்செலவுகளைச் செலுத்துவார்கள்;

(j) தீவிபத்து மற்றும் மற்ற வழக்கமாக ஏற்படுகிற ஆபத்து மற்றும் இன்னல்களுக்கு எதிராக, FICCL நிறுவனத்திற்கு அவசியமாகக் கூடியதோர் தொகைக்கு, FICCL நிறுவனத்திற்கு ஏற்புடைய எந்தக் காப்பீட்டு நிறுவனத்திலும், காப்பீடு செய்து, தொடர்ந்து காப்பீடு செய்து வைப்பார்கள் அதோடு அக்காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் FICCL நிறுவனத்தையே தனிப்பட்ட பயனாளியாக ஆக்கி, அதற்கான அத்தாட்சியைக் கொடுக்குமாறு சொல்லும் போதெல்லாம் கொண்டு வந்து கொடுப்பார்கள்;

(k) நிறுவனத்தை, அதன் அலுவலர்களை, பணியாளர்களை, முகவர்களை அல்லது நிறுவனம் அங்கீகரித்துள்ள எவரையும், சொத்தை ஆய்வு செய்யும் நோக்கத்திற்காக நியாயமான அனைத்து நேரங்களிலும் சொத்திற்கான அணுகல் கொள்ள அனுமதிப்பார்கள்;

(l) அரசாங்க அமைப்பு அல்லது ஆணையம் எதற்கும், அவ்வப்போது செலுத்தக்கூடிய, வரிகள், மதிப்பீட்டு நிலுவைகள், சுங்கங்கள், விதிப்புகள் அனைத்தையும் தொடர்ச்சியாகச் செலுத்தி விடுவார்கள் என்றும்;

(m) விதித்துள்ள அல்லது இந்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து அல்லது இதன் கீழ் வழங்குகிற ஆவணங்கள் எதிலுமுள்ள, அனைத்து அரசாங்கக் கட்டணங்கள், வரிகள் அல்லது அபராதங்கள் செலுத்தி, FICCL நிறுவனத்திற்குத் திருப்பிக் கொடுத்துவிடுவார்கள் என்றும்;

(n) FICCL நிறுவனத்தின் வேண்டுகோளின் பெயரில், இந்த ஒப்பந்தத்தின் நோக்கத்தை எடுத்துச் செல்வதற்குத் தேவைப்படக்கூடிய அதுபோன்ற செயல்கள், பத்திரப் பதிவு ஒப்பந்தங்கள், ஆவணங்கள், பொறுப்பேற்புகளைச் செய்து முடித்து நிறைவேற்றுவார்கள்;

(o) பிணையச் சொத்தை உருவாக்கி, FICCL நிறுவனத்திற்கு அவசியமாகிற முறையிலும், விதத்திலும் பிணைய ஆவணங்களை நிறைவேற்றுவார்கள்.

(p) சொத்தின் கட்டுமான முன்னேற்றம் குறித்து FICCL நிறுவனத்திற்கு சீரான கால இடைவெளிகளில் தெரிவிப்பது அதோடு, அச்சொத்து காலி நிலத்தைக் கொண்டிருந்தால் ஒரு ஆண்டிற்குள் சொத்தில் கட்டுமானத்தை ஆரம்பிப்பது;

### 7.2 எதிர்மறை உடன்படிக்கைகள்:

கடன் வாங்குபவர்(கள்), இந்த ஒப்பந்தத்தின் கீழ் செலுத்த வேண்டியதாக இருக்கிற தொகைகள் நிலுவையாகவே இருக்கிற காலம் வரைக்கும், இதன் கீழ் செலுத்த வேண்டிய பணம் அனைத்தையும் முழுமையாகவும், இறுதியாகவும் செலுத்தித் தீர்க்கும் வரைக்கும், அவர்கள் நிறுவனத்தின் எழுத்துப்பூர்வ ஒப்புதலைக் கொடுக்காமல், பின்வருமாறு செய்ய மாட்டார்கள் என்று, மேற்கொண்டும் உடன்படிக்கை செய்து, பொறுப்பேற்றுக் கொள்கிறார்கள்:

(a) கடனை, எந்த யூக அல்லது சமூக விரோத அல்லது சட்ட விரோத நோக்கங்களுக்காகவும் அல்லது கடனை எதற்காகக் கொடுத்துள்ளோமோ அது தவிர்த்த மற்ற நோக்கங்கள் எதற்காகவும் உபயோகிப்பது;

(b) சொத்தை விட்டுக் கொடுப்பது அல்லது குத்தகைக்குக் கொடுப்பது அல்லது விட்டு உரிமம் கொடுப்பது அல்லது மற்றபடி அது எவ்விதமாக இருந்தாலும் சொத்தை அல்லது அதன் எந்தப் பகுதியையும் கையில் வைத்திருப்பதை விட்டுக் கொடுப்பது;

(c) சொத்தை விற்பது, ஒற்றி வைப்பது, குத்தகைக்கு விடுவது, ஒப்படைப்பது அல்லது மற்றபடி அது எவ்விதமாக இருந்தாலும் ஒதுக்கீடு செய்வது அல்லது பெயர் மாற்றம் செய்வது அல்லது அதில் அல்லது அதன் ஏதேனுமொரு பகுதியில் மூன்றாம் தரப்பினர் நலன் எதையும் உருவாக்குவது அல்லது சொத்தில் அது எதுவாக இருந்தாலும், எவ்விதப் பொறுப்பு, வில்லங்கம் அல்லது பாத்தியதை எதையும் இருக்க அனுமதிப்பது;

(d) சொத்து உபயோகத்தை மாற்றுவது;

(e) சொத்தை கடன் வாங்குபவர்(களின்) வேறு எந்தச் சொத்தோடும், அல்லது பக்கத்தில் உள்ள சொத்து எதுவோடும் ஒன்றாக்குவது அல்லது இணைப்பது, அல்லது சொத்தில் உரிமைப் பாதை அல்லது வேறு ஏதேனும் குறுக்காகச் செல்லு பாதைக்கான எதையும் உருவாக்குவது;

(f) மூன்றாம் தரப்பு நபர் எவர் பெயரிலும் அதிகாரப் பத்திரம், இழப்பீடு அல்லது வேறு பத்திரப் பதிவு எதையும் நிறைவேற்றி, அவரை எந்த வகையிலும் சொத்து சம்பந்தமாக கொடுக்கல் வாங்கலில் ஈடுபட இயலச் செய்வது;

(g) சொத்தினை, எந்தக் குடும்ப ஏற்பாட்டிலும் அல்லது பிரிப்பிலும் உட்படுத்துவது அல்லது சொத்தை இந்து பிரிவுபடாத குடும்பச் சொத்தாக மாற்றுவது;

(h) FICCL நிறுவனத்தின் விதிகளின்படி, கடனை வட்டியோடும், வேறு எந்தத் தொகைகளோடும் சேர்த்து முழுமையாகச் செலுத்தாமல் வேலை அல்லது தொழிலுக்காக அல்லது நீண்ட காலம் வெளிநாட்டில் தங்குவதற்காக இந்தியாவை விட்டு வெளிச்செல்வது;

(i) FICCL நிறுவனத்திடம் முன்னமே எழுத்துப்பூர்வ ஒப்புதல் பெறாமல், எந்த நபர் / வங்கி / நிதி நிறுவனத்திலிருந்தும், கடனைப் பெற்றுள்ள அதே நோக்கத்திற்காக, மேற்கொண்டு கடன் மற்றும் / அல்லது நிதி வசதி எதையும் பெறுவது;

| | | |
|---|---|---|
| | | FICCL நிறுவனத்திற்காக |
| கடன் வாங்குபவர் | கூட்டாக-கடன் வாங்குபவர் | அங்கீகாரம்பெற்ற கையொப்பதாரர் |

## சட்டப்பிரிவு 8
## கடமை தவறும் நிகழ்வுகள்

8.1 பின்வரும் நிகழ்வுகள் அல்லது இவற்றையொத்த நிகழ்வுகள் எதுவும் நிகழ்வது, ஒவ்வொன்றும், கடமை தவறும் நிகழ்வு என்றே அமையும்:

(a) கடமை தவறுவதல்:
கடன் வாங்கியவர்(கள்), எந்தத் தொகையையும், அது அசலோ அல்லது வட்டியோ அல்லது மற்றபடி இந்த ஒப்பந்தத்தின் கீழ் மற்றும்/அல்லது கடனின் கீழ் அவர்களிடமிருந்து வரவேண்டிய தொகையோ அதை, வரையறுத்துக் கொடுத்துள்ள நேரத்தில் மற்றும் அல்லது அதற்குள், அதோடு அதில் குறிப்பிட்டுள்ள முறையில், இதன் கீழோ, மற்றும்/அல்லது இங்குள்ளதைத் தொடர்ந்து நிறைவேற்றிய அல்லது எழுதிய மற்ற எந்த ஆவணத்தின் விதிகளுக்கு ஏற்பவோ, செலுத்தத் தவறுவது;

(b) பொதுவாகக் கடமை தவறுவது:
விதிமீறுவது, அல்லது கடைபிடிக்கத் தவறுவது, அல்லது கடன் வாங்கியவர்கள் இந்த ஒப்பந்தத்தின் கீழ் மற்றும்/அல்லது இந்த ஒப்பந்தத்தில் இருக்கிற பிரதிநிதித்துவம் அல்லது உத்திரவாதம் எதுவும் உட்பட, கடன் அல்லது விதி, நிபந்தனை, ஷரத்து எதையும் பொறுத்து, தங்களுக்குள்ள கடமைகள் அல்லது பொறுப்புகளைக் கடைபிடிக்கத் தவறுவது;

(c) தவறான பிரதிநிதித்துவம்:
கடன் வாங்கியவர்(களின்) தரப்பில் செய்கிற அல்லது செய்ய நிதானிக்கிற அல்லது இந்த ஒப்பந்தத்தில் அல்லது எந்தவொரு அறிவிப்பு, சான்று அல்லது அறிக்கை அல்லது மற்ற இங்கே குறிப்பிட்டுள்ள அல்லது இதன் கீழ் கொடுத்துள்ள மற்ற எழுத்துப்பூர்வமானதில் திரும்பச் செய்கிற அல்லது இதைத் தொடர்ந்து செய்கிற எந்தப் பிரதிநிதித்துவம் அல்லது உத்திரவாதம் அல்லது வாக்குறுதி அல்லது உடன்படிக்கையும், பொருள் சார்ந்த விதம் எதிலும் சரியல்லாததாக அல்லது தவறாக நடத்துவதாக இருக்கிறது அல்லது இருக்க நிரூபணமாகிறது;

(d) குறுக்குக் கடமை தவறுதல்:
கடன் வாங்கியவர்களுக்கும், FICCL நிறுவனத்திற்கும் இடையே செய்து கொள்கிற வேறு எந்த ஒப்பந்தம் அல்லது மற்ற எழுத்தின் கீழும், அல்லது கடன் வாங்கியவர்(களின்) கடன்பட்ட நிலை குறித்து செய்து கொண்ட வேறு எந்த ஒப்பந்தம் அல்லது எழுத்தின் கீழும், அல்லது அதன் கீழுள்ள எந்தவொரு உடன்படிக்கை, விதி அல்லது பொறுப்பைச் செய்து முடிப்பதில், கடன் வாங்கியவர்(கள்) தங்களது பொறுப்பைச் செய்து முடிப்பதில் கடமை தவறுவது எதுவும், அல்லது கடன் வாங்கியவர்களின் கடன்பட்ட நிலை எதற்கும் பணம் நிலுவையிலுள்ள போது பணம் செலுத்தாமல் இருப்பது அல்லது கடன் வாங்கியவர்களிடம் கடன் கொடுத்துள்ளவர் எவரும் கடன்பட்ட நிலையில் நிலுவையிலுள்ள தொகையையும், செலுத்த வேண்டியுள்ள தொகையையும், அத்தொகை மற்றபடி நிலுவையாகிவிடக்கூடிய தேதிக்கு முன்னால் செலுத்த வேண்டிய தொகை எதையும் பிரகடனம் செய்ய உரிமையுள்ளவராகுவது அல்லது கடன் வாங்கியவர்கள் கொடுத்துள்ள உத்திரவாதம் அல்லது ஈட்டுறுதி அல்லது அடமானம் அல்லது அவர்கள் செய்து கொண்டுள்ள துணை ஒப்பந்தத்திற்கு, அது நிலுவையிலிருக்கும் போது அல்லது அது குறித்துக் கேட்கும் போது மதிப்பளிக்காமல் போகுதல்;

(e) கடன்களுக்குப் பணம் கொடுக்க இயலாமல் போகுதல்:
கடன் வாங்கியவர்(கள்) பொதுவாகத் தங்களது கடன்களுக்கு, அவை நிலுவையாகும் போது அதற்குப் பணம் செலுத்த இயலவில்லை மற்றும்/அல்லது நிதி நெறுக்கடி ஏற்படும் நிலையில் அல்லது கடமை தவறியது எதையும் சீர்தூக்கிப் பார்ப்பதில், அது தொடர்பான ஒப்பந்தம் எதன் கீழும் கடமை தவறிய நிலைகள் அல்லது கடமை தவற வாய்ப்புள்ள நிலைகளில், (அதை எவ்விதம் விவரித்திருந்தாலும்), கடன்பட்ட நிலை எது குறித்தும், அவர்களுக்குக் கடன் கொடுத்த ஒருவர் அல்லது அதற்கு மேற்பட்டவர்களோடு, பொதுவாக மறுபடியும் சரிக்கட்டுவதற்கு அல்லது மறுதிட்டமிடுவது என்ற பார்வையோடு, பேச்சுவார்த்தைகளைத் தொடுக்க ஆரம்பிக்கிறார்கள் மற்றும்/அல்லது அவர்களுக்குக் கடன் கொடுத்தவர்களின் நலனுக்காக அல்லது அவர்களோடு செய்து கொள்கிறதோர் இணைப்பாக்கத்திற்காக ஒரு பொதுவான உரிமை மாற்றுதலைச் செய்து கொள்கிறார்கள் மற்றும்/அல்லது ஒப்புக் கொள்கிறார்கள் அல்லது பொறுப்பு எதையும் கொடுத்துத் தீர்க்கும்படி உத்தரவு பெறுகிறார்கள் அதோடு அது போன்ற பொறுப்பை நிலுவையில் இருக்கும் போது செலுத்தவில்லை (கடன்பட்ட நிலை எதன் இந்தத் துணை வகுப்பில் இருக்கிற எதன் சந்தேகத்தையும் தவிர்ப்பதற்கான பார்வைக் குறிப்பில், நம்பகமாக வாதாடியதும், அதன் சார்பாகக் கடன் வாங்கியவர்களுக்கு எதிராக அதுபோன்ற கடன்பட்டநிலைக்குப் பணம் கொடுத்துத் தீர்க்குமாறு எந்தவொரு நீதிமன்ற உத்தரவும் இருந்திருக்கவில்லை என்ற எந்தவொரு கடன் பட்டநிலையும் அடங்காது);

(f) தீர்ப்பாணைத் தொகையைச் செலுத்தாமலிருப்பது:
கடன் வாங்கியவர்(கள்), எந்தவொரு நீதிமன்ற உத்தரவின் அல்லது தீர்ப்பணையின் கீழ் அல்லது கடன் வாங்கியவர்களுக்கு எதிரான நீதிமன்றத் தீர்ப்பின் கீழுமான தொகையைக் கொடுக்கத் தவறுகிறார்கள்;

(g) கடன் சொத்தைக் கையகப்படுத்தல் அல்லது பேரவலம்:
கையகப்படுத்துவது அல்லது பேரவலம் விதிக்கப் பெறுவது அல்லது ஒரு வில்லங்க அல்லது மற்ற அலுவலர் கடன் வாங்கியவர்களின் சொத்து, பொறுப்பிலுள்ளவை அல்லது அசையாச் சொத்துக்களை முழுவதையும் அல்லது அதில் ஒரு பகுதியைக் கையகப்படுத்துவது, அல்லது கடன் வாங்கியவர்களின் சொத்து, பொறுப்பிலுள்ளவை அல்லது அசையாச் சொத்துக்களை முழுவதிலும் அல்லது அதில் ஒரு பகுதியில் இருக்கிற வில்லங்கம் எதுவும் முன் காணக்கூடியதாக ஆகிறது;

(h) தொழில் முடக்குதல்:
கடன் வாங்கியவர்கள், இதிலுள்ள தேதியில் தாங்கள் நடத்தி வருகிற தொழிலை முடக்கி விடுகிறார் அல்லது முடக்கி விடுவதாக மிரட்டுகிறார்;

(i) தொழில் நொடிப்பு:
கடன் வாங்கியவர்(கள்), (i) கடன் வாங்கியவர்களை நியாயம் தீர்க்கவிருக்கிறதற்காக அல்லது தொழில் நொடிந்து போனதாக அல்லது திவாலானதாக காணவிருக்கிறதற்காக, (ii) கடன் வாங்கியவர்கள் தொழிலை முடக்குகிறார்கள் அல்லது கலைப்பதற்காக, (iii) கடன் வாங்கியவர்(களுக்காக) அல்லது அவர்களது பொறுப்பிலுள்ள, சொத்துக்கள் மற்றும் அசையாச் சொத்துக்கள் முழுவதையும் அல்லது அதன் ஒரு பகுதிச் சொத்தை விற்றுத்தீர்ப்பவர், நிர்வாகி, அறங்காவலர் அல்லது பெற்றுக் கொள்பவர் அல்லது அதையொத்த அலுவலர் அல்லது ஸ்தாபனத்தைக் ஒருவரை நியமிப்பதற்காக, நடவடிக்கை எதையும் அல்லது சட்டப்பூர்வ நடவடிக்கை எதையும் அல்லது நடபடிக்கைகளை எடுக்க ஆரம்பிக்கிறார்கள் அல்லது மற்ற நடவடிக்கைகளை எடுத்து விட்டார்கள்;

(j) கட்டாயக் கையப்படுத்தல்:
கடன் வாங்கியவர்(களின்) பொறுப்பிலுள்ளவை, சொத்துக்கள் அல்லது அசையாச் சொத்துக்கள் அனைத்தையும் அல்லது குறிப்பிடத்தக்க அனைத்தையும் அல்லது அதிலுள்ள நலன்களையும், அரசாங்க ஆணையம் அல்லது வேறு எந்த அமைப்பும் கைப்பற்றுகிறார்கள், நாட்டுடமையாக்குகிறார்கள், பறிக்கிறார்கள் அல்லது கட்டாயமாகக் கையகப்படுத்துகிறார்கள்;

(k) மறுதலித்தல்:
கடன் வாங்கியவர்கள், இந்த ஒப்பந்தத்தை மறுதலிக்கிறார்கள் அல்லது இந்த ஒப்பந்தத்தை மறுதலிக்கும் நோக்கம் ஒன்றுக்குத் தடயமாகிற செயல் அல்லது காரியம் எதையும் செய்யச் செய்கிறார்கள்;

(l) உரிமையாளரில்/நிர்வாகத்தில் ஏற்படுகிற மாற்றம்:
கடன் வாங்கியவர்(களின்) உரிமையாளரில் அல்லது நிர்வாகத்தில் பொருள் சார்ந்த மாற்றம் எதுவும் ஏற்படுகிறது, அது FICCL நிறுவனத்தின் தனிப்பட்ட அபிப்பிராயத்தில், FICCL நிறுவனத்தின் நலனைத் தப்பபிப்பிராயம் ஏற்படுத்தும் வண்ணம் பாதிக்கும்;

(m). (பொருள் சார்ந்த எதிரிடை மாற்றம்:
கடன் வாங்கியவர்(களின்) தொழில், அல்லது நிதி அல்லது மற்ற நிலைமை அல்லது இயக்கங்களில் அல்லது எதிர்கால வாய்ப்புகளில், FICCL நிறுவனம் தனிப்பட்ட முறையில் தீர்மானிக்கிறபடி, எவ்விதப் பொருள் சார்ந்த எதிரிடை மாற்றமும் போன்ற, இது மட்டும் தான் என்றில்லாமல், எவ்வகை நிகழ்வு அல்லது சூழ்நிலையும் ஏற்படுகிறது, அது, FICCL நிறுவனத்தின் தனிப்பட்ட அபிப்பிராயத்தில், FICCL நிறுவனத்தின் நலனுக்குத் தப்பபிப்பிராயமானதாக இருக்கிறது அல்லது FICCL நிறுவனத்தின் தனிப்பட்ட அபிப்பிராயத்தில் கடன் வாங்கியவர்(களின்) அல்லது இந்த ஒப்பந்தத்தின் கீழ் அவர்களது கடமைகள் எதையும் செய்து முடிப்பதற்கான மற்றும்/அல்லது மற்றபடி இந்தக் கடன் சம்பந்தமாகவும், இந்த ஒப்பந்தத்தின் மற்றும்/அல்லது கடனுக்கான விதிகள் எதற்கும் இணங்கி நடப்பதற்கான அவர்களின் திறனை நிதி நிலைமையைப் பொருள் சார்ந்து பாதிக்க வாய்ப்புள்ளது;

(n). பிணையச் சொத்தின் மதிப்புக் குறைதல்
கடனுக்கான பிணையச்சொத்தை உருவாக்கியுள்ள சொத்து எதுவும், நிறுவனத்தின் அபிப்பிராயத்தின்படி, மேற்கொண்டு பிணையச் சொத்தை வழங்க வேண்டும் எனும் அளவிற்கு மதிப்புக் குறைந்து போய், மேற்கொண்டு பிணையச் சொத்தை வழங்காமற் போகிற பட்சத்தில்

(o) சொத்தை விற்பது/விற்றுத் தீர்ப்பது:
சொத்து அல்லது அதன் எந்தப் பகுதியையும் வாடகைக்கு விடுகிறார்கள், குத்தகைக்கு விடுகிறார்கள், விற்பனை செய்கிறார்கள், விற்றுத் தீர்க்கிறார்கள், பொறுப்புக் கொடுக்கிறார்கள், வில்லங்கம் உண்டாக்குகிறார்கள் அல்லது மற்றபடி எந்த வகையிலும், அது எதுவாயிருந்தாலும் ஒதுக்குகிறார்கள் எனுப் பட்சத்தில்.

| கடன் வாங்குபவர் | கூட்டாக-கடன் வாங்குபவர் | FICCL நிறுவனத்திற்காக<br>அங்கீகாரம்பெற்ற கையொப்பதாரர் |
|---|---|---|

கடமை தவறுவது குறித்து மேற்கொண்டு நடைபெறுகிற நிகழ்வுகள்:

(i) கடன் வாங்கியவர்கள் கடனை அல்லது அதன் ஏதேனுமொரு பகுதியைத் தவறாகப் பயன்படுத்துகிறார்கள், அல்லது கடனை அல்லது அதன் ஏதேனுமொரு பகுதியை, FICCL நிறுவனம் கடனை எதற்காக அனுமதித்ததோ அதைத் தவிர வேறு நோக்கம் எதற்காகவும் உபயோகிக்கிறார்கள்;

(ii) கடன் வாங்கியவர்கள், இதன் கீழ் மற்றும்/அல்லது இக்கடன் சம்பந்தமாக அவர்களுக்குள்ள கடமைகள் குறித்து, இந்த ஒப்பந்தத்திற்குத் தடயமானதில் நிறைவேற்றம், கொண்டு போய்க் கொடுத்தல், செல்லுபடியாகும் தன்மை, அமலாக்கம் அல்லது அனுமதிக்கும் தன்மை தொடர்பாகச் செய்து கொடுக்க வேண்டியுள்ள, ஒப்புதல், அதிகாரமளித்தல், அங்கீகாரமளித்தல், அல்லது அது போன்றவை, அல்லது அரசாங்க அல்லது பொது அல்லது சட்ட அல்லது ஒழுங்குமுறை ஆணையத்தின் உரிமம் அல்லது அவர்களிடத்தில் பதிவு செய்து கொள்வது அல்லது அவர்களிடம் பிரகடனம் செய்து கொடுப்பது, அரசாங்க அல்லது பொதுத்துறை அமைப்புகள் அல்லது ஆணையத்திடம் பதிவு செய்து கொள்வது அல்லது அவர்களிடம் பிரகடனம் செய்து கொடுப்பது போன்றவற்றை FICCL நிறுவனம் ஏற்றுக் கொள்ள இயலாத ஒரு முறையில் மாற்றியமைக்கிறார்கள் அல்லது அவற்றுக்கு அனுமதியளிக்கிறார்கள் அல்லது திரும்பப் பெறுகிறார்கள் அல்லது அவற்றை முடித்துக் கொள்கிறார்கள் அல்லது அவை காலாவதியாகி, அவற்றைப் புதுப்பிக்காமல் விட்டு விடுகிறார்கள் அல்லது மற்றபடி அதன் முழு அளவிலும், விளைவிலும் இல்லாமல்ப் போய் விடுகிறது;

(iii) நிறுவனத்தின் முழுமையான விருப்புரிமையின் பேரில், எப்போதெல்லாம் அங்கே, செலுத்த வேண்டிய பணத்தைச் செலுத்தாமல் போவதற்கான வாய்ப்பு குறித்த தீர்மானமிருக்கிறதோ அப்போது;

(iv) கடன் வாங்கியவர்(கள்), சொத்தை, FICCL நிறுவனத்திடமிருந்து எழுத்துப்பூர்வமான முன் ஒப்புதல் பெறாமல், பொறுப்பு, வில்லங்கம் உருவாக்குதல் மற்றும்/அல்லது பெயர் மாற்றுதல், விற்பனை செய்தல் அல்லது அப்புறப்படுத்துதல்;

(v) எந்தவொரு ஆணையமும் பறிமுதல் செய்கிற, இணைத்துக் கொள்கிற அல்லது பாதுகாப்பில் எடுத்துக் கொள்கிற அல்லது சட்ட நடபடிக்கைகளின் பொருளாக ஆகிற பிணையப்பொருள்;

(vi) கடன் வாங்கியவர்கள், FICCL நிறுவனத்தினர், அதன் அலுவலர்கள், தணிக்கையாளர்கள், தொழில்நுட்ப நிபுணர்கள், நிர்வாக ஆலோசகர்கள், மதிப்பீட்டாளர்கள் அல்லது மேற்சொன்ன நோக்கத்திற்காக FICCL நிறுவனம் அதிகாரமளித்துள்ள வேறு எந்த நபரையும், ஆய்வு செய்ய அல்லது சரிபார்க்க அல்லது மதிப்பீடு செய்ய, சொத்துக்களை அனுமதிக்கத் தவறுகிறார்கள்;

(vii) கடன் வாங்குபவர்(கள்), இந்த ஒப்பந்தத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு ஏற்ப அல்லது FICCL நிறுவனம் கேட்கிறபடியும், கேட்கும் போதும், பின் தேதியிட்ட காசோலைகளைக் கொடுக்கிற பட்சத்தில்;

(viii) உத்திரவாதமளித்த எவரும் வழங்கியதோர் உத்திரவாதத்தில், உத்திரவாதத்தை திறனற்றதாக / செயலற்றதாக ஆக்குகிற (பொருந்தும் போதெல்லாம்) எவ்விதக் குறைபாடு / களங்கம்.

(ix) கடன் வாங்கியவர்(கள்) மரணமடைகிற இடத்தில் அல்லது கடனை ஒன்றுக்கும் மேற்பட்டவர்களுக்கு வழங்கியிருக்கிற பட்சத்தில், ஒன்றுக்கும் மேற்பட்ட கடன் வாங்கியவர்கள் மரணமடைகிற பட்சத்தில்;

(x) கடன் வாங்கியவர்கள், குடிமையியல் வழக்கு(கள்) அல்லது குற்றவியல் குற்றம்(கள்) எதிலும் ஈடுபடுகிறார்கள்;

(xi) கடன் வாங்கியவர்கள், FICCL நிறுவனத்திற்கு அவசியமாகிற தகவல்கள் / ஆவணம் எதையும் கொடுக்கத் தவறுகிறார்கள்.

## சட்டப்பிரிவு 9
## FICCL நிறுவனத்தின் நிவாரணங்கள்

9.1 மேற்சொன்னபடி, கடமை தவறிய நிகழ்வுகள் நிகழ்ந்த பிறகு எந்த நேரத்திலும், அப்போது, இங்குள்ள எதற்கும் முரன்பாடாக இருந்த போதிலும், FICCL நிறுவனத்திற்கு, அதன் முழுமையான விருப்புரிமையில், பின்வருவதில் ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேலானவற்றைச் செய்ய உரிமையிருக்கும்:

(i) கடனைக் கிடைக்கச் செய்வது அல்லது தொடர்ந்து கிடைக்கச் செய்வதற்கான நிறுவனத்தின் கடமையை நிறுத்தி வைக்கிறார்கள் என்பதாகப் பிரகடனம் செய்வது; மற்றும்/அல்லது

(ii) கடனும், அதிலுண்டான அனைத்து வட்டியும், அனைத்துச் செலவுகல், கட்டணங்கள், செலவினங்கள் மற்றும் இந்த ஒப்பந்தத்தின் கீழிருக்கிற மற்ற நிலுவையிலுள்ள கூட்டுத் தொகைகளும், கடனும் உடனடியாக நிலுவையாகி, அவை நிறுவனத்திற்குச் செலுத்தத்தக்கவையாகின்றன என்றும், இதில் இவையே உடனடியாக நிலுவையாகி, கடன் வாங்கியவர்கள் செலுத்தத்தக்கவையாக ஆகி, கடன் வாங்கியவர்கள், கடனின் கீழ் மற்றும்/அல்லது ஒப்பந்தத்தின் கீழ், அறிவிப்பிலுள்ள விதிகளுக்கு ஏற்ப, அறிவிப்பைப் பெற்றுக் கொண்ட 7 நாட்களுக்குள், மேற்கொண்டு எவ்வித அறிவிப்பும் இல்லாமல் அல்லது மற்ற சட்டப்பூர்வ சம்பிரதாயங்கள், அவை எவ்வையாக இருந்தாலும், அவை இல்லாமல், நிலுவையாக இருக்கிறதும், செலுத்தத்தக்கதாக இருக்கிறதுமான அனைத்துத் தொகைகளையும், செலுத்திவிட வேண்டும்; மற்றும்/அல்லது

(iii) பிணையச் சொத்தை நிறுவனத்தின் பெயரில் அமல்படுத்தி, வழக்குத்தொடுத்தல், சமத்துவத்தில், அல்லது சட்டத்தில் நடவடிக்கை எடுத்தல், அல்லது இரண்டும், அல்லது மற்றபடி, இந்த ஒப்பந்தத்தில் அடங்கியுள்ள உடன்படிக்கை, நிபந்தனை அல்லது விதி எதன் குறிப்பான செயல்திறனுக்காக அல்லது இந்த ஒப்பந்தத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகள் எதையும் விதிமீறியதற்கு எதிரானதோர் இடைக்காலத் தடையாணைக்காக, அல்லது இந்த ஒப்பந்தத்தில் கொடுத்துள்ள அதிகாரம் அல்லது உரிமை எதையும் பயன்படுத்துவதில் உதவியாக, அவர்களுக்கு சட்டம் அனுமதித்துள்ள, உரிமை, அதிகாரம் அல்லது நிவாரணம் எதையும் பயன்படுத்துதல்; மற்றும்/அல்லது

(iv) கடன் வாங்கியவர்கள், கடனை அல்லது அதன் ஒரு பகுதியை உரிய தவணைத் தேதியில் திருப்பிச் செலுத்துவதில் கடமை தவறுகிற பட்சத்தில் அதோடு அது போன்று கடமை தவறியது பதினைந்து நாட்கள் (15) என்ற காலத்திற்குத் தொடர்கிற பட்சத்தில், FICCL நிறுவனத்திற்கு, அனைத்து வட்டி, செலவுகள், கட்டணங்கள், செலவினங்கள் மற்றும் இவ்வொப்பந்தத்தின் கீழ் நிலுவையிலுள்ள மற்ற தொகை எதுவும் உட்பட, ஒட்டுமொத்தக் கடனையும் திரும்பக் கேட்பதற்கும், கடன் வாங்கியவர்(களுக்கு) ஏழு (7) நாட்கள் எழுத்துப்பூர்வ அறிவிப்பைக் கொடுத்து விட்டு, உரிமை இருக்கும். கடன் வாங்கியவர் நிலுவையிலுள்ள செலுத்த வேண்டிய தொகைகளை FICCL நிறுவனத்திற்குச் செலுத்தத் தவறுகிற பட்சத்தில், FICCL நிறுவனத்திற்கு, கடன் வாங்குபவர்(கள்) மேற்சொன்ன சொத்தை அனைத்துவிதங்களிலும் கடன் வாங்கியவர்(களின்) பொறுப்பிலும், செலவிலும் விற்றுத் தீர்ப்பதற்கு எடுக்க முடிகிற அளவிற்கு முழுமையாகவும், திறம்படவும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்கான உரிமை இருக்கும் அதோடு இத்தோடு அல்லது இதற்குப் பிறகு எந்த நேரத்திலும், கடன் வாங்கியவர்(களுக்கு) எவ்வித அறிவிப்பும் இல்லாமலும், சொத்தைக் கையகப்படுத்துவதற்காக அல்லது மீட்க அல்லது அதையே பெற்றுக் கொள்ள அதோடு அவசியமானால் பூட்டு அல்லது பெட்டிப் பூட்டு எதையும் அல்லது அங்கே காண்கிற தடுக்கும் கருவி எதையும் உடைக்கச் செய்வது FICCL நிறுவனத்திற்குச் சட்டப்பூர்வமானதாகவே இருக்கும், சொல்லியுள்ள சொத்தைப் பெற்றுக் கொள்பவராக, கடன் வாங்கியவர்(கள்) செய்ய முடிவதைப் போல முழுமையாகவும், திறம்படவும் அனைத்துக் காரியங்களையும் செய்வதற்கான அதிகாரத்தோடு FICCL நிறுவனத்தின் எந்த அலுவலர் அல்லது அலுவலர்களையும் அல்லது இது விஷயமாக அங்கீகாரம் பெற்ற எந்த நபரையும் நியமிப்பதற்கும் மற்றும்/அல்லது மேற்சொன்ன சொத்தை உரிமத்தில்

மற்றும்/அல்லது குத்தகையில் அல்லது FICCL நிறுவனம் தனது முழு விருப்புரிமையின் பேரில் முறையானது எனக் கருதுகிற வேறு எந்த அடிப்படையிலும் கொடுப்பதற்கு மற்றும்/அல்லது சொல்லியுள்ள சொத்தை பொது ஏலம் அல்லது தனியார் ஒப்பந்தம் மூலமாக விற்பனை செய்ய அல்லது அதையே அனைத்து விதங்களிலும், மதிப்பில் எவ்வித இழப்பு அல்லது குறைப்பிற்கும் கட்டுப்படாமல் அல்லது பதில் சொல்ல வேண்டியதிராமல், மற்றும்/அல்லது இதன் மூலம் கொடுத்துள்ள அதிகாரங்கள் எதையும் பயன்படுத்துவதற்குக் கட்டுப்படாமல், அல்லது அதுபோன்ற அதிகாரம் எதன் பயன்பாட்டால் ஏற்பட்ட இழப்பு எதற்கும், அதற்கான இரசீது எதையும் கொடுப்பதற்கும், வாங்கிய பணத்தைக் கொடுப்பதற்குக் மற்றும் FICCL நிறுவனம் அல்லது பெற்றுக் கொள்பவர், முறையானது என நினைக்கும் விற்பனையைச் செய்து முடிப்பதற்கான, அதுபோன்ற மற்ற செயல்கள் மற்றும் காரியங்கள் அனைத்தையும் செய்வதற்கு பொறுப்பாக இருக்காமல், விற்பனைக்கான ஒப்பந்தம் எதையும் திரும்பப் பெற்றுக் கொள்வதற்கான அல்லது மாற்றியமைப்பதற்கான அதிகாரத்தோடு, கடன் வாங்கியவர்களின் பொறுப்பிலும், செலவுகளிலும் விற்றுத் தீர்க்க, கான உரிமை FICCL நிறுவனத்திற்கு இருக்கும். கடன் வாங்கியவர்கள், விற்பனை எதையும் ஒழுங்குபடுத்துவதற்கு அல்லது FICCL நிறுவனம் செய்கிற மற்ற விற்றுத் தீர்க்கும் நடவடிக்கைக்கு எவ்வித எதிர்ப்பையும் எழுப்பக் கூடாது அல்லது விற்பனை செய்ய அல்லது விற்றுத் தீர்க்கும் நோக்கத்திற்காக, தரகர் அல்லது ஏலமெடுப்பவர் அல்லது மற்றவர் அல்லது FICCL நிறுவனம் அமர்த்தியுள்ள அமைப்பு அல்லது பெற்றுக் கொள்பவர் எவர் தரப்பிலும் ஏற்பட்ட எந்தச் செயல் அல்லது கடமை தவறியதிலிருந்து எழக்கூடிய இழப்பு எதற்கும் FICCL நிறுவனம் பொறுப்பாக இருக்காது. அதுபோன்ற விற்பனையினால் கிடைத்த நிகரத் தொகை, பிணையத் தொகையைச் செலுத்தப் போதுமானதாக இல்லை என்றால், FICCL நிறுவனத்தின் கைகளில் இருக்கிற பணம் அல்லது பணங்கள் எதையும் மீதத்தொகைக்குப் பணம் செலுத்துவதில் அல்லது அதன்பால் கடன் வாங்கியவர்(கள்) செலுத்த வேண்டியதாக உள்ள அல்லது அவர்களது அல்லாத அல்லது அவர்களுக்குரிய நிலுவையிலுள்ள பணம் எதையும் பயன்படுத்த, FICCL நிறுவனத்திற்குச் சுதந்திரம் இருக்கும் அதோடு அப்போதும் ஒரு பற்றாக்குறை இருக்கிற நிகழ்வில், கடன் வாங்கியவர்(கள்) அதுபோன்ற பற்றாக்குறையை அதோடு சேர்த்துச் செலுத்துவார்கள், இருந்தாலும் இங்கே இருக்கிற எதுவும் எந்த வகையிலும், கடன் வாங்கியவர்களுக்கு எதிராக இருக்கிற FICCL நிறுவனத்தின் உரிமைகள் அல்லது நிவாரணங்கள் எதையும் தப்பபிப்பிராயம் கொள்ளச் செய்யவோ அல்லது பாதிக்கவோ செய்யாது.

*(v)* FICCL நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய மீதத்தொகையை முழுமையாகச் செலுத்திவிட்ட பிறகு FICCL நிறுவனத்தின் கைகளில் உபரித்தொகை கிடைக்க இருக்கிற நிகழ்வில், சொல்லியுள்ள அந்த உபரித் தொகையை, கடன் வாங்கியவர்களுக்குச் சொந்தமான எந்தப் பணம் அல்லது பணங்களோடும் சேர்த்து, தற்சமயத்திற்கு மட்டும், FICCL நிறுவனத்தின் கைகளில், அல்லது அத்தொகை எந்தக் கணக்கில் நீடிக்குமோ, அது எதுவாயிருந்தாலும், அதே கணக்கின் கீழ், FICCL நிறுவனத்திற்கு, கடன் வாங்கியவர்(கள்), தனியாகவோ அல்லது வேறு எவரோடும், ஸ்தாபனம் அல்லது நிறுவனத்தோடும் சேர்ந்து கூடாகவோ, கடன்கள், தள்ளுபடி செய்த இரசீதுகள், கடன் கடிதங்கள், உத்திரவாதங்கள், பொறுப்புகள் அல்லது வேறு எவ்விதக் கடன்கள் அல்லது இரசீதுகள், நோட்டுகள், கடன்கள் மற்றும் தற்போதுள்ள மற்ற கடமைகள், அவை அப்போது நிலுவையாகவும், செலுத்தக்கூடியதாகவும் இல்லாமல் இருந்தாலும் கூட உள்ளிட்ட பொறுப்புகள் அல்லது மற்ற சட்டப்பூர்வமான அல்லது அதிலுள்ள வட்டியோடு சேர்த்து நடுநிலையாக இருக்கக்கூடிய கோரிக்கைகள் ஆகியவற்றின் வாயிலாக, FICCL நிறுவனம் கடன் வாங்கியவர்களுக்கு எதிராகக் கொண்டிருக்கக்கூடிய அல்லது முடக்கி வைப்பது அல்லது பரஸ்பர வரவு வைப்பது குறித்த சட்டம் எந்நிலையிலும் அனுமதிக்கும், செலுத்த வேண்டியதாக ஆகும் அல்லது ஆகக் கூடிய எந்த அல்லது அனைத்துப் பணங்களையும் கொடுத்து முடிப்பதன் பால், அவற்றைத் தக்க வைத்துக் கொண்டு பயன்படுத்துவது FICCL நிறுவனத்திற்குச் சட்டப்பூர்வமானதாகவே இருக்கும்.

| | | |
|---|---|---|
| | | FICCL நிறுவனத்திற்காக |
| கடன் வாங்குபவர் | கூட்டாக-கடன் வாங்குபவர் | அங்கீகாரம்பெற்ற கையொப்பதாரர் |

## சட்டப்பிரிவு **10**
## குறுக்கு அடமானம் வைத்தல்

கடன் வாங்கியவர்கள், இந்த ஒப்பந்தத்தின் கீழுள்ள கடனைக் கடன் வாங்குபவர்(கள்) திருப்பிச் செலுத்தும் நிகழ்வில், FICCL நிறுவனத்திடமிருந்து கடன் வாங்கியவர்கள் பெற்ற மற்ற நிதி வசதி எதன் கீழும் கடன் வாங்கியவர்கள் நிலுவை எதையும் வைத்திருக்கிற பட்சத்தில், அப்போது, அது போன்ற நிகழ்வில், இந்த ஒப்பந்தத்தின் கீழ் கடன் வாங்கியவர்கள் உருவாக்கிய பிணையச் சொத்தை விடுவிக்க FICCL நிறுவனம் கடமையுள்ளதாக இருக்காது என்று ஒப்புகை செய்கிறார்கள் அதோடு, அதுபோன்ற நிலுவையுள்ள நிதி வசதிக்குப் பாதுகாப்பளித்து, உரிய ஆவணங்களை நிறைவேற்ற அப்பிணையச் சொத்தை FICCL நிறுவனம் நீட்டித்துக் கொள்ள கடன் வாங்கியவர்(கள்) இதன் மூலம் அதிகாரமளிக்கிறார்கள். அதைப்போலவே, இந்த ஒப்பந்தத்தின் கீழ் கடன் வாங்கியவர்(கள்) நிலுவைத்தொகை எதையும் வைத்திருக்கிற நிகழ்வில், FICCL நிறுவனத்திடமிருந்து கடன் வாங்கியவர்(கள்) பெற்ற மற்ற நிதி வசதி எதற்காகவும் கடன் வாங்கியவர்(கள்) உருவாக்கிய பிணையச் சொத்தை விடுவிக்க FICCL நிறுவனம் கடமையுள்ளதாக இருக்காது அதோடு கடன் வாங்கியவர்(கள்) அதுபோன்ற பிணையச் சொத்தை, இந்த ஒப்பந்தத்தின் கீழ் நிலுவையுள்ள தவணைத்தொகைக்குப் பாதுகாப்பளிப்பதற்காக நீட்டித்துக் கொள்ளவும்
பொறுப்பெடுத்துக் கொள்கிறார்கள்.

## சட்டப்பிரிவு **11**
## ஒப்பந்தத்திற்கு மறுவுயிரூட்டுதல்

FICCL நிறுவனம் சொத்துக்களைக் கைப்பற்றுகிற நிகழ்வில், கடன் வாங்கியவர்(கள்) இவ்வொப்பந்தத்தை FICCL நிறுவனம் மறுவுயிரூட்டி, உள்ளது உள்ளபடியான நிலைமையில் சொத்துக்களைத் திருப்பிக் கொடுப்பதற்கு அதனைப் பொருத்திக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்ளலாம் அதோடு அதுபோன்ற வேண்டுகோளை FICCL நிறுவனம் தனது சொந்த விருப்புரிமையின் பேரிலும், அது அச்சூழ்நிலைகளில் பொருத்தமானதும் ஏற்றதுமாக இருக்கிறது என நினைக்கிற விதிகள் மற்றும் நிபந்தனைகளின் பேரிலும், தாமதமாகப் பணம் செலுத்தியதற்கான வட்டி, சட்ட மற்றும் மற்ற செலவுகள், மறுபடியும் கைப்பற்றல் செலவினங்கள் மற்றும் அது போன்ற செலவினங்கள் உட்பட அனைத்து EMI/ தவணைகளையும் முழுமையாக வசூலித்துக் கொண்ட பிறகு, அங்கீகரிக்கலாம். ஒப்பந்தத்தை மறுவுயிரூட்ட வேண்டாம் என்பதாக FICCL நிறுவனம் எடுக்கிற எந்த முடிவுமே இறுதியானதாகவும், கடன் வாங்கியவர்(களைக்) கட்டுப்படுத்துவதாகவுமாக இருக்கும் அதோடு அதனை எதிர்த்து எந்த நீதி மன்றத்திலும் மனுதாக்கல் செய்யக்கூடாது.

## சட்டப்பிரிவு **12**
## துணைக் கடன்

கடன் வாங்கியவர்(கள்), அவர்களது நண்பர்கள் மற்றும் உறவினர்கள் அல்லது அவர்களில் எவரேனும் கொடுத்த அனைத்துக் கடன்கள், முன்பணங்கள், மற்றும் முன்பணமாகக் கொடுத்த அனைத்துப் பணங்களும், இதன் மூலம் கொடுத்துள்ள கடனை ஒபிடுகையில் துணைக் கடன் என்பதாகவே இருந்து, கருதுவார்கள் என்று இதன் மூலம் ஒப்புக் கொண்டு, பிரகடனம் செய்து, உறுதிசெய்து, பொறுப்பெடுத்துக் கொள்கிறார்கள். கடன் வாங்குபவர்(கள்) கடனின் கீழ் மற்றும்/அல்லது இந்த ஒப்பந்தத்தின் கீழும், இதனைத் தொடர்ந்தும் நிறுவனத்தின் ஒட்டுமொத்த நிலுவைத் தொகையை முழுமையாகத் திருப்பிச் செலுத்தும் காலம் வரை, அதுபோன்ற கடன்கள் மற்றும் முன்பணங்கள் எதையும் முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை அல்லது அதிலுள்ள வட்டி எதையும் செலுத்த மாட்டார்கள் என்று இதன் மூலம் மேற்கொண்டு பிரகடனம் செய்து, பொறுப்பெடுத்துக் கொள்கிறார்கள்.

## சட்டப்பிரிவு **13**
## **FICCL**கடன் வாங்கியவர்(கள்) ஏற்றுக் கொள்ளவேண்டியுள்ள நிறுவனத்தின் கணக்கு அறிக்கைகள்

கடன் வாங்கியவர்கள், கடன் சம்பந்தமாக கடன் வாங்கியவர்(களிடம்) இருந்து வரவேண்டிய நிலுவைத்தொகையாக இருக்க, அதற்கு ஆதரவாகவோ அல்லது மற்றபடியோ FICCL நிறுவனத்தின் புத்தகங்களில் இருந்து எடுத்த ஒரு கணக்கு அறிக்கை, எவ்வித வவுச்சர், ஆவணங்கள் அல்லது மற்ற காகிதங்களையும் கொடுக்காமல், FICCL நிறுவனம் கோரியுள்ள எந்தத் தொகையின் சரியான தன்மை குறித்த முடிவான அத்தாட்சியாக ஏற்றுக் கொள்ள, இதன் மூலமாக ஒப்புக் கொள்கிறார்கள். கடன் வாங்கியவர்கள் செலுத்த வேண்டியுள்ளதும், செலுத்தக்கூடியதுமான வட்டிக் கணக்கீட்டில் எழுத்து அல்லது கணக்குப் பிழை எதுவும் இருக்கிற பட்சத்தில், இங்குள்ள எதுவும் FICCL நிறுவனத்தின் நலனைத் தப்பபிப்பிராயம் கொள்ளாது. வட்டி சம்பந்தமான தகராறு எதுவும், FICCL நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய EMI எதையும் பிடித்து வைத்துக் கொள்ள கடன் வாங்கியவர்களை உரிமையுள்ளவர்களாக ஆக்காது.

## சட்டப்பிரிவு **14**
## சரியீடு செய்தல் மற்றும் பாத்தியம்

*14.1* FICCL நிறுவனத்தின் உரிமைகள் எதற்கும் தப்பபிப்பிராயம் இல்லாமல், FICCL நிறுவனத்திடம் கடன் வாங்கியவர்(கள்) வைத்துள்ள கணக்குகள் எதிலும் கடன் வாங்கியவர்களின் வரவிற்கு நிலுவையாக இருக்கிற கடன் வாங்கியவர்(களின்) பணங்கள் எதற்கும் எதிராக, அதிப்பிரத்தியேகப் பாத்தியதையும், சரியீடு செய்யும் உரிமையும் FICCL நிறுவனத்திற்கே இருக்கும் அதோடு, அசல் அல்லது வட்டி அல்லது இந்த ஒப்பந்தத்தின் கீழ் அல்லது FICCL நிறுவனத்தோடு செய்து கொண்ட வேறு எந்த ஒப்பந்தத்தின் கீழ், FICCL நிறுவனத்திற்குக் கடன் வாங்கியவர்(கள்) செலுத்த நிலுவை வைத்துள்ள அல்லது செலுத்தக்கூடிய தொகை எதற்கும் திருப்தியாக, கடன் வாங்கியவர்(கள்) FICCL நிறுவனத்திடம் பெற்ற தொகைகளைக் கழித்துக் கொள்ள அல்லது FICCL நிறுவனத்திடம் கடன் வாங்கியவர்கள் வைத்துள்ள எந்தக் கணக்கிலும் கடன் வாங்கியவர்கள் உரிமை கொண்டுள்ள வரவு மீதி எதற்கும் பொருத்திக் கொள்ளக் கடன் வாங்கியவர்(கள்) அங்கீகாரமளிக்கிறார்கள்.

*14.2* இங்குள்ள விஷயங்கள் எதுவும், கடன் வாங்கியவர்(களின்) தற்போதைய அல்லது எதிர்காலப் பிணையச் சொத்து, உத்திரவாதம், கடமை எது சம்பந்தமானது உட்பட, FICCL நிறுவனம் சட்டப்படி அல்லது மற்றபடி உரிமை கொண்டுள்ள எந்தப் பொது அல்லது பிரத்தியேகப் பாத்தியதை அல்லது சரியீடு செய்வதற்கான உரிமை அல்லது FICCL நிறுவனத்தின் உரிமைகள் அல்லது நிவாரணங்கள் எதையும், தப்பபிப்பிராயம் கொள்ளாது அல்லது எதிரிடையாகப் பாதிக்காது.

*14.3* கடன் வாங்கியவர்கள், FICCL நிறுவனம் அனுபவிக்கிற வேறு எந்த உரிமை அல்லது பாத்தியதைக்கும் கூடுதலாகவும், அவற்றுக்கு எவ்விதத் தப்பபிப்பிராயமும் இல்லாமலும், FICCL நிறுவனத்திற்கு எந்த நேரத்திலும், கடன் வாங்கியவர்களுக்கு அறிவிப்புக் கொடுக்காமலேயே, FICCL நிறுவனத்தில் வைத்துள்ள கடன் வாங்கியவர்களின் அனைத்து அல்லது எந்தக் கணக்குகளையும் (நிரந்தர வைப்பு நிதிகள் உட்பட), அதிலுள்ள அனைத்து வரவுகள் மற்றும் பொறுப்புகள் அனைத்தையும் ஒன்றிணைக்கவும், திரட்டவும், அதுபோன்ற ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கணக்குகளின் வரவிற்கு நிலுவையிலுள்ள தொகை எதையும் சரியீடு செய்ய அல்லது மாற்றிக் கொள்ளவும், அல்லது எந்தக் கணக்கிலும், அது எதுவாயிருந்தாலும் அதில், FICCL நிறுவனத்திற்கான க்டன் வாங்கியவர்களின் பொறுப்புக்கள் எதன் திருப்தியின் பாலும், அது போன்ற பொறுப்புகள் உண்மையானவையோ அல்லது தற்காலிகமானவையோ, முதன்மையானவையோ அல்லது அடமானம் சார்ந்தவையோ, அதோடு அவை கூட்டாக அல்லது பலராக இருக்கின்றனவோ, அவற்றின் பால் மேற்கொண்டும் உரிமை இருக்கும் மேற்கொண்டும் ஒப்புக் கொள்கிறார்கள்.

சட்டப்பிரிவு ***15***
ஈட்டுறுதி

*கடன் வாங்குபவர்கள், FICCL நிறுவனத்தின் வேறு எந்த உரிமைகளுக்கும் தப்பபிப்பிராயம் கொள்ளாமல், ஈட்டுறுதி செய்து, தொடர்ந்து ஈட்டுறுதி செய்து வைக்க ஒப்புக் கொண்டு, கடன் வாங்கியவர்(களின்) தரப்பில் செய்த கடமை தவறிய நிகழ்வு, அல்லது காரணமற்ற தாமதம் அல்லது விடுபட்ட செயல்கள் ஒன்றின் விளைவாக அல்லது மற்றபடிக் கடனின் மற்றும்/அல்லது சொத்தின் மற்றும்/அல்லது இங்குள்ள விதிகள் எதன் காரணமாக ஏற்பட்ட, FICCL நிறுவனம் அடைந்ததாக அல்லது ஆனதாக அல்லது ஏற்பட்டதாக FICCL நிறுவனம் சான்றாளிக்கும் FICCL நிறுவனத்தை, எவ்வித இழப்புகள், செலவுகள், பொறுப்புகள் அல்லது செலவினங்கள் அல்லது வெளிச் செலவுகளுக்கு எதிராகவும் தீங்கின்றிப் பார்த்துக் கொண்டு, அவற்றை FICCL நிறுவனத்திற்குச் செலுத்தவும், திருப்பிக் கொடுக்கவும் ஒப்புக்கொள்கிறார்கள்.*

சட்டப்பிரிவு ***16***
சட்டப்பிரிவு ***16*** வாரிசு நியமனம்/ இலாகா மாற்றம்/ பிணையச் சொத்தாக்குதல்.

*கடன் வாங்குபவர்(கள்), FICCL நிறுவனம், கடன் வாங்கியவர்களின் எந்த அல்லது அனைத்து நிலுவைகள் மற்றும் தவணைகளை, FICCL நிறுவனம் தெரிவு செய்கிற எந்த மூன்றாம் தரப்பினருக்கும், கடன் வாங்கியவர்(களுக்கு) மேற்கொண்டு எவ்விதக் குறிப்போ அல்லது தகவலோ அல்லது அறிவிப்போ இல்லாமலும், கடன் வாங்கியவர்களின் ஒப்புதல் எதையும் நாடாமலும், முழுவதுமாக அல்லது ஒரு பகுதியை, FICCL நிறுவனம் முடிவு செய்யக்கூடிய அது போன்ற முறையிலும், அதுபோன்ற விதிகளிலும் (FICCL நிறுவனம் உரியதென நிதானிக்கிற பட்சத்தில், FICCL நிறுவனத்திற்கு, வாங்கியவர், நியமனம் பெற்றவர் அல்லது பெயர் மாற்றம் செய்து கொண்டவர் சார்பாகக் கடன் வாங்கியவர்(களுக்கு) எதிராக நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்கான ஒரு உரிமையை ஒதுக்கீடு செய்துவைப்பது உட்பட), விற்பனை செய்ய, வாரிசு நியமனம் செய்ய அல்லது மற்றபடி எந்த முறையிலும், அது எதுவாக இருந்தாலும், பெயர் மாற்றம் செய்து கொள்ளவும், முற்றிலும் உரிமையுள்ளதாக இருக்குமென்று வெளிப்படையாக புரிந்துணர்ந்து கொண்டு, ஏற்றுக் கொள்கிறார்கள். அதுபோன்ற எந்த நடவடிக்கையும், அதுபோன்ற எந்தவொரு விற்பனை, வாரிசு நியமனம் அல்லது பெயர் மாற்றமும், அதுபோன்ற மூன்றாம் தரப்பினரை, தனிப்பட்டக் கடன் கொடுத்தவராக அல்லது FICCL நிறுவனத்தோடு அல்லது அந்தந்த நிலைக்குத் தக்கபடி, வேறு எந்த நபரோடு சேர்ந்து கூட்டாகக் கடன் கொடுத்தவராக ஏற்றுக் கொள்ள கடன் வாங்கியவர்(களைக்) கட்டுப்படுத்தும். இது சம்பந்தமாக ஏற்படும் செலவுகள் எதுவும், அதுபோன்ற விற்பனை, வாரிசு நியமனம் அல்லது பெயர் மாற்றத்தின் காரணமாக ஏற்படுபவையோ அல்லது உரிமைகளை அமல்படுத்துவதாலும், நிலுவையிலுள்ள மற்றும் தவணைத் தொகைகளை மீட்பதினாலும் ஏற்பட்டவையோ, அவை கடன் வாங்கியவர்(களின்) கணக்கிலேயே இருக்கும். கடன் வாங்கியவர்(கள்), இந்த ஒப்பந்தத்தையோ அல்லது இதன்கீழ் கடன் வாங்கியவர்களுக்கு இருக்கிற உரிமைகள், கடமைகள், கடப்பாடுகள் எதையுமோ, FICCL நிறுவனத்திடம் முன்னமே எழுத்துப்பூர்வ ஒப்புதல் பெறாமல், வாரிசு நியமனம் செய்யக்கூடாது.*

| | | |
|---|---|---|
| | | *FICCL நிறுவனத்திற்காக* |
| *கடன் வாங்குபவர்* | *கூட்டாக-கடன் வாங்குபவர்* | *அங்கீகாரம்பெற்ற கையொப்பதாரர்* |

சட்டப்பிரிவு ***17***
சேவை வழங்குநர்

*FICCL நிறுவனத்தின் உரிமைகள் எதற்கும் தப்பபிப்பிராயம் கொள்ளாமல், கடனையும், அதன் உபயோகத்தை மற்றும்/அல்லது கடன் வாங்கியவர்களின் கடமைகளை மற்றும் அல்லது இங்குள்ள விதிகளுக்குக் கடன் வாங்கியவர்(கள்) இணங்கி நடப்பதை கண்காணிப்பதற்காக மற்றும்/அல்லது FICCL நிறுவனத்திற்கு நிலுவையாக இருக்கிற தொகைகளை அல்லது அதன் ஒரு பகுதியை அல்லது பாகத்தை மீட்க, FICCL நிறுவனம் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் / செயல்பாடுகளையும், மேற்கொள்ளும் மற்றும்/அல்லது அது தொடர்பாக FICCL நிறுவனம் அவ்வப்போது நியமிக்கிற அதுபோன்ற மற்றவர்கள் (ஒரு நிறுவனம் அல்லது கூட்டாண்மை அமைப்பு உட்பட) வாயிலாக மேற்கொள்ளச் செய்யலாம் என்பதையும், இவ்வாறு FICCL நிறுவனம் நியமிக்கிற அதுபோன்ற மூன்றாம் நபர் எவரோடும், கடன் வாங்கியவர்(கள்) மற்றும்/அல்லது கடன் தொடர்பாக உள்ள அனைத்து ஆவணங்கள், கணக்கு அறிக்கைகள் மற்றும் மற்ற தகவல்களை, அவை எத்தன்மையுடையதாக இருந்தாலும், அவற்றைப் பகிர்ந்து கொள்வதற்கு FICCL நிறுவனம் உரிமையுள்ளதாக இருக்கும் என்பதையும் கடன் வாங்கியவர்கள் ஒப்புக் கொள்கிறார்கள். மேற்கொண்டும், FICCL நிறுவனம், அதன் அதுபோன்ற செயல்பாடுகளைத் தானேயோ அல்லது அதன் அலுவலர்கள் அல்லது வேலைக்காரர்கள் வாயிலாகவோ செய்து முடிப்பதற்கு உரிமைகளுக்குத் தப்பபிப்பிராயம் இல்லாமல், FICCL நிறுவனத்தின் விருப்பத்தின் பேரில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மூன்றாம் தரப்பினர்களை நியமிப்பதற்கும், செலுத்தாமல் இருக்கிற தொகைகள் அனைத்தையும் FICCL நிறுவனத்தின் சார்பாக வசூலிப்பதற்கான உரிமையையும், அதிகாரத்தையும் அது போன்ற மூன்றாம் தரப்பினர்களுக்கு மாற்றுவதற்கான அல்லது ஒதுக்கீடு செய்வதற்கான, அதோடு கடன் வாங்கியவர்(களின்) அலுவலகம் மற்றும் வசிப்பிடத்தில் போய்க் கலப்பது, நிலுவையிலுள்ள தொகைகளைப் பெறுவது, மற்றும் அம்மூன்றாம் தரப்பினர் அதுபோன்ற நோக்கங்களுக்கு ஏற்றது எனக் கருதக்கூடிய, பொதுவாகவே அனைத்துச் சட்டப்பூர்வமான செயல்களையும் செய்து முடிப்பது உட்பட, அதில் தொடர்புடைய அல்லது அதனால் நிகழுகிற அனைத்துச் செயல்கள், செய்கைகள், விஷயங்கள் மற்றும் காரியங்களைச் செய்து முடித்து, நிறைவேற்றுவதற்கும், முழு உரிமையுள்ளதாக இருக்கும் அதோடு அதற்கான முழு அதிகாரமும், ஆற்றலும் அதற்கிருக்கும் என்பதாகவும் கடன் வாங்கியவர்(கள்) வெளிப்படையாக புரிந்துணர்ந்து கொண்டு, ஏற்றுக் கொள்கிறார்கள்.*

சட்டப்பிரிவு ***18***
முடித்துக் கொள்ளுதல்

*இந்த ஒப்பந்தத்தில் முரண்பாடாகக் கொண்டுள்ள எதுவும் இருந்த போதிலும், FICCL நிறுவனம் அதன் தனிப்பட்டதும், முழுமையானதுமான விருப்புரிமையின் பேரில் எந்த நேரத்திலும், கடனையோ அல்லது அதன் ஏதேனுமொரு பகுதியையோ, காரணம் எதையும், அது எதுவாயிருந்தாலும், அதைக் கொடுப்பதற்கான எவ்விதப் பொறுப்புடைமையுமின்றியும், கடப்பாடுகளும் இல்லாமலும், முடித்துக் கொள்ளலாம், இரத்து செய்யலாம் அல்லது திரும்பப் பெறலாம், இதில் அனைத்து அசல் பணங்கள், அதில் ஏற்பட்டுள்ள வட்டி மற்றும் மற்ற அனைத்துச் செலவுகள், செலவினங்கள் கடமை தவறிய நிலையொன்றில் நிறுவனத்திற்கு ஏற்பட்ட இலாப இழப்பு உட்பட, மற்றும் நிலுவையிலுள்ள மற்ற பணங்கள் ஆகியவை நிலுவையிலுள்ளவையாகி, FICCL நிறுவனத்திடமிருந்து கோரிக்கை வருவதன் பேரில் அப்போதே FICCL நிறுவனத்திற்குச் செலுத்தத்தக்கதாக ஆகும்.*

சட்டப்பிரிவு ***19***
தகவல்களை வெளிப்படுத்துதல்

*19.1 (i)* கடன் வாங்கியவர்(கள்), FICC நிறுவனம், இந்திய ரிசர்வ் வங்கி (“RBI”) மற்றும்/அல்லது கிரெடிட் இன்ஃபர்மேஷன் பீரோ (இந்தியா) லிட் மற்றும்/அல்லது RBI இது விஷயமாக அங்கீகரித்துள்ள மற்ற எந்த முகமைக்கு, FICCL நிறுவனத்தின் தொழில்முறையிலான ஆலோசகர்கள் மற்றும் ஆலோசனையாளர்களுக்கு, FICCL நிறுவனத்தின் இணைப்பு நிறுவனங்கள் / துணை நிறுவனங்களுக்கும், அதன் சேவை வழங்கும் நிறுவனங்களுக்கும், மூன்றாம் தரப்பினர் அல்லது மற்றபடி, இந்த ஒப்பந்தம் மற்றும் /அல்லது கடன் தொடர்பாக அவர்கள் அறிவுறுத்தியபடி, மற்றும்/அல்லது சட்டம் அல்லது பொருந்துகிற ஒழுங்குமுறை எதன் கீழும் தேவையாகிறபடி, நீதிமன்ற உத்தரவில், அல்லது அவர்கள் முறைப்படி இணங்கி நடக்கிற எந்த சட்டப்பூர்வ, ஒழுங்குமுறை அல்லது மேற்பார்வை செய்யும் அதிகாரத்தினர் வேண்டுகொள்கையில் அல்லது உத்தரவிடுகையில், வெளிப்படுத்தி, சமர்ப்பிப்பதற்கு ஏற்றதும், அவசியமானதும் என நிதானிக்கிறபடி, கடன் வாங்கியவர்(களின்) கடமைகளைச் செய்து முடிப்பதில், கடன் வாங்கியவர்கள் செய்த, கடமை தவறியமை எதுவுமிருந்தால் அது தொடர்பான தகவல்கள் உட்பட, கடன் வாங்கியவர்(கள்), கடன், கடன் வாங்கியவர்(களின்) கணக்கு, மற்றும் இந்த ஒப்பந்தம், தொடர்பாக அனைத்து அல்லது எந்தத் தகவல் மற்றும் தரவையும் FICCL நிறுவனம் வெளிப்படுத்திப் பகிர்ந்து கொள்வதற்கு ஒப்புக் கொண்டு, ஏற்றுக் கொண்டு, ஒப்புதலளிக்கிறார்கள்.

*(ii)* கடன் வாங்கியவர்(கள்) FICCL நிறுவனத்திற்குச் சமர்ப்பித்துள்ளதும், சமர்ப்பிக்கவுள்ளதுமான தகவல்களும், தரவுகளும் உண்மையானவையும் சரியானவையுமாக இருக்கின்றன மற்றும் இருக்கும் என்றும், நேரடியாகவோ அல்லது வேறு விதமாகவோ எவ்வித தவரான பிரதிநிதித்துவத்தையும் செய்திருக்கவில்லை என்றும் பிரகடனம் செய்கிறார்கள். FICCL நிறுவனத்திற்கு, கடன் வாங்குபவர்(களின்) தரப்பில் துல்லியமற்ற தன்மை அல்லது தவறான பிரதிநிதித்துவம் இருக்கிறது என்கிற நிகழ்வில், பொருத்தமானது என அது நிதானிக்கிற அதுபோன்ற நடவடிக்கைகலை எடுக்க உரிமையிருக்கிறது. கடன் வாங்கியவர்கள், FICCL நிறுவனத்திற்கு அவ்வப்போது அவசியமாகக்கூடிய அதுபோன்ற மற்ற நிதிசார்ந்த தகவல்களை FICCL நிறுவனத்திற்கு வழங்குவார்கள்.

*(iii)* கடன் வாங்குபவர்(கள்):

*(a)* RBI அல்லது மற்ற கிரெடிட் இன்ஃபர்மேஷன் பீரோ (இந்தியா) லிட் மற்றும் அவ்வாறு அங்கீகாரம் பெற்ற மற்ற எந்த சட்டப்பூர்வ, ஒழுங்குமுறை அல்லது மேற்பார்வை அதிகாரத்தினர் அல்லது முகமையினர், FICCL நிறுவனம் வெளிப்படுத்திய மேற்சொன்ன தகவல்கள் மற்றும் தரவுகளை, அவர்கள் பொருத்தமானது என நிதானிக்கிறதோர் முறையில், எந்தவொரு குறிப்பிட்ட சூழ்நிலைகளிலும் உபயோகித்து, அதன் மீது நடவடிக்கை எடுத்துப் பரப்பலாம் என்பதை ஏற்றுக் கொள்கிறார்கள்; அதோடு

*(b)* இந்த விஷயத்தில் FICCL நிறுவனத்தை பொறுப்பாக்கவோ அல்லது கடமையுள்ளதாக ஆக்கவோ மாட்டார்கள்;

*(c)* FICCL நிறுவனம் அனுபவிக்கிற மற்ற எந்த உரிமைக்கும் கூடுதலாக, இவ்வொப்பந்தத்தின் கீழ் கடன் வாங்கியவர்கள் கடமை தவறுவது எதையும் செய்கிற நிகழ்வில், கடன் வாங்கியவர்(களுக்குத்) தகவல் தெரிவிக்காமலேயே, RBI அல்லது வேறு எந்த சட்டப்பூர்வ அதிகாரத்தினருக்கு அல்லது நீதிமன்றத்திற்கு, கடன் வாங்கியவர்(களின்) பெயர் மற்றும் மேற்சொன்னபடி அக்கடமை தவறிய செயலைச் செய்திருப்பது குறித்த கடன் வாங்கியவர்களின் யதார்த்தத்தை வெளிப்படுத்த FICCL நிறுவனத்திற்கு உரிமையிருக்கும் என்பதாக மேற்கொண்டும் FICCL நிறுவனத்தை அங்கீகரிக்கிறார்கள்.

## சட்டப்பிரிவு *20*
## பிணையச் சொத்தைத் தொடருதல்

கடன் வாங்கியவர்(கள்), இந்த ஒப்பந்தமும், கடனுக்காகவும், கடனிலும், இதன் மூலமாக உருவாக்கிய அல்லது இதனைத் தொடர்ந்து உருவாக்கிய, எந்தப் பிணையச் சொத்தும், கடன் வாங்கியவர்களின் கணக்கில் வரவு மீதத்தொகை அல்லது பாதிப் பணம் செலுத்தியிருக்கிற அல்லது கணக்குகளில் ஏற்ற இறக்கங்கள் இருக்கிற போதிலும் கூட, கடன் சம்பந்தமானதில் இருக்கிற கடன் வாங்கியவர்(களின்) அனைத்துக் கடப்பாடுகளுக்கும் தொடர்ச்சியான பிணையச் சொத்தாகவே செயல்படும் என்பதாக ஒப்புக் கொள்கிறார்கள்.

## சட்டப்பிரிவு *21*
## இதர விஷயங்கள்

***21.1*** அறிவிப்பு:

இந்த ஒப்பந்தத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு அறிவிப்பு, வேண்டுகோள், கோரிக்கை அல்லது மற்ற தகவல் தொடர்பும்:

*(a)* எழுத்துப்பூர்வமாக இருக்க வேண்டும், கையில் கொண்டுவந்து, துரித தபால் வாயிலாக அல்லது பதிவு அஞ்சல் வாயிலாக, ஒப்புகை நகலோடு கொடுக்க வேண்டும்;

*(b)*கையில் கொண்டு வந்து கொடுக்கும் போது, அப்படிக் கொண்டு வந்து கொடுக்கும் நேரத்தில், அது பெற்றுக் கொள்பவருக்கு ஒரு வேலை நாளில் அலுவல் நேரமாக இருந்தால் பெற்றுக் கொண்டதாக நிதானித்துக் கொள்ள வேண்டும், அதோடு பதிவு அஞ்சல் ஒப்புகை நகலோடு கொடுத்தால், அதனை அஞ்சல் செய்ததிலிலிருந்து 3 நாட்களுக்குப் பிறகு பெற்றுக் கொண்டதாக நிதானிக்க வேண்டும்; அதோடு

*(c)* கடன் வாங்கியவர்களுக்கு இக்கடன் சுருக்கப் பட்டியலில் குறிப்பிட்டுள்ள அவர்களது அலுவலக/வீட்டு முகவரிக்கும், FICCL நிறுவனத்திற்கு இக்கடன் சுருக்கப் பட்டியலில் குறிப்பிட்டுள்ள அதன் அலுவலக முகவரிக்கும், அல்லது இருதரப்பினரில் எவரும் மற்ற தரப்பினருக்கு இதற்குப் பின்னால் எழுத்துப் பூர்வமாக அறிவிக்கக்கூடிய அதுபோன்ற மற்ற முகவரிக்கும் அனுப்பி வைக்க வேண்டும். கடன் வாங்கியவர்(கள்), தங்களது முகவரியில் ஏற்பட்டுள்ள மாற்றம் எதையும், மாற்றம் ஏற்பட்ட ஒரு வாரத்திற்குள் எழுத்துப்பூர்வமாக FICCL நிறுவனத்திற்கு அறிவித்துவிட வேண்டும்.

***21.2*** பலன்கள்:

இந்த ஒப்பந்தத்தின் விதிகள் மற்றும் ஷரத்துக்களே கட்டுப்படுத்துவையாக இருக்கும், அதோடு இதிலிருந்து கிடைக்கும் பலன்கள், கடன் வாங்கியவர்(களின்) வாரிசுகள், நிர்வாகிகள் மற்றும் அலுவலர்களுக்கும், அனுமதிபெற்ற வாரிசுகளுக்கும், FICCL நிறுவனத்தின் அடுத்தடுத்துப் பதவிக்கு வருபவர்களுக்கும், அவர்களது வாரிசுகளுக்கும் பழக்கமானதாகவே இருக்கும். கடன் வாங்கியவர்(கள்) (தனிநபர் அல்லது உரிமையாளர் ஸ்தாபனமாக இருக்கிற பட்சத்தில்), அல்லது கடன் வாங்கியவர்(களில்) எவரேனும் (ஒருவருக்கு மேலானவர்கள் இருக்கிற பட்சத்தில்) ஒருவர், மரணமடைந்து விடுகிற நிலையில், அவ்வாறு மரணமடைந்த கடன் வாங்கியவர்(களின்) சட்டப்பூர்வப் பிரதிநிதி எவரும் *(i)* பொருந்துகிற சட்டங்களின்படி சட்டத்திற்கு ஏற்ப தனது பெயரில் சொத்துக்களின் உரிமையைப் பெயர் மாற்றம் செய்து பெறுகிறார், *(ii)* கடனைத் திருப்பிச் செலுத்தும் பின் தேதியிட்ட காசோலைகளுக்குப் பதிலாக, FICCL நிறுவனத்தில் இருக்கிற கடன் வாங்கியவர்களின் அதுபோன்ற காசோலைகளின் எண்ணிக்கைக்குத் தக்கபடி வேறு காசோலைகளை, அதுபோன்ற சட்டப்பூர்வப் பிரதிநிதியின் வாயிலாகக் கொடுக்கிறார் அதோடு *(iii)* FICCL நிறுவனத்திற்கு அவசியமாகக்கூடிய அதுபோன்ற ஆவணங்களில் கையொப்பமிட்டு அவற்றை நிறைவேற்றுகிறார் என்றால் ஒழிய அதோடு அதுவரை, அதுபோன்ற சட்டப்பூர்வப் பிரதிநிதி, இந்த ஒப்பந்தத்தின் பலன்களை அடைவதற்கு உரிமையுள்ளவராக மாட்டார்; ஆயினும், இந்த ஒப்பந்தத்தின் பலனை, கடன் வாங்கியவர்களின் சட்டப்பூர்வப் பிரதிநிதிக்கு, இந்த வகுப்பில் குறிப்பிட்டுள்ள தேவைகள் மற்றும் கடமைகளை அவர் செய்து முடிக்கவும், இணங்கி நடக்கவும் விருப்பமுள்ளவராக இருந்தாலும் கூட அதனை அவருக்குக் கொடுக்காமல் இருப்பதற்கான முழு விருப்புரிமையும் FICCL நிறுவனத்திற்கே இருக்கும்.

| கடன் வாங்குபவர் | கூட்டாக-கடன் வாங்குபவர் | FICCL நிறுவனத்திற்காக<br>அங்கீகாரம்பெற்ற கையொப்பதாரர் |
|---|---|---|

*21.3* தள்ளுபடி:

இந்த ஒப்பந்தத்தின் கீழ் கடன் வாங்கியவர்(கள்) செய்கிற எவ்வித விதிமீறல் அல்லது கடமை தவறுவதைச் செய்வதன் பேரில் FICCL நிறுவனத்திற்கு சேர்கிற எந்த உரிமை, அதிகாரம் அல்லது நிவாரணத்தைப் பயன்படுத்துவதற்கான தாமதம் அல்லது செய்யாமல் விடுவது எதுவும், அது போன்ற FICCL நிறுவனத்தின் உரிமை, அதிகாரம் அல்லது நிவாரணத்தைப் பாதிக்காது அல்லது அதை அது போன்ற விதிமீறல் அல்லது கடமை தவறியதைத் தள்ளுபடி செய்த ஒன்றாக அல்லது அதற்குப் பிறகு ஏற்படுகிற அதையொத்த விதிமீறல் அல்லது கடமை தவறியதில் இருக்கிற அல்லது அது குறித்த தயக்கத்துடன் ஏற்றுக் கொள்ளும் ஒன்றாக எடுத்துக் கொள்ளக்கூடாது அல்லது ஒருமுறை விதிமீறியதற்கு அல்லது கடமை தவறியதற்குக் கொடுத்த தள்ளுபடி ஒன்றை, அதற்கு முன் நடந்த அல்லது அதற்குப் பின் நடக்கிற விதிமீறல் அல்லது கடமை தவறிய எதற்குமான தள்ளிபடியாக நிதானிக்கக் கூடாது. இந்த ஒப்பந்தத்தின் கீழ், அல்லது இந்த ஒப்பந்தத்தின் எந்த ஷரத்துக்கள் அல்லது நிபந்தனையின் கீழ் இருக்கிற எந்த விதிமீறல் அல்லது கடமை தவறிய எதுவும் தொடர்பாக FICCL நிறுவனத்தின் தரப்பில் செய்கிற எந்தத் தள்ளுபடி, அனுமதி, ஒப்புதல் அல்லது அங்கீகாரமும், எழுத்துப் பூர்வமானதாக இருந்தாக வேண்டும் அதோடு அது போன்று எழுத்தில் குறிப்பாக அமைத்துள்ள அளவிற்கு மட்டுமே அமலில் இருக்கும்.

*21.4* இந்த ஒப்பந்தத்தின் கீழோ அல்லது சட்டத்தின்படியோ அல்லது மற்றபடி நிறுவனத்திற்கு அளித்திருப்பதன்படியோ இருக்கிற அனைத்து நிவாரணங்களும், ஒன்று சேர்ந்ததாகவே இருக்கும் அதோடு மாற்றாக இருக்காது.

*21.5* திருத்தம்:

இங்குள்ள எந்த விதி அல்லது ஷரத்தின் திருத்தம் எதுவும், எழுத்துப்பூர்வமானதாக இருந்து, இங்குள்ள இரு தரப்பினர்களும் கையொப்பமிட்டால் ஒழிய, அமல்படுத்துவதாக இருக்காது.

*21.6* பாதியளவிற்கு செல்லாத தன்மை:

எந்த நேரத்திலும், இந்த ஒப்பந்தத்தின் எந்த ஷரத்தும், எந்த வகையிலும் சட்ட விரோதமானதாக, செல்லாததாக அல்லது அமல் செய்ய இயலாததாக இருக்கிற அல்லது ஆகிற பட்சத்தில், அதன் மூலம் இந்த ஒப்பந்தத்தின் மீதமுள்ள ஷரத்துக்களின் சட்டப்பூர்வமான தன்மையோ, செல்லுபடியாகும் தன்மையோ அல்லது அமல் செய்யும் தன்மையோ, எந்த வழியிலும் பாதிப்படையாது அல்லது சேதமடையாது அதோடு இருதரப்பினரும் சட்ட விரோதமானதாக, செல்லாததாக அல்லது அமல் செய்ய இயலாததாக வைத்திருக்கிற பகுதிகளுக்கு, இந்த ஒப்பந்தத்தின் அசல் நோக்கத்திற்கு உயிர் கொடுக்கும் வகையில், சட்டப்பூர்வமான பதில் ஷரத்துக்களை அமைத்துக் கொள்ள இங்கே பரஸ்பரம் மேற்கொண்டும் ஒப்புக் கொள்கிறார்கள்

*21.7* மேலோங்கிய தன்மை:

இந்த ஒப்பந்தமும், இத்தோடு இணைத்துள்ள அல்லது இங்கே குறிப்பிட்டுள்ள வேறு எந்த ஆவணங்களும், இங்கே குறிப்பிட்டுள்ள அல்லது இங்கே ஏற்படுகிற அனைத்து விதிகளையும், நிபந்தனைகளையும் ஒருங்கிணைக்கின்றன அதோடு இங்குள்ள பொருள் விவரம் சம்பந்தமானதில், இந்த ஒப்பந்தத்திற்கு முன்னதாக வழங்கிய அனுமதிக் கடிதத்தின் ஷரத்துக்கள் தவிர, இவை இந்த ஒப்பந்த விதிகளுக்குக் கூடுதலானவையாகவும், சேர்ந்து இருப்பவையாகவும் இருக்கின்றன அதோடு இவை ஒரே மாதிரியானவையல்ல என்றும், அவற்றுக்கு முரணாக இருப்பதில்லை, அனைத்து விதமான வாய்மூலப் பேச்சுவார்த்தைகளுக்கும், முன்னர் செய்த எழுத்துக்களுக்கும் மேலோங்கியதாக அமைகின்றன. இந்த ஒப்பந்தம் மற்றும் இத்தோடு இணைத்துள்ள அல்லது இங்கு குறிப்பிடுகிற எந்த ஒப்பந்தம் மற்றும் அனுமதிக் கடிதம் அல்லது ஆவணங்களின் விதிகள், நிபந்தனைகள் மற்றும் ஷரத்துக்களுக்கு இடையே முரண்பாடு எதுவும் எழுகிற நிகழ்வில், அப்போது, அதுபோன்ற நிகழ்வில், இந்த ஒப்பந்தத்தின் விதிகள், நிபந்தனைகள் மற்றும் ஷரத்துக்களே மேலோங்கியதாக இருக்கும்

*21.8 செலவுகள்:*

கடன் வாங்கியவர்கள், சொத்துரிமையை விசாரணை செய்து, இந்த ஒப்பந்தத்தைத் தயார் செய்து, வரைவு செய்து, இறுதி செய்வதில் FICCL நிறுவனத்திற்கு ஏற்படும் அனைத்துச் செலவுகள் (முத்திரைச் சுங்கம் மற்றும் விதித்துள்ள அபராதங்கள் உட்பட), கட்டணங்கள் மற்றும் செலவினங்களையும், கடமை தவறிய நிகழ்வு நேர்வதன் விளைவாக, FICCL நிறுவனத்தின் சட்ட ஆலோசகர்கள் மற்றும் மேற்கொண்ட சட்ட நடவடிக்கை எதன் அனைத்துச் செலவுகள், கட்டணங்கள் மற்றும் செலவினங்கள் உட்பட, FICCL நிறுவனம் தனக்கு ஏற்பட்டதாக அல்லது செலவானதாகச் சான்றளிக்கும், மற்ற அனைத்து ஆவணங்கள் மற்றும் செலவுகள், கட்டணங்கள் அல்லது செலவினங்களைப் பார்த்துக் கொண்டு, அவற்றை FICCL நிறுவனத்திற்குச் செலுத்தி விடுவார்கள் மற்றும் திருப்பிச் செலுத்தி விடுவார்கள். அதுபோன்ற அனைத்துத் தொகைகளையும் கடன் வாங்கியவர்கள் FICCL நிறுவனத்திற்கு FICCL நிறுவனத்திடமிருந்து திருப்பிச் செலுத்தக் கோரும் தேதியிலிருந்து 30 (முப்பது) நாட்களுக்குள் திருப்பிச் செலுத்தி விடுவார்கள் அதோடு அவற்றைக் கடன் கணக்கில் கழித்து விடுவோம், அதோடு அதற்கு கடனுக்குச் செலுத்தக்கூடிய அதே வட்டியை, பணம் செலுத்திய தேதியிலிருந்து, பணத்தைத் திருப்பிச் செலுத்திய தேதி வரை, செலுத்த வேண்டும்.

*21.9 வங்கியில் காசாக்காத காசோலைகளைத் திருப்பித் தருதல்:*

கடனை முடித்து விட்ட பிறகு, முதிர்வடைந்ததன் காரணமாகவோ அல்லது கடனை முன்கூட்டிய செலுத்தி விட்டதன் காரணமாகவோ, FICCL நிறுவனத்திடம் இருக்கிற, வங்கியில் காசாக்காத / உபயோகிக்காத கடன் வங்கியவர்(களின்) காசோலைகளைத் திருப்பித் தருமாறு கோரும் வேண்டுகோள் எதையும், கடனை முடித்து விட்ட / கடனை முன்கூட்டியே செலுத்தி விட்ட தேதியிலிருந்து தொன்னூறு (90) நாட்களுக்குள் எழுத்துப் பூர்வமாகக் கொடுக்க வேண்டும். வங்கியில் காசாக்காத / உபயோகிக்காத காசோலைகளைத் திருப்பித் தருமாறு அதுபோன்று எந்தவொரு வேண்டுகோளையும், வரையறுத்துள்ள காலத்திற்குள் FICCL நிறுவனம் பெறவில்லை என்றால், வங்கியில் காசாக்காத/உபயோகிக்காத அக்காசோலைகளை FICCL நிறுவனம், கடன் வாங்கியவர்(களுக்கு) மேற்கொண்டு எவ்வித அறிவிப்பையும் கொடுக்காமல், இரத்து செய்து விட்டு, அழித்துவிடும்.

*21.10 சட்டம்:*

இந்த ஒப்பந்தம் இந்தியச் சட்டத்திற்கு இணங்கவே, உட்பட்டு, கட்டுப்பட்டு, அர்த்தம் பெற்று இருக்கும்.

*21.11 மத்தியஸ்தம் / நீதிமன்ற எல்லை:*

இந்த ஒப்பந்தத்திலிருந்து அல்லது இது தொடர்பாக எழுகிற தகராறுகள், வேறுபாடுகள் மற்றும்/அல்லது கோரிக்கைகள் அனைத்தையும், 1996 ஆம் ஆண்டின் மத்தியஸ்தம் மற்றும் ஒப்புரவுச் சட்டத்தின் ஷரத்துக்கு அல்லது அதில் செய்கிற சட்டப்பூர்வமான திருத்தங்களுக்கு இணங்கவே மத்தியஸ்தம் செய்து தீர்க்க வேண்டும், இதையே FICCL நிறுவனம் நியமிக்கிற/பணியமர்த்துகிற தனிப்பட்ட மத்தியஸ்தர் ஒருவர் மத்தியஸ்தம் என்று குறிப்பிடுவார். மத்தியஸ்தர் ஒருவராகச் செயல்படுவதற்கு அவ்வாறு நியமனம் பெற்ற நபர்களின் மரணம், மறுப்பு, அலட்சியம், இயலாமை, அல்லது திறனற்றுப் போகுதல் ஆகிய நிகழ்வில், FICCL நிறுவனம் மத்தியஸ்தராகச் செயல்பட இன்னொருவரை நியமிக்கலாம். மத்தியஸ்தரின் தீர்ப்பே, இடைக்காலத் தீர்ப்பு/கள் உட்பட, இறுதியானதாகவும், உரிய அனைத்துத் தரப்பினர்களையும் கட்டுப்படுத்துவதாகவும் இருக்கும். மத்தியஸ்த நடைமுறைகளை நடத்துவதில் மத்தியஸ்தர் பின்பற்ற வேண்டிய நடைமுறையை அவர் அவ்வப்போது வகுத்துக் கொள்ளலாம், அதோடு ஏற்றது என அவர் கருதுகிற, அதுபோன்ற முறையில் மத்தியஸ்த நடைமுறைகளை நடத்துவார். மத்தியஸ்த நடைமுறைகளை, கடன் சுருக்கப் பட்டியலில் குறிப்பிட்டுள்ள இடத்திலேயே நடத்துவார்கள். இங்கே இருக்கிற மத்தியஸ்த வகுப்பிற்கு உட்பட்டு, கடன் சுருக்கப் பட்டியலில் குறிப்பிட்டுள்ள இடத்தில் இருக்கிற சட்ட அதிகாரமுள்ள நீதிமன்றங்களுக்கு, இந்த ஒப்பந்தத்திலிருந்து அல்லது இது தொடர்பாக எழுகிற எந்த விஷயத்தின் மீதும், அல்லது சட்ட நடைமுறைகளின் மீதும் சட்ட எல்லையைக் கொண்டிருக்கும்.

*21.12 இவ்வொப்பந்தத்தின் அங்கமாக அமைவதற்கான பட்டியல்கள்:*

இங்கே இப்போது, இந்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இதற்குப் பிறகு இணைத்துள்ள கடன் சுருக்கப் பட்டியல்களையும், மற்ற பட்டியல்களை, அதிலுள்ள ஷரத்துக்கள் இதன் தொடர்ச்சியாக அமைத்ததைப் போன்று, இந்த ஒப்பந்தத்தின் அங்கமாக இருப்பதாகவே நிதானிக்க வேண்டும்.

*21.13 ஓரக் குறிப்புகள் மற்றும் தலைப்புக் குறிப்புகள்:*

இங்குள்ள ஓரக் குறிப்புகளும், தலைப்புக் குறிப்புகளும், வசதி மற்றும் பார்வைக் குறிப்பு நோக்கத்திற்கானவை மட்டுமே.

*21.14 ஏற்பு:*

நான்/நாங்கள் ஒட்டுமொத்த ஒப்பந்தத்தையும் படித்துப் பார்த்திருகிறோம், இதை என்னுடைய முன்னிலையிலேயே பூர்த்தி செய்திருக்கிறார்கள். நான் /நாங்கள், இத்துண்டை பின்னிணைத்துள்ள பட்டியல்களில் அமைத்துக் கொடுத்துள்ள விவரங்களில் உள்ளிட்ட அனைத்து நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு நடப்போம்.

மேற்சொன்ன ஒப்பந்தத்தையும், மற்ற ஆவணங்களையும் எனக்கு, நான் புரிந்து கொண்ட மொழியில் விளக்கிச் சொன்னார்கள் அதோடு நான் / நாங்கள் பல்வேறு வகுப்புகளின் ஒட்டுமொத்த அர்த்தத்தையும் புரிந்து கொண்டுவிட்டார் அதோடு இந்த ஒப்பந்தத்தில் இருக்கிறா விஷயங்களைச் சரிபார்த்துப் புரிந்து கொண்ட பிறகு தனது கையொப்பத்தை இட்டிருக்கிறார்.

| கடன் வாங்குபவர் | கூட்டாக-கடன் வாங்குபவர் | FICCL நிறுவனத்திற்காக<br>அங்கீகாரம்பெற்ற கையொப்பதாரர் |
|---|---|---|

நான்/நாங்கள் இந்த ஒப்பந்தமே முடிவானதாக இருக்கும் என்பதாகவும், இந்த ஒப்பந்தத்தில் நிறுவனத்தின் அதிகாரம்பெற்ற அலுவலர் கையொப்பமிடும் போது, அத்தேதியில் சட்டப்பூர்வமாகக் கட்டுப்படுத்துவதாக ஆகும் என்பதாகவும் ஒப்புக் கொள்கிறோம்.

இதற்குச் சாட்சியாக, தரப்பினர்கள், இத்தகைய தாக்கீதுகளை, இங்கே மேலே முதலில் எழுதியுள்ள நாள், மாதம் மற்றும் வருடத்தில் நிறைவேற்றியிருக்கிறார்கள்.

| கடன் வாங்கியவர்களுக்காக | | |
|---|---|---|
| கையொப்பமிடுபவரது பெயர்:<br>திரு நீல்யா சிங்<br>____________________<br>____________________<br>கையொப்பமிடுபவரது பெயர் :<br>……………………………………………………………<br>…………………………………………………………… | ]<br>]<br>]<br>]<br>]<br>] | ………………………………<br>(கையொப்பம்) |
| கூட்டாகக் கடன் வாங்கியவரின் பெயர்:<br>திருமதி நீலிமா ஹஹ் சிங்<br>____________________<br>____________________<br>கையொப்பமிடுபவரது பெயர் : | ]<br>]<br>]<br>] | ……………………………… |

| | |
|---|---|
| …………………………………………………………… | ] (கையொப்பம்)<br>] |
| ஃபுல்லெர்ட்டான் இந்தியா கிரெடிட் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திற்காக<br>கையொப்பமிடுபவரது பெயர்: ……………………………………………… | ]<br>] ………………………………<br>] (கையொப்பம்) |
| | |

கடன் வாங்குபவர் கூட்டாக-கடன் வாங்குபவர் FICCL நிறுவனத்திற்காக அங்கீகாரம்பெற்ற கையொப்பதாரர்

கடன் ஒப்பந்தத்திற்
கான
கடன் சுருக்கப் பட்டியல்

இந்தக் கடன் சுருக்கப் பட்டியலை, …………………… தேதியிட்டதும், கடன் வாங்கியவர்(களுக்கும்), ஃபுல்லெர்ட்டான் இந்தியா கிரெடிட் கம்பெனி லிட். ("FICCL") நிறுவனத்திற்கும் இடையே நிறைவேற்றிய கடன் ஒப்பந்தத்தோடு கடன் இணைத்ததாகவும், அதன் ஒரு உள்ளான பகுதியாக அமைவதாகவும் நிதானிக்க வேண்டும்.

| வ.எண். | விவரக்குறிப்புகள் | | விவரங்கள் |
|---|---|---|---|
| | கடன் பார்வை/கணக்கு எண் | | 81414150000028 |
| 1. | கடன் வாங்கியவர்(களின்) பெயர்<br>கடன் வாங்கியவர்(களின்) முகவரி<br><br>ஸ்டேட்டஸ் | :<br><br><br>: | திரு நீல்யா சிங்<br>குய்குய்ஹி, பெரக்கனி பாலயம், வெள்ளக்கோயில், திருப்பூர், தமிழ்நாடு-637105<br><br>தனிநபர் / சொந்த ஸ்தபானம்/ பிரை.லிட்.கம். / பொது லிட் கம்./கூட்டு ஸ்தாபனம்/LLP / சங்கம் / HUF / அறக்கட்டளை |
| 2. | கூட்டாகச் சேர்ந்து கடன் வாங்கியவரின் பெயர்<br>கூட்டாகச் சேர்ந்து கடன் வாங்கியவரின் முகவரி<br><br>ஸ்டேட்டஸ் | :<br><br><br>: | திருமதி நீலிமா ஹஹ் சிங்<br><br><br>தனிநபர் / சொந்த ஸ்தபானம்/ பிரை.லிட்.கம். / பொது லிட் கம்./கூட்டு ஸ்தாபனம் / LLP / சங்கம் / HUF / அறக்கட்டளை |
| 3. | FICCL நிறுவனக் கிளை அலுவலகம் | : | 8141 8141_Rural_TN_Tir_Vellakoil |
| 4. | கடன் பெறுவதன் நோக்கம் | : | ☐ கல்வி/திருமணம்/மருத்துவம் போன்றவற்றுக்கான தனிநபர்க் கடன்<br>☐ உழைக்கும் முதலுக்கான வணிகக் கடன்<br>☐ சாதனம்/எந்திரம் போன்றவற்றை வாங்குவதற்கு<br>☐ வீடு/கடை/ அலுவலகத்தைக் கட்டுமானம் செய்ய/மேம்படுத்த/விரிவாக்க.<br>☐ ஏற்கெனவே இருக்கிற கடனைத் திருப்பிச் செலுத்த<br>☐ கடை/அலுவலகம்/வீடு/நிலம் வாங்க<br>☐ மற்றவை |
| 5. | அனுமதித்துள்ள கடன் தொகை | : | ரூ .50,000.00/--க்கு மிகாமல்<br>(ரூபாய் ஐம்பது ஆயிரம் மட்டும்) |
| 6. | தெரிவு செய்துள்ள வட்டி விகிதம் | :<br>: | ☐ நிலையான வட்டி வீதம்<br>☐ மாறும் வட்டி விகிதம் |
| 7. | வட்டி வீதம் | | ஃப்ளோட்டிங் வட்டி விகிதம் என்கிற நிலையில் பொருந்துவது:<br><br>________________% வருடத்திற்கு, மாதாந்திர மீதத்தொகை கொண்டு கூட்டு சேர்த்தது.<br><br>ஃப்ளோட்டிங் வட்டி விகிதம் என்கிற நிலையில் பொருந்துவது:<br><br>சில்லரை வணிக முதன்மை கடன் தரும் விகிதம் [ ______%] அதோடு ஏறக்குறைய விரிவு [ _____% ] வருடத்திற்கு, மாதாந்திர மீதத்தொகையில் கணக்கிடுகிறபடி. தற்போது பொருந்துகிற வட்டி விகிதம் வருடத்திற்கு 21.00 சதவீதம். வட்டி விகிதத் திருத்தச் சுழற்சி: 3 மாதங்கள்.<br>(ஒப்பந்தத்தின் விதிகளைத் தொடர்ந்து வட்டி விகிதம் மாற்றத்திற்கு உட்பட்டது). |

| | | | |
|---|---|---|---|
| 8. | கடனைத் திருப்பிச் செலுத்தும் காலம் | : | 12 |
| 9. | பணத்தைத் செலுத்தும் திட்டம் | | |
| | செலுத்தத்தக்க தவணைகளின் எண்ணிக்கை: | | 12 |
| | எவ்வளவு அடிக்கடி திருப்பிச் செலுத்துவது | | |
| | தவணைத் தொகை ("EMI") | | மாதாந்திரம் ரூ. .4,660.00 /- |
| | முதல் தவணை ஆரம்பிக்கும் நாள்: | | 29-04-2016 |
| | கடைசித் தவணைத் தேதி: | | 24-03-2017 |
| | ஒவ்வொரு தவணையின் தவணைத் தேதி | | |
| 10 | முன்னமே சமமாகப் பிரித்த மாதாந்திரத் தவணை வட்டி (PEMII) | : | |
| | PEMII-களின் எண்ணிக்கை | : | |
| | ஒவ்வொரு PEMII-யின் தொகை | : | |
| 11 | முன்கூட்டியே செலுத்திய தவணை குறித்த விவரம் | : | |
| | முன்கூட்டியே செலுத்திய தவணைகளின் எண்ணிக்கை | | |
| | முன்கூட்டியே செலுத்திய தவணைத் தொகைகள் | | |
| | முன்கூட்டியே செலுத்திய தவணையைச் சரிக்கட்டுதல் | | தவணை எண். <br> தவணை தேதி <br> சரிக்கட்டிய தொகை |
| | திருப்பிச் செலுத்தும் முறை | | [ ] PDC [ ] ECS [ ] SI [ ] ECS & PDC [ ] மற்றவை |
| 13. | துவக்கக் கட்டணம் | : | இத்தொகையை விட மிகாத ஒரு தொகை., |
| 14. | ஆவணக் கட்டணம் / கட்டணங்கள் | : | இத்தொகையை விட மிகாத ஒரு தொகை., |
| 15. | கடன் நடவடிக்கைக் கட்டணம் / கட்டணங்கள் | : | அனுமதித்துள்ள கடன் தொகையில் மூன்று (3) சதவீதத்திற்கு மிகாததோர் தொகை |
| 16. | வட்டி விகித மாற்றக் கட்டணம் | : | அனுமதித்துள்ள கடன் தொகையில் ஒரு (1) சதவீதத்திற்கு மிகாததோர் தொகை. |
| 17. | கடன் இரத்து செய்தல் கட்டணங்கள் | : | முன்பே, கடன் வாங்கியவரின் வேண்டுகோளின் பேரில் கடனை வினியோகித்த பிறகு, ஆனால் வினியோகித்தக் காசோலையைக் காசாக்குவதற்கு முன்பே கடனை இரத்து செய்கிறோம் என்றால், ரூ. 1500/- தொகைக்கு மிகாததோர் தொகை. கடன் தொகையைக் காசாக்கிய பிறகு கடனை இரத்து செய்யுமாறு வேண்டிக்கொண்டால், இங்கே குறிப்பிட்டுள்ளபடியான முன்னரே பணம் செலுத்துவதற்கான நிபந்தனைகள் பொருந்தும். |
| 18. | தாமதமாகப் பணம் செலுத்தியதற்கான வட்டி | : | பொருந்துகிற வட்டி விகிதத்திற்கு மேல் நான்கு (4) சதவீதத்திற்கு மிகாததோர் தொகை. |
| 19. | முன்கூட்டியே பணம் செலுத்துவதற்கான கட்டணங்கள் | : | கடனையும், அதோடு சேர்ந்த வட்டியையும் அல்லது அதன் ஏதேனுமொரு பகுதியையும் முன்னதாகவே செலுத்துவதற்குச் செலுத்தத்தக்க முன்னரே பணம் செலுத்துவதற்கான கட்டணங்கள் எதுவுமிருக்காது. |
| 20 | வரிகள் மற்றும் வரிவிதிப்புகள் | : | மேலே சுட்டிக்காட்டியுள்ள அல்லது இக்கடன் ஒப்பந்தத்தில் வேறெங்கேனும் இருக்கிற கட்டணங்கள், சேவை வரி மற்றும் அதன் மீதான திரிவை உட்பட, எவ்வித வரம்புமின்றி, அதன் மீது பொருந்தக்கூடிய அனைத்து வரிகள் மற்றும் சட்டப்பூர்வமான வரி விதிப்புகள் நீங்கலானவையாகும். |
| 21 | மத்தியஸ்த இடம் | : | மும்பை |
| 22 | நீதிமன்ற எல்லை | : | கடன் ஒப்பந்தத்தில் இருக்கிற மத்தியஸ்த வகுப்பிற்கு உட்பட்டு, ____________________ இடத்தில் இருக்கிற சட்ட அதிகாரமுள்ள நீதிமன்றத்திற்கு, இந்த ஒப்பந்தத்திலிருந்து அல்லது இது தொடர்பாக எழுகிற எந்த விஷயத்தின் மீதும், அல்லது சட்ட நடைமுறைகளின் மீதும் தனிப்பட்ட சட்ட எல்லையைக் கொண்டிருக்கும். ஆயினும், இது, வேறு எந்த நீதிமன்றத்திலோ அல்லது சட்ட எல்லையில் இருக்கிற நடுவர் மன்றத்திலோ மனு தக்கல் செய்ய/சட்ட நடவடிக்கைகளை எடுக்க, கடன் கொடுத்தவருக்கு இருக்கும் உரிமையைக் கட்டுப்படுத்தாது. |
| 23. | சொத்து குறித்த சுருக்கமான விவரம் | : | |

கடன் வாங்குபவர் கூட்டாக-கடன் வாங்குபவர் FICCL நிறுவனத்திற்காக
அங்கீகாரம்பெற்ற கையொப்பதாரர்

கடன் வாங்குபவர்(களுக்காக)
கடன் வாங்கியவரின் பெயர்:.
திரு நீல்யா சிங்

…………………………X

……………………………………………………………………………………………

(கையொப்பம்)

கையொப்பமிடுபவரது பெயர்: ………………………………………………………………………

கூட்டாகக் கடன் வாங்கியவரின் பெயர்:
திருமதி நீலிமா ஹஹ் சிங் ……………………………………………………………………………………………

…………………………X
(கையொப்பம்)

கையொப்பமிடுபவரது பெயர்: ………………………………………………………………………

ஃபுல்லெர்ட்டான் இந்தியா கிரெடிட் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திற்காக

கையொப்பமிடுபவரது பெயர்: …………………………X

………………………………………………………………………………………………….. (கையொப்பம்)

கடன் வாங்குபவர் | கூட்டாக-கடன் வாங்குபவர் | FICCL நிறுவனத்திற்காக அங்கீகாரம்பெற்ற கையொப்பதாரர்

டிமாண்டு பிராமிசரி நோட்டு

தேதி: ____________

இடம்: ____________

கோருவதன் பேரில் நான் / நாங்கள், திரு நீல்யா சிங் ____________

திரு நீல்யா சிங் ____________

ஆகியோர் கூட்டாகவும், தனித்தனியாகவும், நிபந்தனையற்ற விதத்திலும், ஃபுல்லெர்ட்டான் இந்தியா கிரெடிட் கம்பெனி லிமிட்டெட் (“FICCL”) நிறுவனத்திற்குப் பணத்தைச் செலுத்திவிட வாக்குறுதியளிக்கிறோம், அதன் பதிவு அலுவலகம் உள்ள முகவரி:
மேக் டவர்ஸ், மூன்றாம் தளம், பழைய எண். 307, புதிய எண். 165, பூந்தமல்லி நெடுஞ்சாலை, மதுரவாயல், சென்னை-600095, தமிழ்நாடு, செலுத்த வேண்டிய தொகை:
50,000.00/- (ரூபாய் ஐம்பது ஆயிரம் மட்டும்)

இத்தொகையை, அதில் பெற்றுக் கொண்ட மதிப்பிற்கு மாதாந்திர மீதத்தொகைகளில் கணக்கிடுகிற, ஆண்டிற்கு 21.00% விகித வட்டியோடு செலுத்த வாக்குறுதியளிக்கிறோம். பணம் செலுத்தக் கோருவதும், பிராமிசரி நோட்டிற்கு மதிப்பளிக்காமல் போவதையும், நிபந்தனையின்றி, திரும்பப் பெற முடியாத வண்ணம் தள்ளுபடி செய்கிறோம்.

இங்கே ஒன்றுக்கும் மேற்பட்ட கையொப்பமிடுபவர்கள் இருக்கிற பட்சத்தில், கையொப்பமிடும் ஒவ்வொருவரது பொறுப்பும், கூட்டாகவும், பலவாறாகவும் இருக்கும்.

கூட்டாகக் கடன் வாங்குபவரின்
கடன் வாங்குபவர்:…………………………………திரு நீல்யா சிங்…………………………………………………………

……………………………………………………………………………………………………………………

| ரூ 1/- ரெவென்யூ ஒட்டுங்கள் கடன் வாங்குபவர் |
|---|

பெயர்: திருமதி நீலிமா ஹஹ் சிங்……………………………………………………………………………………

கூட்டாகச் சேர்ந்து-கடன் பெறுபவர்:………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………

| ரூ 1/- ரெவென்யூ ஒட்டுங்கள் கடன் வாங்குபவர் |
|---|

(குறிப்பு-(x) கையொப்பத்தை ஸ்டாம்பின் குறுக்காகப் போட வேண்டும்)

கடன் வாங்குபவர் | கூட்டாக-கடன் வாங்குபவர் | FICCL நிறுவனத்திற்காக அங்கீகாரம்பெற்ற கையொப்பதாரர்

‘நேஷனல் எலெக்ட்ரானிக் ஃபண்டு டிரன்ஸ்ஃபெர்’ வசதி வாயிலாகக் கடன் கொடுத்தனுப்புவதற்கான விண்ணப்பப் படிவம்

தேதி: [ ]

தேதி வரை
ஃபுல்லெர்ட்டான் இந்தியா கிரெடிட் கம்பெனி லிமிடெட்

8141
8141_Rural_TN_Tir_Vellakoil

பொருள்: ‘நேஷனல் எலெக்ட்ரானிக் ஃபண்டு டிரன்ஸ்ஃபெர்’ திடம் வாயிலாக மின்னணு முறையில் நிதிப் பரிவர்த்தனை செய்து, கடனைக் கொடுத்தனுப்புதல்

பார்வை கடன் விண்ணப்பப் பார்வை எண்.:

\கடன் கணக்கு எண்:

அன்புள்ள அய்யா,
எனது / எங்களது கடன் விண்ணப்பம் சம்பந்தமாக, நான் / நாங்கள் இதன் மூலமாக நிபந்தனையற்ற முறையில், அனுமதித்துள்ள கடன் தொகையான ரூ ______________ /- ________________________________________ தொகையை, முன் EMI வட்டி, ஆவணமாக்கல் கட்டணங்கள் & நடவடிக்கைக் கட்டணங்கள் ஆகிவற்றைப் பின்வரும் விவரங்களுக்குத் தக்கபடிக் கழித்துக் கொண்ட பிறகு, நேரடியாகச் செலுத்தி விடுவதற்கு, ஃபுல்லெர்ட்டான் இந்தியா கிரெடிட் கோ.லிட் ("FICCL") நிறுவனத்திற்கு அறிவுறுத்துகிறோம்:-

பயனாளியின் விவரங்கள்

| | | |
|---|---|---|
| பயனாளியின் வங்கிப் பெயர் | : | |
| பயனாளியின் வங்கிக் கணக்கு பெயர் | : | |
| பயனாளியின் வங்கிக் கணக்கு # | : | |
| பயனாளியின் வங்கிக் கணக்கு வகை | : | ☐ சேமிப்பு ☐ நடப்பு ☐ ரொக்க வரவு |
| பயனாளியின் வங்கிப் பணம் செலுத்துமிடம் | : | |
| பயனாளியின் வங்கிக் கிளை IFSC குறியீடு | : | |
| MICR குறியீடு | : | |
| செலுத்த வேண்டிய தொகை | : | |

நாங்கள் பின்வருமாறு பிரகடனம் செய்கிறோம்:

- மேலே கொடுத்துள்ள விவரங்கள், எனது/எங்களது அறிவிற்கெட்டிய வரையில், உண்மையானவையும், சரியானவையும், முழுமையானவையுமாக இருக்கின்றன என்றும். பணம் செலுத்துவதற்கான அறிவுறுத்தலில் கொடுத்துள்ள விவரங்களின் துல்லியத்தன்மைக்கு நான் / நாங்களே பொறுப்பு.
- FICCL நிறுவனம் நன்னம்பிக்கையிலும், மின்னணு நிதிப் பரிவர்த்தனைக்கான இணக்க அறிவுறுத்தல்களிலும், பணம் செலுத்துவதற்கான அறிவுறுத்தலை நிறைவேற்றியிருந்த பட்சத்தில், FICCL நிறுவனம் நிறைவேற்றுகிற பணம் செலுத்துவதற்கான அறிவுறுத்தல் எதற்கும், நான்/நாங்கள் கட்டுப்பட்டு நடப்போம்.
- மேற்சொன்ன பயனாளிக்குச் சாதகமாகக் கடனைக் கொடுத்தனுப்புவது, எனக்கு எங்களுக்குக் கொடுத்த மற்றும் பெற்ற கடனுக்கானதாக இருக்கும் என்றே நிதானிப்போம். மேற்படி பயனாளி பணம் பெறுபவருக்குச் சாதகமாக கடன் தொகையைக் கொடுத்தனுப்புவது, கடன் வசதி தொடர்பாகவுள்ள எனது/ எங்களது கடமையைப் பாதிக்காது.
- முழுமையற்ற தகவல்களில் இருந்து, கடத்துவதில் அல்லது கொடுபோய்க் கொடுப்பதில் தாமதம் அல்லது மின்னணுச் செய்திகள் போய்ச்சேராமல் இருத்தல் அல்லது கடத்துவதில் அல்லது அவற்றைக் கொண்டுபோய்ச் சேர்ப்பதில் ஏற்படுகிற தவறு, விடுபடுதல் அல்லது பிழை அல்லது கட்டுப்பாட்டிற்கு அப்பால் ஏற்படுகிற நிகழ்வு எதாலும் எழுகிற அல்லது அவற்றால் விளைகிற எவ்விதச் சேதம் அல்லது இழப்பிற்கும் FICCL நிறுவனம் பொறுப்பாகாது. மேலுள்ளவை இருந்த போதிலும், Fullerton India நிறுவனத்தின் தரப்பில் ஏற்பட்ட அலட்சியம் எதன் காரணமாகவும், பணம் கொடுக்கச் சொன்ன அறிவுறுத்தலைத் தொடர்ந்து நிதிப் பரிவர்த்தனையை நிறைவு செய்வதில் தாமதம் எதுவும் ஏற்படுகிற நிகழ்வில், தாமதமாகப் பணப்பட்டுவாடா செய்கிற நிலையில், தாமதமான காலத்திற்கு வங்கி வட்டி விகிதத்தில் வட்டியைக் கொடுக்கிற அளவிற்கு மட்டுமே Fullerton India நிறுவனத்திற்குப் பொறுப்பு இருக்கும்.
- நான் / நாங்கள் இந்த விண்ணப்பப் படிவத்தில் சரியல்லாத தகவல்களைக் கொடுத்ததன் காரணமாக, பணம் வரவாகாமல் இருப்பது எதற்கும் அல்லது செலுத்திய தொகையைத் தவறான பயனாளிக்கு வரவு வைப்பதற்கு Fullerton India நிறுவனம் பொறுப்பாகாது.
- கணக்கில் வரவு வைப்பதற்குப் பயனாளி வங்கி கட்டணங்களை விதித்து, அதையே செலுத்திய தொகையிலிருந்து பிடித்தம் செய்து கொள்ளலாம்.

அனைத்து 'நேஷனல் எலெக்ட்ராணிக் ஃபண்ட் டிரான்ஸ்ஃபர் (i'NEFT') அறிவுறுத்தல்கள் யாவும், திரும்பப் பெற முடியாதவை என்றும், NEFT வாயிலாகப் பணம் செலுத்துவது சம்பந்தமாக 'ஸ்டாப் பேமெண்ட்' அறிவுறுத்தலைக் கொடுப்பதற்கான வசதி எதுவும் இல்லை என்பதையும் நான் புரிந்து கொள்கிறேன்.

நன்றி.
தங்கள் உண்மையுள்ள

| கடன் வாங்கியவர் & கூட்டாகச் சேர்ந்து கடன் வாங்கியவர்களின் பெயர் | | கையொப்பம் |
|---|---|---|
| பெயர்: திரு நீல்யா சிங் | | ……………………………<br>(கையொப்பம்) |
| பெயர்: திரு நீல்யா சிங் | | ……………………………<br>(கையொப்பம்) |

FICCL நிறுவனத்திற்காக

கடன் வாங்குபவர் கூட்டாக-கடன் வாங்குபவர் அங்கீகாரம்பெற்ற கையொப்பதாரர்

<u>கடன் வாங்குபவர் / கூட்டாகச் சேர்ந்து கடன் வாங்குபவர் / உத்திரவாதமளிப்பவர்கள் கல்வியறிவில்லாதவர்களாக அல்லது பார்வையற்றவராக இருக்கி நிலையில் அல்லது கடன் ஆவணங்களை வாய்மூல மொழியில் நிறைவேற்றுகிற நிலையில் செய்கிற பிரகடனம்</u>

தேதி ____________

ஃபுல்லெர்ட்டான் இந்தியா கிரெடிட் கம்பெனி லிமிடெட்

________________________

அன்புள்ள அய்யா,

…………………கடன் தொக ரூ……………………-ஐ (i) …………… நீல்யா சிங்……………………………………………………………………………………அவர்களுக்கும்

(ii)திருமதி நீலிமா ஹஹ் சிங்……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………

அவர்களுக்கும், ஃபுல்லெர்ட்டான் இந்தியா கிரெடிட் கம்பெனி லிமிடெட் ("FICCL") அனுமதித்துள்லது - தொடர்பாக.

நான் / நாங்கள், தேதியிட்ட அனுமதிக் கடிதத்தையும், தேதியிட்டக் கடன் ஒப்பந்தத்தையுமே குறிப்பிடுகிறோம், இவற்றின் வாயிலாக எங்களுக்கு ஒரு **M415** கடன் / வசதியை, தொகை ரூ.______________(ரூபாய் ஐம்பது ஆயிரம் மட்டும்) வரையில் FICCL நிறுவனம் மூலமாக, சொல்லியுள்ள அனுமதிக் கடிதம்/ கடன் ஒப்பந்தத்தில் இருக்கிற விதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி அனுமதித்திருக்கிறார்கள்.

நான்/நாங்கள் இதன்மூலம், நான்/நாங்கள் **கல்வியறிவில்லாதவர்கள்/ஆங்கிலக் கல்வியறிவில்லாதவர்கள் / பார்வையற்றவர்கள் என்றும், மேற்சொன்ன **<u>50,000.00 /-</u>** தேதியிட்ட அனுமதிக் கடிதம் மற்றும் தேதியிட்டக் கடன் ஒப்பந்தத்தின் அனைத்து விதிகள் மற்றும் நிபந்தனைகள், பிராமிசரி நோட், உத்திரவாதக் கடிதங்கள், மற்றும்

*நிறுவனம் வரையறுத்துள்ள மற்ற அனைத்துக் கடன் ஆவணங்கள் மற்றும் பிரகடணங்கள் மற்றும் இந்தக் கடிதத்தின் உறுதிப்படுத்தல்கள் அனைத்தையும், ***திரு. ……………………………………………………………அவர்கள் எனக்கு/எங்களுக்குப் படித்துக் காட்டி, விளக்கிச் சொல்லியிருக்கிறார்கள், அவர் இந்தப் பொறுப்பேற்பு ஆவணத்தின் ஓரத்தில் கையொப்பமிட்டிருக்கிறார் என்பதையும், மேற்சொன்ன ஆவணங்களை, அவற்றில் குறிப்பிட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகள் அனைத்தையும் முழுமையாகப் புரிந்து கொண்ட பிறகே, நான்/நாங்கள் நிறைவேற்றியிருக்கிறோம் என்பதையும் பிரகடனம் செய்து உறுதி செய்கிறோம்.*

*நான் / நாங்கள் இதன் மூலம் மேற்கொண்டும் பிரகடனம் செய்து உறுதி செய்வதாவது, சொல்லியுள்ள கடன் தொகையான ரூ. ……………………………………………… (ரூபாய் ஐம்பந்து ஆயிரம் மட்டும்)____________________________________-ஐ அனுமதிப்பதற்கான அனைத்து விதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் கடன் ஆவணங்கள், பிணைய ஆவணங்கள் மற்றும் மற்ற நிறுவனம் வரையறுக்கிற அனைத்து ஆவணங்களும், சொல்லியுள்ள கடனின் கீழுள்ள பொறுப்புகளைத் தீர்க்கும் வரைக்கும், என்னை/எங்களைக் கட்டுப்படுத்துவதாக இருக்கும்.*

***பொருந்தாத வார்த்தைகளை அழித்து விடுங்கள்*
****FICCL நிறுவனப் பணியாளர்*

*கடன் வாங்குபவர்/கூட்டாகச் சேர்ந்து கடன் வாங்குபவர் / உத்திரவாதமளீப்பவரின் பெயர் & முகவரி அல்லது இடது/வலது பெருவிரல் ரேகை*

*பெயர் & கையொப்பம் (ஃபுல்லெர்ட்டான் பணியாளர் & கடன் வாங்கியவர் / கூட்டாகச் சேர்ந்து கடன் வாங்கியவர் / உத்திரவாதமளித்தவருக்குக் கடன் ஆவணங்கள் அனைத்தின் விதிகளையும் விளக்கிச் சொன்னவர்)*